
கல்கி

KALKI 18-5-75 60 காசு




VOLTAS
"அதிக இட வசதி, குறைந்த மின்சக்தி செலவு"
என்கிறார் வோல்டாஸ் ஓபல் 160 உபயோகிக்கும் ஒருவர்
1. இந்த வகையிலேயே மிக அதிக இடவசதி உள்ளது.
2. 24% குறைவான மின்சக்தி செலவு.
3. 35 லிட்டர்கள் விசாலமாக இடம்.
4. 6 குளிர்பானக் குப்பிகளுக்கு 30 லிட்டர்களில் குளுமை தரும் விசேஷ டிரே.
தலைசிறந்த இந்த 4 அம்சங்கள் தவிர... இந்த உன்னத ஃப்ரிஜ்ஜில் உங்கள் நலனை உள்ளத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட பல அம்சங்கள்...வோல்டாஸுக்கு உங்களை நன்றி சொல்லத் தூண்டும். அவை உங்கள் உள்ளத்தையும் குளிரச் செய்யும்.
வோல்டாஸ் ஓபல்—100 லிட்டர் ஃப்ரிஜும் கிடைக்கிறது
தன்னிகரற்ற 4 அம்சங்கள்
வோல்டாஸ் ஓபல் 160
உங்கள் வசதிக்கெனவே உருவான ஃப்ரிஜ்
CMV-126-182 TAM
வோல்டாஸ் லிமிடெட், பம்பாய் • கல்கத்தா • சென்னை • புது டில்லி • பெங்களூர் • லக்னௌ
பாட்னா • அகமதாபாத் • சிகந்தராபாத் • கொச்சி • கான்பூர் • ஜாம்ஷெட்பூர்.
உங்கள் பகுதியில், எங்கள் அதிகாரம் பெற்ற விற்பனையாளர் யாரென அறிய அருகாமையிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.


ஓரியண்ட்
ORIENT
வலிமை மிக்கது
ஓசையற்றது
நம்பிக்கை வாய்ந்தது
ஓரியண்ட் மின்விசிறிகள் நவீன மோஸ்தரில் கட்டப்பட்டுள்ள வீடுகள், ஆபீஸ்கள் மற்றும் அலுவலகங்களின் எழிலுக்கு ஏற்றவாறு இணைந்து பரிமளிக்கும் வகையில் அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளன. உங்களுடைய குறிப்பிட்ட தேவைகளுக்கு தகுந்தவாறு பற்பல விதங்களில் கிடைக்கின்றன—ஸீலிங், டேபிள், டெஸ்க், ஸ்டாண்ட், ஆல் பர்ப்பஸ் மற்றும் எக்ஸ்ஹாஸ்ட் மாடல்கள்.
இந்தியாவின் மிகச் சிறந்த அனுபவமிக்க மின் விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் எல்லாவிதமான ஓரியண்ட் மின் விசிறிகளும் அவற்றின் ஈடிணையற்ற சிறப்புத் தன்மைகளுக்கு இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பெயர் பெற்றவை.
எல்லா மின் விசிறிகளும் இரண்டு வருட உத்தரவாதம் உள்ளவை.
மிக அதிக அளவில் விற்பனையாகும் பெருமை மிக்க திணுசுகள்.
டெஸ்க் மின்விசிறி
சூப்பர் டீலக்ஸ் டேபிள் மின்விசிறி
டீலக்ஸ் டேபிள் மின்விசிறி
ஆல் பர்ப்பஸ் மின்விசிறி
ஸ்டாண்ட் மின்விசிறி
ஓரியண்ட்
விசிறி
உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படும் பெருமை
ஓரியண்ட் விசிறி
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், 6, கோர பீசி லேன், கல்கத்தா-54
தொழிற்சாலைகள்: கல்கத்தா, பரிதாபாத்

CC-O-4/73

கல்கி

ஆனந்த வைகாசி 4

மே 18, 1975


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே! சம்பவங்களும் கற்பனையே.

அட்டை வண்ணப்படம்:

கோடையில் உல்லாசச் சவாரி!

சந்தாமியான்







A fairness cream that works without bleaching



Never before in the world has there been a product that has been able to effect fairness without bleaching. Till now, trying to make the skin fairer has always been a chancy business. Using a bleach to lighten the skin is known to be harmful, particularly if used frequently, owing to its harsh characteristics.

Fair & Lovely is a scientific breakthrough that works two ways

1. It has a vitamin that works from the inside

The vitamin enters the skin as you apply the cream. You can feel it working as you smooth it in . . . gently reversing the spreading of skin-darkening. With regular application through a period of six weeks you will notice the difference. And so will others.

2. It has sun screen agents to protect from outside

Fair & Lovely protects the skin by filtering out those sun rays that cause skin darkening.

Fair & Lovely a fairness cream . . . and more

Use it as a vanishing cream under make-up, at least once a day, twice for best results. Regular use of Fair & Lovely will ensure that you keep your complexion as fair as you want it to be.

Fair & Lovely – the gentle way to a fairer skin

A Quality product of Hindustan Lever

LINTAS.FALOV.4-140

ஜனநாயகமும் தேர்தல் முறையும்

க. சந்தானம்

இப்பொழுது ஜனநாயகம் என்ற சொல்லுக்குப் பிரதிநிதி நாயகம் என்றே பொருளாகும். முன் காலத்தில் ஏதென்ஸ், ரோமாபுரி போன்ற சில நகரங்களிலும், பாரதத்தில் சில கிராமங்களிலும் நேரடியான ஜனநாயக முறை அமுலில் இருந்தது. சமூகத்தின் எல்லாப் பிரச்னைகளையும் மக்கள் பொதுக்கூட்டங்களிலேயே தீர்மானம் செய்தனர். சோக்ரதருக்கு விஷம் கொடுத்து மரண தண்டனை இவ்விதமே விதிக்கப்பட்டது. ஆனால் அந்த நேரடியான ஜனநாயகத்தில் எல்லா மக்களுக்கும் பங்கெடுத்துக் கொள்ள உரிமை இருக்கவில்லை. சில மேல் ஜாதியார்களின் குடும்பத் தலைவர்களின் கூட்டத்தினிடமே அரசியல் அதிகாரம் இருந்தது.

இக்காலத்தில் ஒரு தேசத்திலோ, பெரும் நகரத்திலோ வயது வந்தவர் அனைவரும் கூடி ஆட்சி புரிவது முற்றிலும் சாத்தியமில்லை என்று கூறத் தேவையில்லை. ஆதலால் பிரதிநிதிகள் மூலமே மக்கள் ஆட்சி செய்ய முடியும். அதனையே ஜனநாயகம் என்று கூறுவதில் தவறில்லை. ஆயினும், பிரதிநிதி நாயகம் எப்பொழுதும் நாட்டின் பெரும்பாலான மக்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் அனுசரித்தே நடைபெறும் என்று கூற முடியாது. சிறுபான்மையோரின் ஆதரவின் பேரில் ஒரு கட்சி சட்டசபைகளில் பெரும்பான்மை பெற்று ஆட்சி புரிவதை நாம் அடிக்கடி காண்கிறோம். ஒரு தேர்தலுக்குப்பின் நாலைந்து வருஷங்களில் ஆளும் கட்சியின் மனப்பான்மை மாறி, மக்களின் விருப்பத்துக்கு விரோதமான முறைகளை ஏற்று, விருப்பமில்லாத வரிகளை விதித்து, மக்களின் அருவருப்பை உண்டாக்கும் ஊழல்களில் ஈடுபடுவதையும் கண்டிருக்கிறோம். ஆதலால் பிரதிநிதித்துவ நாயகத்தை உண்மையான ஜனநாயகமாக நடைபெறுமாறு கண்காணித்தல் மிகவும் அவசியமாகும். தற்சமயம் திரு ஜயப்பிரகாசரின் இயக்கத்துக்கு ஆதரவிருப்பது இப்பொழுதிருக்கும் மத்திய, மாநில அரசாங்கங்கள் உண்மையான ஜனநாயகங்களாக ஆட்சி புரியவில்லை என்பதே காரணம். பிரதிநிதிநாயகத்துக்கும் ஜனநாயகத்துக்கும் உள்ள முரண்பாடுகளைக் குறைக்கவும், பிணக்குகளைத் தீர்க்கவும் சில ஏற்பாடுகளும், செயல் முறைகளும் மிகவும் அவசியமானவை. அவற்றில் தேர்தல் முறையே முதன்மையானது.

தேர்தல் முறையின் முக்கிய அம்சங்கள்: 1. வாக்காளர்கள் ; 2. தொகுதிகள்; 3. அரசியல் கட்சிகள்; 4. வாக்கெடுப்பு ஏற்பாடுகள்.


நமது அரசியல் சாஸனப்படி இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண் பெண்களும் வாக்காளர்களாவார்கள். இந்த வயதைப் பதினெட்டுக்குக் குறைக்கக் கூடாதா என்ற பிரச்னை உலவி வருகின்றது. பதினெட்டு வயதில் அரசியல் பிரச்னைகளை உணரவும், அபேட்சகர்களின் தராதரங்களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் வேண்டிய மன வளர்ச்சி உண்டாகாது என்று வாதிக்க முடியாது. பல நாடுகளில் இந்த வயதையே வாக்காளர்களுக்கு விதித்திருக்கின்றனர். பாரதத்தில் இதற்கு எதிராக இரண்டு காரணங்களைக் கூறலாம். அதில் முக்கியமானது, நமது கலாசாலைகளில் பெரும்பாலான மாணவர்கள் பதினெட்டிலிருந்து இருபத்தொரு வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு வாக்குக் கொடுத்தால், கலாசாலைகளில் அரசியல் கட்சிகளுக்கு இடம் கொடுக்க வேண்டும், அரசியல் பிரசாரத்தை அனுமதிக்க வேண்டும், மாணவர்கள் அரசியல் சூழலில் மாட்டிக் கொண்டு தங்கள் கல்வியில் கவனம் செலுத்த மாட்டார்கள். வாக்கில்லாமலேயே கலாசாலைகளில் பலவித இயக்கங்களும், குழப்பங்களும் பெருகி வருகின்றன. இரண்டாவது காரணம் வாக்காளர் வயதைப் பதினெட்டுக்குக் குறைத்தால் மூன்று கோடிக்கு மேல் வாக்காளர் எண்ணிக்கை கூடிவிடும். நமது இளைஞர்களுக்கு வாக்குரிமை மறுக்க இவை போதிய காரணங்கள் என்று கூறமாட்டேன். மற்றும் அவசியமான சீர்திருத்தங்கள் செய்த பின் சில கட்டுப்பாடுகளுடன் வயது குறைப்பது நியாயமாகும்.

கல்கி

மலர் 34

இதழ் 42

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



வாக்காளர்களைப் பற்றி இரண்டாவது பிரச்னை, வாக்கு, உரிமையா கடமையா என்பதே. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா உள்படப் பல ஜனநாயக நாடுகளில் இது உரிமையாகவே கருதப்படுகிறது. அதாவது வாக்காளர் விரும்பினால் வோட்டுச் சாவடிக்குச் சென்று தமது வாக்கைப் பயன்படுத்தலாம். விருப்பம் இல்லாவிடில் வீட்டிலேயே இருந்துவிடலாம். இதன் பயனாக, வாக்காளர்களை வோட்டுச் சாவடிக்கு அழைத்துப் போவதே அபேக்ஷகர்களின் பெரும் தொல்லையாகிறது. அதற்காகப் பலவித ஆசை காட்டியும், ஆங்காங்கு பணமாகவோ வேறு விதமாகவோ லஞ்சம் கொடுத்தும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். அப்படியும் சாதாரணமாக 100க்கு 50, 60 பேர்களே பெரும்பாலான தொகுதிகளில் வாக்குப் போடுகின்றனர்.

வாக்கை ஓர் உரிமையாகக் கருதுவது உண்மையான ஜனநாயகமல்ல. அது கடமையாகவே கருதப்பட வேண்டும். எந்த வாக்காளனும் தனது அரசாங்கத்தில் தனக்கு அக்கறையில்லை என்று எண்ணுவது குற்றமாகக் கருதப்படவேண்டும் என்று பல அரசியல் ஞானிகள் கருதுகின்றனர். இதன்படி ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரேஸில் தேசங்களில் வாக்கை உபயோகிப்பது கட்டாயக் கடமையாக்கப் பட்டிருக்கிறது. நோய் முதலிய தகுந்த காரணமில்லாமல் வாக்குப் போடாமலிருக்கும் வாக்காளர்கள் அபராதம் விதிக்கப் படுகிறார்கள்.

இம்முறை நமது நாட்டுக்கு மிகவும் அவசியமென்று 1965ல் மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பஞ்சாயத்துத் தேர்தல் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அது பின்வருமாறு கூறியிருக்கிறது. 'இங்கிலாந்து போன்ற தேசங்களில் முதலில் வாக்கு சில சொத்துடையவர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கே வழங்கப் பட்டிருந்தது. பொதுமக்கள் பல ஆண்டுகள் கடுமையாகப் போராடி வாக்கைப் பெற்றனர். அதனால் வாக்கின் பெருமையைக் கட்டாயமின்றியே அறிகின்றனர். பாரதத்திலோ எவ்வித முயற்சியுமின்றி எல்லா வயது வந்தவர்களும் ஒரே சமயத்தில் வாக்கைப் பெற்று விட்டனர். ஆதலால் வாக்கின் பெருமையையும், முக்கியத்துவத்தையும் அவர்களுக்குப் போதிக்க விசேஷ முயற்சிகள் வேண்டும்.' முதலில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், பின்னர் மாநில மத்திய சட்டசபைகளுக்கும் வாக்குப் போடுதல் கட்டாயமான கடமையாகச் செய்யப்பட வேண்டும் என்று அக்கமிட்டி சிபாரிசு செய்தது. ஊழல் ஒழிப்புக் கமிட்டியின் சிபாரிசுகளைப் போலவே, இக்கமிட்டியின் சிபாரிசுகளும் அறிக்கையிலேயே தூங்குகின்றனவென்று கூறத் தேவையில்லை. வாக்களிப்பதைக் கட்டாயமாகச் செய்து ஆஸ்திரேலியாவில் போல் ஒவ்வொரு தொகுதியிலும் 90, 95 சதவீதம்

வாக்களிக்கப்பட்டால் பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் உள்ள உறவு நெருங்கும் என்பதில் சந்தேகமில்லை. இதைத் தேர்தல் முறையில் ஒரு முக்கிய சீர்திருத்தமாக ஏற்க வேண்டும். இதனால் பிரதிநிதித்துவம் வலுப்படுவதோடு அபேட்சகர்களின் சிரமம் பாதி குறைந்துவிடும்.

இங்கிலாந்தில் நடப்பது போலவே, நம் நாட்டிலும் ஒரு தொகுதிக்கு ஒரு பிரதிநிதி என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது நிர்வாகத்துக்கு எளிதாகும். ஆனால், ஜாதி வித்தியாசங்களுக்கு அதிக இடம் கொடுக்கிறது. பலமான கட்சிகளுக்கு ஆதரவுள்ள வாக்காளர்களின் ஈவுக்கு அதிகமாகவும் சிறிய கட்சிகளுக்கு அதற்குக் குறைவாகவும் பிரதிநிதித்துவம் கொடுத்து ஜனநாயகத்தை ஓரளவு திரித்துவிடுகிறது. மேலும் ஒரு தொகுதியில் நான்கைந்து அபேட்சகர்கள் இருந்தால் அதிக வாக்குகள் பெறும் அபேட்சகர் 25, 30 சதவிகிதமே ஆதரவு கிடைத்தாலும் அவர் பிரதிநிதியாகிறார். இது மிகுந்த அநியாயம் என்பதில் சந்தேகமில்லை. இரண்டு பெரும் கட்சிகள் இருக்கும் நாடுகளில் ஓரளவு பாதகமில்லாமல் இருந்தாலும் நமது நாட்டில் இந்த அநியாயத்துக்கு ஒரு பரிகாரம் தேடியே தீரவேண்டும். இதற்குப் பல முறைகள் இருக்கின்றன. அவற்றை விவரித்தால் இக்கட்டுரை மிதமிஞ்சி நீண்டுவிடும். எனது அபிப்பிராயத்தில் மிகவும் எளிய முறை எதுவென்றால், தேர்தலில் வாக்களித்தவர்களில் ஐம்பது சத விகிதத்துக்குக் குறையாத வாக்குப் பெற்றவர்களையே பிரதிநிதிகளாகக் கருத வேண்டும். ஒருவரும் பாதி வாக்குகள் பெறாவிட்டால், அதிகப்படி வாக்குகள் பெற்ற இரண்டு அபேட்சகர்களுக்கு மறுபடியும் தேர்தல் நடத்த வேண்டும். அப்பொழுது ஒருவருக்கு நிச்சயம் ஐம்பது சதத்துக்கு மேல் வாக்குகள் கிடைக்கும். குறைவான வாக்குகள் பெற்ற அபேட்சகர்களுக்கு வாக்களித்தவர்கள் புனராலோசனை செய்து முதலிருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க அவகாசம் உண்டாகும். இதன் மூலம் பிரதிநிதித்துவத்தை ஓரளவு வலுப்படுத்தக் கூடும்.

அரசியல் கட்சிகள் இல்லாமல் பிரதிநிதித்துவ நாயகம் சரிவர நடைபெறாது. ஆனால் எவ்வித ஒழுங்குமின்றி அரசியல் கட்சிகள் அமைக்கப்படுவதும், அவற்றில் எந்தச் சமயத்தில் எவர், எத்தனை பேர்கள் அங்கத்தினர்கள் என்று சரிவரக் கணக்கில்லாமலும், தேர்தல் காலத்தில் ஒரு கட்சியின் பெயரால் சில தலைவர்கள் அபேட்சகர்களை நிறுத்துவதும் வழக்கமாக இருக்கிறது. மேலும் கட்சியின் பெயராலும் கட்சித் தலைவர்கள் தத்தம் இஷ்டப்படி பணம் சேகரிப்பதும் செலவு செய்வதும் கணக்கற்ற ஊழல்களுக்கு இடமளிக்கின்றன. மேற்கு ஜெர்மனியில் இருப்பது போல் இங்கும் அரசியல் கட்சிகள் ஒழுங்கு முறையில் நடைபெறவும் அங்கத்தினர்கள் ஜாபிதா சரிவர வைத்துக் கொள்ளவும், கட்சிக்காக வசூல் செய்யும் நிதிக்கும் அதனைச் செலவழிப்பதற்கும் சரியான கணக்குகள் வைத்துத் தணிக்கை செய்வதற்கும் சட்டம் செய்யப்பட வேண்டும். அந்தச் சட்டத்தை அமுல் செய்வது தேர்தல் கமிஷனின் ஒரு முக்கிய கடமையாக வேண்டும்.

கடைசியாக வாக்கெடுத்து ஏற்பாடுகள் திறம்படவும், அரசாங்க ஊழியர்களும் காவல் துறை சேவகர்களும் எக்கட்சிக்கும் உதவாமல், நடுநிலையாக இருப்பதற்குக் கடுமையான விதிகள் செய்யப்பட வேண்டும். கட்டாய வாக்களிப்பும் பெரும்பாலான வாக்குப் பெறாதவர்களுக்கு இரண்டாம் தேர்தலும் ஏற்பட்டால் மற்ற விஷயங்கள் பெரிதும் எளிதாகி விடும். சமீபத்தில் திரு ஜயப்பிரகாசரால் நியமிக்கப்பட்ட தேர்தல் சீர்திருத்தக் கமிட்டியின் சிபாரிசுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளத் தகுந்தவை. பொது மக்கள் தேர்தல் முறைப் பிரச்னைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தால் அது ஒன்றே பிரதிநிதி நாயகம் ஜனநாயகத்தை நெருங்குவதற்குப் பெரும் சாதகமாகும்.

ராஜாஜி சிந்தனை

தமிழின் அழகு

தனக்கே தெரியாது தன்னுடலின் அழகு; பிறருக்குத்தான் தெரியும். அதிக சிரமப்பட்டு நிலைக் கண்ணாடி வைத்துப் பார்த்துக் கொண்டாலும் தன் அழகைச் சரியாகத் தெரிந்து கொள்வது துர்லபம்.

இவ்வாறே தமிழ் மொழியின் அழகு தமிழருக்குத் தெரிவதில்லை. தமிழ் பேசுவதிலும், படிப்பதிலும், எழுதுவதிலும் தன்னையறியாமல் தமிழனுக்கு உண்டாகும் உள்ளுவப்பேதான் தமிழின் அழகுப் பிரமாணம். அந்த அழகை வெளித் தோற்றமாகத் தமிழருக்கு எடுத்துக் காட்டுவது கஷ்டம்.



CMGF-41-104 TM

முருகப் பெருமான் (10)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஸத் — சித் — ஆனந்தம் என்பார்கள். அது தான் பரம்பொருள். 'ஸத்' (இருப்பு) பரமேசுவரன் : 'இருக்கிறோம்' என்று உணர்ந்து சக்தியைக் காட்டும் 'சித்' அம்பாள். இப்படி உணர்ந்ததில் பேரானந்தம் பிறக்கிறது. இந்த ஆனந்தமே சுப்ரமண்யர். சிவம் என்கிற மங்களமும், அம்பாள் என்கிற காருண்யமும் கலந்த பரம உத்கிருஷ்டமான ஸ்தானம் அவர். சச்சிதானந்தத்தையே 'சோமாஸ்கந்தர்' என்று தமிழ் நாட்டுச் சிவாலயங்களிலெல்லாம் வைத்து உத்ஸவம் நடத்துகிறோம். தமிழ்நாட்டில் இங்கே பிள்ளையாரை விட்டு, ஸ்கந்தனையே குமாரனாக அப்பா அம்மாவுக்கு மத்தியில் வைத்திருக்கிறோம். உமா, ஸ்கந்தன் இருவரோடு சேர்ந்தவர் ஸோமாஸ்கந்தர்.

ஸ்கந்த நாம விசேஷம் இங்கு தெரிகிறது. ஸ்காந்த மகாபுராணம் — ஒன்றரை லட்சம் சுலோகம் கொண்டது - தான் உலகத்திலேயே பெரிய கிரந்தமாக இருக்கும்.

இந்தப் புராணம், குமாரோத்பத்தியைச் சொல்லும் ராமாயணம், குமார சம்பவம் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் இருப்பவை. வட தேசத்திலும் முருகனுக்கு உள்ள பெருமைக்கு இதெல்லாம் அடையாளம். 'குமாரகுப்தன்' என்கிற மாதிரி பல ஆரியாவர்த்த ராஜாக்கள் இவர் பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது பாகிஸ்தானுக்குப் போய்விட்ட எல்லை மாகாணத்தில் (North west Frontier) கண்டெடுத்த மிகப் பழைய குஷானர் கால நாணயங்களில் மயூர வாகனரான ஸ்கந்தரின் ரூபம் பொறித்திருக்கிறது. வட புலத்தின் பல ராஜ வம்சங்கள் அவரை ''ப்ரம்மண்ய குமாரர்'' என்று குலதெய்வமாகக் கொண்டிருந்திருக்கின்றன. அந்த ராஜாக்கள் தங்களையும் 'ப்ரம்மண்யர்'கள் என்றே சொல்லிக் கொள்வார்கள். 'ஸுப்ரமண்ய'த்தில் முதல் எழுத்தைத் தள்ளினால் 'ப்ரம்மண்ய'ந்தானே நிற்கிறது? இங்கே, தமிழ் நாட்டில் வேதத்துக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் ரொம்பவும் தொண்டு செய்திருக்கிற காஞ்சிப் பல்லவ ராஜாக்களும் தங்களை சிவபக்தியில் சிறந்த 'பரம மாஹேச்வரர்'களாகவும், விஷ்ணு பக்தியில் சிறந்த 'பரம பாகவதர்'களாகவும் சொல்லிக் கொள்வதோடு, ஸ்கந்தோபாஸனையை விசேஷமாகச் செய்த 'பரம ப்ராம்மண்யர்'களாகவும் வர்ணித்துக் கொண்டிருக்கிறார்கள். சாஸனங்களில் இவற்றைப் பார்க்கிறோம்.

எல்லாவற்றுக்கும் முற்பட்ட வேதத்தில், ரிக் வேத பஞ்ச ருத்ரத்தில், ஈசுவரனைத் துதிக்க வந்த இடத்தில், 'குமாரனை வணங்குகிற பிதா' என்று இவருடைய பெருமையைச் சொல்வது அதி விசேஷம். சாந்தோக்ய உபநிஷத்தில் ஸனத் குமார— ஸ்கந்தரைப் பற்றி* வருகிறது. பாணினியின் வியாகரணம், அதற்குப் பதஞ்சலி செய்த மகாபாஷ்யம் இவற்றில் ஸ்கந்தன், விசாகனைப் பற்றி நிறையப் பிரஸ்தாவம் வருகிறது. போதாயன தர்ம சூத்திரத்தில் தினமும் செய்ய வேண்டிய சிவ பூஜையில் ஸ்கந்தனுக்கும் இடம் கொடுத்திருக்கிறது. ஆபஸ்தம்ப மகரிஷியும், நித்தியம் கொடுக்க வேண்டிய தேவ பலிகளில் ஸ்கந்தனையும், அவனது பார்ஷதர் (பரிவார கணங்களையும்) சேர்த்திருக்கிறார்.

தமிழபிமானம் உள்ளவர்களுக்கு இதையெல்லாம் சொல்ல வேண்டும். ஏனென்றால் தமிழ் மொழிக்கே முருகன்தான் அதிஷ்டான தெய்வம் என்று கொண்டிருக்கிறோம். 'முருகன்' என்று அலாதி அன்பு சொட்டச் சொல்வது தமிழர்களுக்கே உள்ள பெருமை. ஆதி காலம் தொட்டு இங்கே குறிஞ்சி நிலக் கடவுள் அவரே. தொன்மையிலும், தொன்மையான 'தொல்காப்பியம்' இதை 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்கிறது. ஆறுபடை வீடுகள் என்ற பிரசித்த க்ஷேத்திரங்கள் இங்கேயே உள்ளன. அவர் தமிழை உண்டாக்கியவர், வளர்த்தவர். சங்கப் புலவர்களில் ஒருவராக இருந்திருக்கிறார். அகஸ்தியருக்குத் தமிழ் இலக்கணம் உபதேசித்திருக்கிறார். மிகப் பழைய 'திருமுருகாற்றுப் படை'யில் நக்கீரர் இவர் புகழையே பாடுகிறார். பலர் அதைப் பாராயணம் செய்தே கைகண்ட மருந்தாகப் பலன் அடைந்திருக்கிறார்கள். காவடி எடுப்பது, கிருத்திகை விரதம், ஷஷ்டி உபவாசம் இருப்பதெல்லாம் தமிழ் நாட்டுக்கே விசேஷமானவை. இதனால் முருகனைத் 'தமிழ்த் தெய்வம்' என்று சொல்லிக் கொள்கிறோம்.

ஆனால் இந்தக் காலத்தில் தமிழ் மதம் வேறு, வேத நெறி வேறு என்று பேதப் படுத்துவதில் சிலருக்கு ருசி இருந்து வருகிறது. இது, ஆராய்ச்சி என்று சொல்லிக் கொண்டு நம் ஜனங்களைப் பேதப்படுத்துவதற்காக வெள்ளைக்காரர்கள் செய்த விஷமத்தின் அனர்த்தமான விளைவு. அந்த விவாதம் இப்போது வேண்டாம். குமாரஸ்வாமி ஒருத்தரை எடுத்துக் கொண்டால், இவர் தமிழ்த் தெய்வம் என்கிற போது, 'வேதத்திலும், தமிழ் நாட்டுக்கு வெளியிலும் இவர் ஆதியில் கிடையாது' என்ற தப்பபிப்பிராயம் ஏற்படக் கூடாது என்றே இத்தனையும் சொன்னேன்.

வைதிக நெறியை வளர்க்கவே ஏற்பட்ட ஸ்வாமி அவர் என்பதற்கு, ''சுப்ரமண்யர்'' என்ற பெயரே போதும். பிரம்மண்யத்தை— அந்தணர்கள் பற்றி ஒழுகுகிற வேதநெறியை— வளர்க்கிறவர் சுப்ரமணியம் என்பது வெளிப்படை.

(தொடரும்)

* இது குறித்த அருள்வாக்கு பிற்பாடு வெளி வரும்.

1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.



தலைவர் காமராஜ் சுற்றுப் பிரயாணம் முக்கியமாக மூன்று காரணங்களை உத்தேசித்து மேற்கொண்டார். முதலில் மக்களின் நிலையை உணர்ந்து அவர்களுக்கு நாட்டு நிலவரத்தையும் ஜனநாயகப் பண்புகளையும் விளக்குவது. இரண்டாவது தமிழ் நாட்டில் நிலவும் கட்சிகளின் தன்மைகளையும் அவற்றின் ஆற்றலையும் விளக்குவது. மூன்றாவது தேர்தல் நிதிக்காக.

ஒரு கூட்டத்தில் தாம் தேர்தலுக்காக நிதி திரட்ட வேண்டிய அவசியத்தையும் கிராமம் கிராமமாகச் சுற்ற வேண்டிய நிலையையும் அவரே விளக்கினார்.

''டில்லியில் இருப்பவர்கள் அதாவது பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரும் அவர் கட்சியைச் சேர்ந்தவர்களும் தேர்தல் இப்போது வரும், இன்னும் இரண்டு மாதங்களில் வரும் என்று பலபடி சொல்லிக் குழப்பி வருகிறார்கள். ஆகவே தேர்தல் எப்போது வரும் என்று நிச்சயமில்லாமல் இருக்கிறது. ஆனால் திடீரென்று தேர்தல் வந்து விட்டால் என்ன செய்வது என்பதற்காகச் சுற்றி வருகிறேன். ஆனால் நாட்டில் பஞ்சமும் வறுமையும் தாண்டவமாடும்போது இப்படித் தேர்தல் நிதி திரட்டலாமா என்று சிலர் கேட்கிறார்கள். இன்று ஆளும் கட்சியினரான தி. மு. க.வினர் ஏதோ ஓர் ஊரில் ஒரு ரூட்டுக்கு பஸ் பெர்மிட் தருகிறேன் என்றால் அவர்களுக்கு வேண்டிய பணம் அடுத்த நாளே வந்துவிடும். டில்லியில் இருப்பவர்கள் ஏதோ ஒரு பொருளுக்கு உற்பத்தி லைசென்ஸோ இறக்குமதி லைசென்ஸோ தருவதாக டெலிபோனில் சொன்னாலே போதும், லட்சக் கணக்கில் தேர்தல் நிதி குவிந்துவிடும். எனக்கு அந்த வசதியா இருக்கிறது? நான் பணத்துக்கு எங்கே போவேன்? உங்களிடம்தானே வர வேண்டும்? அதனால்தான் ஊர் ஊராகச் சுற்றுகிறேன்!'' என்று உண்மையை உள்ளது உள்ளபடி கூறிவிட்டார்.

இன்றுள்ள எல்லாத் தீமைகளுக்கும் ஒழுங்கீனங்களுக்கும் இந்த பெர்மிட் — லைசென்ஸ்— கோட்டா முறைதான் காரணம் என்று ராஜாஜி தமது வாழ்நாளில் இறுதிப் பதினைந்து ஆண்டுகளும் சொல்லி வரவில்லையா? சிறந்த வைத்தியன் நோயின் புறச் சின்னங்களைப் பார்த்து உடலுக்குள் எந்தப் பகுதி பழுதுபட்டிருக்கிறது என்று சொல்வானே அம்மாதிரி ராஜாஜி நமது சமுதாய வாழ்வு சீர்கெட்டு நோயுற்றிருப்பதற்குக் காரணம் பெர்மிட்—லைசென்ஸ் — கோட்டா முறை என்று எவ்வளவோ தெளிவாகக் கூறினார். அதையேதான் இன்று திரு காமராஜர் கூறுகிறார்.

காமராஜ் தேர்தல் நிதிக்காக ஊர் ஊராகச் சுற்றியதன் பலன் எப்படி இருக்கிறது என்று கேட்கத் தோன்றும். நன்றாகவே இருக்கிறது என்று சொல்ல வேண்டும். தர்மபுரி ஜில்லாவில் ஐம்பதினாயிரம் ரூபாய் தான் எதிர்பார்த்தார் தலைவர் காமராஜர். ஆனால் மக்கள் அவருக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதே போல் சேலம் மாவட்டத்திலும் எதிர்பார்த்ததை விட அதிகமாக மக்கள் வழங்கி யிருக்கிறார்கள். ஒவ்வோர் ஊரிலும் ரூபாய் ஐந்தாயிரம் அல்லது பத்தாயிரம் என்று வழங்கி ஒட்டுமொத்தமாகச் சேர்த்துத்தான் ஒன்றரை லட்சம் இரண்டு லட்சமாகிறது. இப்படிக் கொடுப்பவர்கள் யார் என்பது காவேரிப்பட்டணம் கூட்டத்தில் வெகு தெளிவாகத் தெரிந்தது.

காவேரிப்பட்டணத்தில் முன்னாள் எம்.எல்.ஏ.யான திரு பட்டாபிராம் அவர்கள் காமராஜ் அவர்கள் தேர்தல் நிதிக்கு வழங்கியவர்களையெல்லாம் மேடைக்கு வரவழைத்துத் தலைவர் காமராஜருக்கும் மக்களுக்குமே அறிமுகப்படுத்தி விட்டார். எல்லோரும் பட்டிக்காட்டில் வாழும் விவசாயிகள். அன்றுதான் முதல் தடவையாகச் சட்டை போட்டுக் கொண்டிருப்பார்களோ என்று தோன்றும் அளவுக்குப் பிற்பட்ட மக்கள்தான். அவர்கள்

சேலத்தில் நடைபெற்ற தேர்தல் நிதி அளிப்பு விழாவில் தலைவர் திரு காமராஜ் அவர்களிடம் ஓர் ஏழை மாது தேர்தல் நிதியை வழங்கினார்.



அரசாங்க அதிகாரிகளின் மிரட்டலுக்குப் பயந்து லெவியின் கீழ் தங்கள் கைவசமிருந்த நெல்லை அளந்துவிட்டு ரொம்பவும் துயரத்தில் ஆழ்ந்திருந்தவர்கள்தாம். எனினும் காமராஜரின் தேர்தல் நிதிக்கு இருநூறு, நூற்றைம்பது என்று வழங்கியிருந்தனர். இதைப் பார்த்தபோது, காமராஜரின் தேர்தல் நிதிக்கு வழங்க அவர்களை ஊக்குவித்தது எது என்று சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. விலைவாசி உயர்வாலும், லெவி அட்டகாசத்தாலும், வானம் பொய்த்ததாலும் உள்ளூர் போலீஸ் அதிகாரிகள், தி. மு. க. கால் வட்ட, அரை வட்ட செயலாளர்களாலும் பலவிதத்தில் துன்பப்பட்டு வாடி வதங்கியிருக்கும் மக்களுக்குக் காமராஜரின் வருகை புது நம்பிக்கையும், புது உற்சாகமும் அளித்திருக்கிறது. வாடிய தங்கள் வாழ்க்கை துளிர்க்க வேண்டுமானால் காமராஜர் கட்சி ஆட்சிக்கு வந்தால்தான் உண்டு என்று திடமாக நம்பித்தான் அவர்கள் தங்கள் சக்திக்கும் மிஞ்சி உவகையோடு வழங்கியிருக்கிறார்கள் என்பது தெள்வாகியது.

ஆனால் தலைவர் காமராஜ் அவர்களோ, அதிகார பீடத்தில் உள்ளவர்கள் திரட்டும் நிதிக்கு ஒரு வரம்பே இடையாது; அந்தப் பண பலத்தோடு தம்மால் போட்டி போட முடியாது என்பதையும் தெளிவாக்கி வந்தார். தாம் திரட்டும் தேர்தல் நிதி எல்லாம் சுவரொட்டி விளம்பரங்கள் அச்சிடவும், நோட்டீஸ் போடவும்தான் போதுமானதாக இருக்கும். ஆகவே, வாக்காளர்களுக்குப் பணத்தைக் கொடுத்து வோட்டுக்களை வாங்குவதோ, மற்ற அற்ப ஆசைகளைக் காட்டி வாக்குகள் வாங்குவதோ முடியாத காரியம். சத்தியம், நாணயம் நேர்மையுள்ள ஆட்சி வேண்டுமானால் தாம் நிறுத்தும் நபருக்கு ஸ்தாபன காங்கிரஸுக்கு வோட்டுப் போடுங்கள் என்று சொல்லி வந்திருக்கிறார். இதை இவ்வளவு வெளிப்படையாகச் சொல்லாமல் எவ்வளவு நாகரிகமாக உயர்ந்த முறையில் தலைவர் காமராஜர் குறிப்பிடுகிறார் என்பதைக் கண்டபோது மெய் சிலிர்க்கத்தான் செய்தது.

சின்னத் திருப்பதி என்ற ஊரில் அவர் பின் வருமாறு பேசினார்:

''மந்திரிமார்கள் ஆகாயத்திலிருந்து வந்துவிடவில்லை. அவர்கள் இன்று மந்திரியாக இருப்பது நீங்கள் அவர்களுக்குப் பொறுப்பு அளித்ததால்தான். நீங்கள்தான் பொறுப்பு அளித்தீர்கள். அந்தப் பொறுப்பை ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றலாம். அந்த உரிமை உங்களுக்கு இருக்கிறது.

''உங்கள் நிலத்தை ஒருவருக்குக் குத்தகைக்கு விடுகிறீர்கள். அவன் ஒழுங்காக விவசாயம் செய்து உங்களுக்கு நெல் அளந்தால் மீண்டும் அவனுக்கே குத்தகைச் சீட்டு எழுதித் தருவீர்கள். ஆனால் அவன் சரியாக நெல் அளக்காமல் வயலை உழாமல் இருந்தால் நீங்கள் மீண்டும் அவனுக்கே குத்தகைக்கு விடுவீர்களா? மாற்றி வேறு நல்ல விவசாயிக்குத் தருவீர்கள் அல்லவா? அதே போல்தான் ஆட்சியும்.

''இப்போது பதவியில் இருப்பவர்களின் ஐந்து வருஷக் குத்தகை 76ம் வருஷத்துடன் முடிகிறது. இக் குத்தகைச் சீட்டை இப்போது மாற்றப் போகிறீர்களா இல்லையா என்பதுதான் கேள்வி.

''தினம் ஒரே மாதிரிச் சாப்பாடாக இருந்தால் பிடிக்கிறதா? இன்றைக்கு வெண்டைக்காய் சாம்பாரிருந்தால் நாளைக்கு வற்றல் குழம்பாயிருந்தால் தேவலை என்று நினைக்கிறோம், இல்லையா?

''காங்கிரஸ் நீண்ட காலம் ஆண்டது. நன்றாகவே ஆண்டது. இருந்தாலும் உங்களுக்குப் புளித்து விட்டது. காங்கிரஸை இறக்கி விட்டுத் தி. மு. க.வைப் பதவியில் ஏற்றினீர்கள். இப்போது தி. மு. க. ஆட்சி புளித்து விட்டது உங்களுக்கு. சரி தி. மு. க. புளித்து விட்டதே என்று அ. தி. மு. க.வைப் பதவியில் ஏற்றி வைத்துவிடப் போகிறீர்கள்! இது அதைவிட மோசம். எச்சரிக்கை செய்யவே வந்திருக்கிறேன்!''



பெருந் தலைவர் அவர்களிடம் ஸ்தாபன காங்கிரஸ், சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் வட்டாரத் தலைவர் எம். சாமித்துரை தேர்தல் நிதி அளிக்கிறார்.

இளம்பிள்ளை என்கிற ஊரில், சாதியுணர்ச்சியும் பணமும் தேர்தலில் நுழைந்து உண்மையான ஜனநாயகம் தழைக்கவிடாமல் எப்படிப் படுத்துகின்றன என்பதைப் பின்வருமாறு விளக்கினார்:

''தேர்தல்களில் போட்டியிடுவது தப்பில்லை. மக்களின் உண்மையான சேவகனாகப் பணியாற்ற உழைக்கப் போட்டியிடுவதில் தவறில்லை. அப்படிப்பட்ட நல்லவர்களுக்கு வோட்டளிப்பதிலும் தவறில்லை.

''ஆனால் பணத்தினால் மக்களை—வாக்காளர்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்று நம்பித் தேர்தலில் நிற்பவர்களுக்கு வோட்டளிக்கக் கூடாது.

'அவருக்கு ஏன் ஐயா வோட்டைப் போட்டாய்?' என்று கேட்டால், 'அவர் நம்ம சாதி ஐயா, போடு' என்றார்கள், அதனால் போட்டேன் என்கிறார்கள்.

இதற்கெல்லாம் காரணம் நீங்கள் — உங்கள் வாக்குச் சீட்டு மூலம் எவ்வளவு பெரிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்

என்பது தெரியாததால்தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்கள். இப்படி நீங்கள் பொறுப்புணர்ச்சி இழந்து பணத்துக்காகவும் சாதிக்காகவும் வோட்டுப் போட்டதால் மக்களுக்கு எதற்குச் சேவை செய்ய வேண்டும் என்று உங்கள் வோட்டைப் பெற்று ஜெயித்து வந்த தி. மு. க.வினரும் மந்திரிகளும் கேட்கின்றனர்.

இந்த வட்டாரத்தில் சில மாதங்களுக்கு முன்பு கொலை நடந்திருக்கிறது. கொலையுண்டவர் இப்பகுதி எம். எல். ஏ.யின் உறவினர். என்ன காரணத்தினாலோ என்னவோ இதுவரை கொலையாளியை நமது போலீஸ் கண்டு பிடிக்கவில்லை. இது பற்றிப் பராபரியாக வதந்தி சேலம் மாவட்டத்தில் உலாவி வந்தது. தி. மு. க. எம். எல். ஏ.யின் தலையீடு காரணமாகப் போலீஸ் துப்புத் துலக்காமல் இருக்கிறது என்று. இவ்விஷயம் காமராஜ் காதுவரையில் எட்டியிருக்கிறது போலும். அதனால் அன்று இளம்பிள்ளை கூட்டத்தில் இவ்விவகாரத்தை இலேசாகக் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சின் விளைவோ என்னவோ அந்த எம். எல். ஏ. தம் சட்டசபை அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டதாக மறுநாள் பத்திரிகையில் வெளியாகியது. ''எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற கதை போலிருக்கிறது இல்லையா?

தலைவர் காமராஜ் தர்மபுரி மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் சேலம் மாவட்டத்திலும் தர்மபுரி மாவட்டத்திலும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். தமிழக ஆட்சி, வறட்சி நிவாரணப் பணிகளை எவ்விதம் செய்கின்றனர் என்பதனை நேரில் கண்டறிய கவர்னர் ஷா சுற்றுப் பிரயாணம் செய்து வந்ததையும் அவருடைய அனுபவங்களையும் தினசரிப் பத்திரிகைகள் வெளியிட்டன. வறட்சி நிவாரணப் பணியில், ஏழை மக்களுக்கு நாலு ரூபாய் முதல் ஆறு ரூபாய் வரை கூலி கொடுக்க வேண்டும் என்று நியதி. கவர்னர் நேரிடையாக வேலை செய்யும் மக்களையே 'இங்கே என்ன கூலி கொடுக்கிறார்கள்' என்று கேட்டு வைப்பார். அம்மக்கள் உண்மையைச் சொல்லி வைப்பார்கள். அதாவது விதிக்கப்பட்ட தொகையைவிட மிகக் கணிசமான பகுதி குறைவாகவே இருக்கும். ஷா ரொம்பவும் வருத்தம் தெரிவித்து நாளையிலிருந்தாவது சரியான கூலி கொடுக்கும்படி கலெக்டருக்கும், கண்டிராக்டருக்கும் சொல்லிவிட்டு வருவார்.

ஒரு நாள் ஷா ஏதோ ஓர் ஊரில் போய் வேலை செய்யும் ஒரு கிழவியை விசாரிக்க, ''ஐயா, இரண்டு ரூபாய்தான் கொடுக்கிறாங்க. ஆனால் நீங்க வந்து கேட்டால் நாலு ரூபாய் கொடுத்ததாகச் சொல்லச் சொல்றாங்க !'' என்றான்.

இப்படிச் சென்னை நகராண்மைக் கழகத்தில் மஸ்டர்ரோல் ஊழல் நடந்த மாதிரி, இந்த வறட்சி நிவாரணப் பணியிலும் நடக்க நல்ல வாய்ப்பிருக்கிறது. தலைவர் காமராஜ் சொல்லி வரும் லஞ்ச ஊழல் விஷயம் ஆளுநர் விஜயத்தினால் நிரூபித்துக் காட்டுவது போல் அமைந்துவிட்டது.

சேலத்தில் தலைவர் காமராஜ் தங்கியிருந்தபோது, வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு கல்யாணசுந்தரம் உடல் நலிவுற்றுச் சேலத்தில் இருக்கிறார் என்பதை அறிந்து அவரைப் பார்க்கவும் உடல் நலம் விசாரிக்கவும் சென்றிருந்தார். தலைவர் காமராஜருடன் சென்ற நண்பர், காமராஜரைப் பார்த்ததும் திருகல்யாணசுந்தரம் உளம் நெகிழ்ந்து, அரசியலில் அபிப்பிராயம் வேறுபட்டாலும் தனிப்பட்ட முறையில் நட்பையும் அன்பையும் பேணி வரும் பண்பைப் பாராட்டினாராம்.

மறு நாள் மாலை காமராஜ் (31-3-75) பெத்த நாயக்கன் பாளையம் என்ற ஊருக்குச் சென்றிருந்தார். அந்த ஊர் கம்யூனிஸ்டுகளின் கோட்டை என்று பெயரெடுத்த ஊர். அந்த ஊரில் 5-7-1972ல் விவசாயிகள் போராட்டம் நடந்தபோது எட்டு பேர் போலீஸ் துப்பாக்கிச் சூட்டினாலும் ஒருவர் தடியடியினாலும் இறந்தார்கள். அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட சமாதிக்குச் சென்று மரியாதை செலுத்திவிட்டுக் கூட்டத்துக்கு வந்தார் காமராஜ்.

காமராஜுக்கு விவசாயிகளின் போராட்டமே மனத்தில் நின்றது. ஆகவே அன்றையக் கூட்டத்தில் விவசாயிகள் போராட்டத்தைக் குறிப்பிட்டுப் பின்வருமாறு பேசினார். ''விவசாயிகள் போராட்டத்தின் போது முப்பதினாயிரம் பேர் சிறை சென்றனர். அவர்களுக்கு உணவோ, படுக்க இடமோ, குடிக்கத் தண்ணீரோ கூடக் கொடுக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் நான் வெளியில் இருந்தேன். மக்கள் உயிர் வாழ்வுக்கு அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியவில்லை அரசாங்கத்தினால் என்றால் ''நானும் சிறை செல்வேன்'' என்றேன். சென்னைக் கடற்கரையில் கூட்டம் போட்டுச் சொன்னேன்! நான் சென்றால் என் பின்னால் இன்னும் ஐம்பதினாயிரம் பேர் சிறைக்கு வரலாம் என்பதைக் கணித்த அரசாங்கம் அத்தனை விவசாயிகளையும் விடுதலை செய்தது.

அப்போது தி. மு. க. ஆட்சி விவசாயிகளை ஒடுக்கத் துப்பாக்கியால் சுட்டது நியாயம் என்று ஆதரவு அளித்தார் எம். ஜி. ஆர். அந்த எம். ஜி. ஆரை இன்று கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள். எதற்காக? சட்டசபையில் பத்து சீட்டுகளுக்கு ஆசைப்பட்டு.

கம்யூனிஸத்திடம் எனக்கு ஒரு மதிப்பு உண்டு. அதற்கென்று ஒரு கொள்கை உண்டு, வரலாறு உண்டு. ஆனால் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் சந்தர்ப்பவாதிகள். அன்று தி.மு.க.வினர் இவர்களை விலைக்கு வாங்கினார்கள், இன்று அ.தி.மு.க.வினர் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அ. தி. மு.க.வினர் 'அண்ணாயிஸம் மார்க்ஸிஸம்விட உயர்வானது; கம்யூனிஸத்தைவிட உயர்வானது.'' என்பார்கள். பெத்து நாயக்கன் பாளையம் கம்யூனிஸ்டுகள் மானம் உள்ளவர்களானால் அ.தி.மு.கவுடன் கூட்டு சேர வேண்டாம் என்று தங்கள் தலைவர்களுக்குச் சொல்ல வேண்டும் !'' என்றார் காமராஜ்.


(அடுத்த இதழில் முடியும்)



வருங்காமன் கணையழைக்க
வசந்தமலர் சூடியவள்..
K·T·R
கோபுர மார்க் பன்னீர்...
சந்தனாதித் தைலம்...
அரைக்கீரை விதைத் தைலம்...
லண்டன் நைட் பத்தி...
ஓமதீநீர்.... குல்கந்து...
K·T·R வாசனாதி திரவியசாலை
திருவாரூர் 610 108, தஞ்சை மாவட்டம்

5 x 120 = 1047/90





எங்கள் ரெக்கரிங்
டெபாஸிட்டு திட்டம்
உங்கள் வருங்கால
தேவைகளை நிறைவேற்ற உதவுகிறது.

தவணைகளுக்குப்பின் கிடைக்கும் தொகை

மாதத்தவணை ரூ	12 மாதங்கள் ரூ	24 மாதங்கள் ரூ	36 மாதங்கள் ரூ	48 மாதங்கள் ரூ	60 மாதங்கள் ரூ	61 மாதங்கள் ரூ
5	62.80	131.00	208.25	291.30	382.55	401.50
10	125.60	262.00	416.50	582.60	765-10	803.00
50	628.00	1310.00	2082.50	2913.00	3825.50	4015.00
100	1256.00	2620.00	4165.00	5826.00	7651.00	8030.00
500	6280.00	13100.00	20825.00	29130.00	38255.00	40150.00
1000	12560.00	26200.00	41650.00	58260.00	76510.00	80300.00

தவணைகளுக்குப்பின் கிடைக்கும் தொகை

மாதத்தவணை ரூ	72 மாதங்கள் ரூ	84 மாதங்கள் ரூ	96 மாதங்கள் ரூ	108 மாதங்கள் ரூ	120 மாதங்கள் ரூ
5	498.75	615.80	745.40	888.95	1047.90
10	997.50	1231-60	1490.80	1777-90	2095.80
50	4987.50	6158.00	7454.00	8889.50	10479.00
100	9975.00	12316.00	14908.00	17779.00	20958.00
500	49875.00	61580.00	74540.00	88895.00	104790.00
1000	99750.00	123160.00	149080.00	177790.00	209580.00

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் 240 மாதங்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

''நீங்கள் மேலும்
சேமிக்க நாங்கள்
உதவுகின்றோம்''

TNSC BANK

மற்ற விவரங்களுக்கு எங்களை அல்லது உங்கள்
அருகாமையிலுள்ள எங்கள் கிளைகளை அணுகவும்.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோட், சென்னை-600001
தந்தி: 'URBANK' போன்: 20367 (3 லைன்கள்)
டெலக்ஸ்: MS 7225

TNSCB : 123/75.

கிளைகள் : அண்ணா நகர், அண்ணா சாலை (காமதேனு), அண்ணா சாலை (அண்ணா சிலை), அசோக் நகர், பெஸண்ட் நகர், எழும்பூர், காந்தி நகர், கிரீன்வேஸ் ரோடு, ஜவஹர் நகர், கெல்லீஸ், தங்கசாலை, மைலாப்பூர், மைலாப்பூர் குளம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், ராயப்பேட்டை, ராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம், சாஸ்திரி நகர், ஷெனாய் நகர், தியாகராய நகர் & திருவல்லிக்கேணி

ஏழாம் அத்தியாயம்

கண்ணனின் கவலை

கோபுர வாசலில் அழகிய அம்பாரிகளுடன் பட்டத்து யானைகள் நின்றன. அரண்மனையைச் சேர்ந்த தந்தப் பல்லக்குகளும் பளபளவென்று ஜொலித்துக் கொண்டிருந்தன. சக்கரவர்த்தியின் அலங்கார வேலைப்பாடமைந்த ரதமும் இரண்டு அழகிய வெண் புரவிகள் பூட்டப் பெற்று நின்றது.

குதிரைகளின் கடிவாளத்தை இழுத்துக் கொண்டு கண்ணபிரான் தன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய முகத்தில் என்றுமில்லாத கவலை குடிகொண்டிருந்தது.

அந்த அழகிய தங்க ரதத்தையும், அழகே வடிவமாய் அமைந்த உயர் சாதிப் புரவிகளையும் பார்ப்பதற்காக ஜனங்கள் ரதத்தைச் சூழ்ந்து நின்றார்கள்.


அவர்களில் ஒருவன், ''என்ன, சாரதியாரே! முகம் ஏன் வாட்டமாயிருக்கிறது?'' என்று கேட்டான்.

கண்ணன் அந்தக் கேள்விக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை.

அப்போது பக்கத்தில் நின்ற இன்னொருவன், ''கவலைக்குக் காரணம் கேட்பானேன்? நானைக்குப் போர்க்களத்துக்குப் புறப்பட வேண்டுமல்லவா! பெண்சாதி பிள்ளையை

சிவகாமியின் சபதம்





விட்டுவிட்டுப் போக வேண்டுமே என்ற கவலைதான்!'' என்றான்.

இதைக் கேட்டதும் கண்ணபிரானுடைய கண்கள் நெருப்புத் தழல் போல் சிவந்தன. கையிலிருந்த குதிரைச் சாட்டையை — அந்த உயர் சாதிக் குதிரைகள் மேல் என்றும் உபயோகிக்க நேராத அலங்காரச் சாட்டையை—மேற் கண்டவாறு சொன்ன ஆளின் மீது கண்ணன் வீசினான்.

நல்லவேளையாக அந்த மனிதன் சட்டென்று நகர்ந்துகொண்டபடியால் அடிபடாமல் பிழைத்தான். சற்றுத் தூரத்தில் நின்றபடியே அந்த விஷமக்காரன், ''அப்பனே ! ஏன் இத்தனை கோபம் ? உனக்கு யுத்தகளத்துக்குப் போக விருப்பமில்லாவிட்டால், ரதத்தை என்னிடம் கொடேன்! நான் போகிறேன்!'' என்றான்.

அதற்குள் அவன் அருகில் நின்ற இன்னொருவன், ''அடே பழனியாண்டி ! எதற்காகக் கண்ணபிரானின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறாய்? அவனைச் சக்கரவர்த்தி நாளைக்குப் புறப்படும் சேனையுடன் யுத்தகளத்துக்குப் புறப்படக் கூடாது என்று சொல்லிவிட்டாராம். அது காரணமாகத்தான் அவனுக்குக் கவலை!'' என்று சொல்லவும், பக்கத்தில் நின்றவர்கள் எல்லாரும் ''த்ஸௌ'' ''த்ஸௌ'' ''அடடா'' ''ஐயோ! பாவம்!'' என்று தங்கள் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆலயத்திலிருந்து வெளி வந்த புவனமகாதேவி முதலியவர்களைக் கண்ணபிரான் அரண்மனையிலே கொண்டு போய்ச் சேர்த்துவிட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பினான்.

குதிரைகளைக் கொட்டடியில் விட்டுத் தட்டிக் கொடுத்துவிட்டுக் கண்ணன் தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்த போது அங்கே விநோதமான ஒரு காட்சியைக் கண்டான்.

கண்ணனுடைய மகன், பத்து வயதுச் சிறுவன் கையில் ஒரு நீண்ட பட்டாக் கத்தியை வைத்துக் கொண்டு, அப்படியும் இப்படியும் சுழற்றிக் கொண்டிருந்தான். அவ்விதம் அவன் கத்தியைச் சுழற்றியபோது, ஒவ்வொரு சமயம் அவனுடைய முகமானது ஒவ்வொரு தோற்றத்தைக் காட்டியது.

சில சமயம் அந்தப் பால் வடியும் முகத்தில் கோபம் கொதித்தது. சில சமயம் அந்த முகம் நெருக்கடியில் சிக்கிக் கஷ்டப்படுவதைக் காட்டியது. சில சமயம் எதிரியை வெட்டி வீழ்த்தியதனால் ஏற்பட்ட குதூகலத்தை அந்த முகம் உணர்த்தியது!



இவ்விதம் அந்தச் சிறுவன் கத்தியைச் சுழற்றி யுத்த விளையாட்டு விளையாடுவதைச் சற்றுத் தூரத்தில் உட்கார்ந்திருந்த கமலி வெகு உற்சாகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்குத் தெரியாதபடி சத்தமின்றி வீட்டுக்குள்ளே வந்த கண்ணபிரான் மேற்படி காட்சியைப் பார்த்ததும் முதலில் அவனுடைய முகத்தில் சந்தோஷப் புன்னகை உண்டாயிற்று. புன்னகை ஒரு கணத்தில் மாறி முகச் சுளுக்கம் ஏற்பட்டது.

கோபமான குரலில், ''முருகையா! நிறுத்து இந்த விளையாட்டை!'' என்று கண்ணபிரான் அதட்டியதைக் கேட்டதும் சிறுவன் பிரமித்துப் போய் நின்றான்.

கமலியும், வியப்பும் திகைப்புமாகக் கண்ணனைப் பார்த்தாள்.

''தலையைச் சுற்றிக் கத்தியை வீசி எறி! குதிரை ஓட்டும் சாரதியின் மகனுக்குப் பட்டாக் கத்தி என்ன வந்தது கேடு? வேண்டுமானால் குதிரைச் சாட்டையை வைத்துக் கொண்டு விளையாடு! கத்தியை மட்டும் கையினால் தொடாதே! தெரியுமா?'' என்று கண்ணன் கர்ஜனை புரிந்தான். இதைக் கேட்ட சிறுவன் கத்தியை இலேசாகத் தரையில் நழுவவிட்டுக் கமலியை அணுகி வந்து அவளுடைய மடியில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

கமலி, ''இது என்ன கண்ணா! குழந்தையை எதற்காக இப்படி அழச்

செய்கிறாய்? நாளைக்கு நீ யுத்தகளத்துக்குப் புறப்பட்டாக வேண்டும். திரும்பி வர எத்தனை நாள் ஆகுமோ, என்னவோ ?'' என்றாள்.

''கமலி! அந்த ஆசையை விட்டுவிடு! உன் புருஷன் போர்க்களத்துக்குப் போகப் போவதில்லை. குண்டுசட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டு நான் காஞ்சி நகரத்திலேயேதான் இருக்கப் போகிறேன். சக்கரவர்த்தியின் கட்டளை அப்படி !'' என்றான் கண்ணன்.

கமலியின் முகத்தில் அப்போது சொல்ல முடியாத ஏமாற்றத்தின் அறிகுறி காணப்பட்டது.

''இது ஏன் கண்ணா! சக்கரவர்த்தி எதற்காக உன்னை இப்படி வஞ்சனை செய்தார் ? கால் ஒடிந்த ஆயனச் சிற்பியைக்கூடப் போர்க்களத்துக்கு அழைத்துப் போகிறாராமே ?'' என்று கேட்டாள்.

''இராமர் வானர சைனியத்தோடு இலங்கைக்குப் போனாரே. அப்போதே அந்த இலங்கைத் தீவைச் சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டு வந்திருக்கக் கூடாதா?'' என்றான் கண்ணபிரான்.

''என்ன இப்படிப் புதிர் போடுகிறாயே ? இராமர் இலங்கையைச் சமுத்திரத்தில் அமிழ்த்தாதற்கும் நீ போருக்குப் போகாததற்கும் என்ன சம்பந்தம் ?'' என்றாள் கமலி.

''சம்பந்தம் இருக்கிறது. இலங்கை அப்போது சமுத்திரத்தில் மூழ்கியிருந்தால், அந்த ஊர் இளவரசர் இப்போது இங்கே வந்திருக்கமாட்டார் அல்லவா? அவருக்கு ரதம் ஓட்டுவதற்காக நான் இங்கே இருக்க வேண்டுமாம்! சக்கரவர்த்தியின் கட்டளை!''

''ஆஹா ! அப்படியானால் மானவன்மரும் யுத்தத்துக்குப் போகப் போவதில்லையா ? நம் சக்கரவர்த்தியும் அவரும் சிநேகிதம் என்று சொல்கிறார்களே ?''

''பிராண சிநேகிதந்தான். அதனாலே தான் இந்தத் தொல்லை நேர்ந்தது. மானவன்மர் போர்க்களத்துக்கு வந்து அவருடைய உயிருக்கு அபாயம் நேர்ந்துவிட்டால், இலங்கையின் இராஜ வம்சம் நசித்துப் போய்விடுமாம். மானவன்மருக்கு இன்னும் சந்ததி ஏற்படவில்லையாம். ஆகையால், இலங்கை இளவரசர் போருக்கு வரக் கூடாது என்று சக்கரவர்த்தியின் கட்டளை. அவருக்காக என்னையும் நிறுத்திவிட்டார்!''

''இதுதானே காரணம்? அப்படியானால், நீ கவலைப்பட வேண்டாம், கண்ணா ! கூடிய சீக்கிரத்தில் இலங்கை இளவரசரும் நீயும் போருக்குப் புறப்படலாம்!'' என்றாள் கமலி.

''அது என்னவாய்ச் சொல்கிறாய்?'' என்று கண்ணபிரான் சந்தேகக் குரலில் கேட்டான்.

''காரணத்தோடுதான் சொல்லுகிறேன். இலங்கை இராணிக்குச் சீக்கிரத்தில் குழந்தை பிறக்கப்போகிறது.''

''ஓகோ! இலங்கை இளவரசிக்கு உடம்பு சௌக்கியம் இல்லை என்று சொன்னதெல்லாம் இதுதானா ?''

''ஏகாம்பரேசுவரா! இலங்கை இளவரசிக்குப் பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாய்ப் பிறக்கட்டும்!'' என்று கண்ணன் ஏகாம்பரர் ஆலயம் இருந்த திக்கு நோக்கிக் கைகூப்பி வணங்கினான்.

எட்டாம் அத்தியாயம்
வானமா தேவி

அன்றைய இரவைக் காஞ்சிவாசிகள் பகலாகவே மாற்றிக் கொண்டிருந்தார்கள். காஞ்சி நகரில் வாழ்ந்த ஐந்து லட்சம் ஜனங்களில் கைக் குழந்தைகளைத் தவிர யாரும் அன்றிரவு உறங்கவில்லை.

நகரமெங்கும் வீதி விளக்குகள் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. யானைப் படைகளும், குதிரைப் படைகளும், காலாட்படைகளும், வெண் புரவிகள் பூட்டிய ரதங்களும் வரிசை வரிசையாக நின்றன. பொழுது புலரும் சமயத்தில் அரண்மனை வாசலில் வந்து சேருவதற்கு ஆயத்தமாக அவை அணிவகுக்கப்பட்டு வந்தன.

மறுநாள் காலையில் சக்கரவர்த்தி போருக்குப் புறப்படும் வைபவத்தை முன்னிட்டு நகர மாந்தர்கள் இரவெல்லாம் கண் விழித்து, வீதிகளையும் வீட்டு வாசல்களையும் அலங்காரம் செய்தார்கள். முற்றிய தாறுகளை உடைய வாழை மரங்களையும், செவ்விள நீர்க் குலைகளையும், தோரணங்களையும், திரைச் சீலைகளையும், தென்னங் குருத்துக் கூந்தல்களையும், எங்கெங்கும் தொங்க விட்டார்கள். ஒவ்வொரு வீட்டின் உச்சியிலும் ரிஷபக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

பெண்மணிகள் வீட்டுத் திண்ணைச் சுவர்களுக்கு வர்ணப் பட்டைகள் அடித்தார்கள். தெரு வாசல்களில் சித்திர விசித்திரமான கோலங்களைப் போட்டார்கள். பெரும்பாலும் போர்க்களக் காட்சிகளே அந்தக் கோலங்களில் அதிகமாகக் காணப்பட்டன.

ஒட்டகத்தில் செல்பவன் ஆட்டு மந்தையில் ஒளிய முடியாது. —சோவியத் பழமொழி



லக்மே லவெண்டர் டால்க்
கொஞ்சி மணக்கும் ஃபிரெஞ்சு மயக்கம்...
ஃபிரெஞ்சுக்காரரே நெஞ்சாரப் பாராட்டுவார்.
Lakme
Lakme
லக்மே லவெண்டர் டால்க்—பூத்து மலர்ந்த ஃபிரெஞ்சு லவெண்டர் பூக்களின் வைபோக மணம். இன்ப இரகசியங்கள் பேசும்...மோகனக் கணை வீசும். பூசிக் கொள்வீர் லக்மே லவெண்டர் டால்க். யாவரையும் மதிமயக்குவீர்!
லக்மே
லவெண்டர் டால்க்
உங்கள் எழில் எங்கள் தொழில்
லக்மே

யானை வீரர்களும், குதிரை வீரர்களும், வாட்களும் வேல்களும் தரித்த காலாள் வீரர்களும் அக்கோலங்களில் காட்சியளித்தனர். ஒரு கோலத்தில் ஐந்து ரதங்களிலே பஞ்ச பாண்டவர்கள் தத்தம் கைகளில் வளைத்த வில்லும், பூட்டிய அம்புமாகக் காட்சி தந்தார்கள். இன்னொரு கோலத்தில் இராம லக்ஷ்மணர்கள் தச கண்ட இராவணனுடன் கோர யுத்தம் செய்யும் காட்சி தென்பட்டது.

மற்றொரு கோலத்தில் மகாரதர்கள் பலருக்கு மத்தியில் அபிமன்யு தன்னந்தனியாக நின்று போராடும் காட்சி தோன்றியது.

ஆஹா! காஞ்சி நகரத்துப் பெண் மணிகள் பாரத நாட்டு வீரர் கதைகளை



நன்கு அறிந்திருந்ததோடு சித்திரக் கலையிலும் மிக வல்லவர்கள் என்பதிலே சந்தேகமில்லை.

* * *

சக்கரவர்த்தியின் அரண்மனையிலும் அன்றிரவெல்லாம் ஒரே கலகலப்பாயிருந்தது. அரண்மனை வாசலிலும் நிலா முற்றத்திலும் அலங்காரங்கள் செய்யப்பட்டன. வாழை மரங்களும் தோரணங்களும் கட்டினார்கள். செக்கச் சிவந்த மலர்க் கொத்துக்களோடு கூடிய தொண்டைக் கொடிகளைக் கட்டுக் கட்டாய்க் கொண்டு வந்து நெடுகிலும் கட்டித் தொங்க விட்டார்கள்.

நிலா முற்றத்தில் வாட்களையும் வேல்களையும் நெய் தடவித் தேய்த்துத் தீட்டிக் கண்கள் கூசும்படி மின்னச் செய்தார்கள். யானைகளுக்கும் குதிரைகளுக்கும் பூட்ட வேண்டிய ஆபரணங்களுக்கு மெருகு கொடுத்துப் பளபளக்கச் செய்தார்கள்.

வீதிகளிலும் அரண்மனை வாசலிலும் இப்படியெல்லாம் அல்லோலகல்லோலமாய் இருக்க, அரண்மனையின் அந்தப்புரத்துக்குள்ளே மட்டும் அமைதி குடி கொண்டு நிச்சப்தமாயிருந்தது.

அங்குமிங்கும் முக்கிய காரியமாகச் சென்ற தாதிகள் அடி மேல் அடி வைத்து மெல்ல நடந்தார்கள். ஒருவருக்கொருவர் பேசும் போது காதோடு வாய் வைத்து மிகவும் மெதுவாகப் பேசினார்கள்.

இதன் காரணம் அச்சமயம் சக்கரவர்த்தி அந்தப்புரத்துக்கு வந்து தம் பட்டமகிஷியிடம் விடைபெற்றுக் கொண்டிருக்கிறார் என்று அவர்களுக்கெல்லாம் தெரிந்திருந்ததுதான்.

இது வரையில் நாம் பிரவேசித்தறியாத பல்லவ சக்கரவர்த்தியின் படுக்கை அறைக்குள்ளே, சந்தர்ப்பத்தின் முக்கியத்தைக் கருதி நாமும் இப்போது போய்ப் பார்ப்போம்.

நீலப் பட்டு விதானத்தாலும் முத்துச் சரங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த தந்தக் கட்டிலில் பஞ்சணை மெத்தை மீது சக்கரவர்த்தி அமர்ந்திருக்கிறார். அவருக்கெதிரில் பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷி, பாண்டிய ராஜன் குமாரி, வானமா தேவி மிக்க மரியாதையுடன் நின்று கொண்டிருக்கிறாள்: சற்றுத் தூரத்தில் திறந்திருந்த வாசற்படியின் வழியாகப் பார்த்தால், அடுத்த அறையிலே தங்கக் கட்டில்களில் விரித்த பட்டு மெத்தைகளிலே பல்லவ குமாரன் மகேந்திரனும், அவன் தங்கை குந்தவியும் நிம்மதியாகத் தூங்குவது தெரிகிறது.

ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் மாமல்லரை மணந்து பல்லவ சிம்மாசனத்துக்குரியவளான பாண்டிய குமாரி வானமா தேவியை முதன் முதல் இப்போதுதான் நாம் நெருங்கி நின்று பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும் போது, பாண்டிய நாட்டுப் பெண்ணின் அழகைப் பற்றிக் கவிகளிலும் காவியங்களிலும் நாம் படித்திருப்பதெல்லாம் நினைவுக்கு வருகிறது. அந்த அழகெல்லாம் திரண்டு ஓர் உருவம் பெற்று நம் முன்னால் நிற்கிறதோ எனத் தோன்றுகிறது.

அவளுடைய திருமேனியின் நிறம் செந்தாமரை மலரின் கண்ணுக்கினிய செந்நிறத்தை ஒத்திருக்கிறது. அவளுடைய திருமுகத்தில் உள்ள கரு விழிகளோ, அன்றலர்ந்த தாமரை மலரில் மொய்க்கும் அழகிய கரும்புகளை ஒத்திருக்கின்றன.

இதென்ன அறியாமை? வானமா தேவியின் சௌந்தரியத்தையாவது, நாம் வர்ணிக்கவாவது?

தபஸிகளுக்குள்ளே மிகக் கடுந் தபஸியான சிவபெருமானுடைய தவம் கலைவதற்கு எந்தத் திவ்ய சுந்தராங்கி காரணமாயிருந்தாளோ, எவளுடைய மோகன வடிவத்தைக் கண்டு அந்த ருத்ர மூர்த்தியின் கோபாக்னி தணிந்து உள்ளம் குளிர்ந்ததோ, அத்தகைய உமா தேவி பூமியில் அவதரிக்கத் திருவுளம் கொண்ட போது, மதுரைப் பாண்டிய ராஜனுடைய குலத்தையல்லவா தேர்ந்தெடுத்தாள்? சுடுகாட்டில் பூதகணங்களுக்கு மத்தியில் சாம்பலைப் பூசிக் கொண்டு பீபத்ஸ நடனம் புரிந்த எம்பெருமான் மண்டை ஓடு முதலிய தம்முடைய கோர ஆபரணங்களையெல்லாம் அகற்றிவிட்டுச் சுந்தரேசுவரராக உருக்கொண்டு எந்தச் சகல புவன சுந்தராங்கியைத் தேடி வந்து மணம் புரிந்தாரோ, அந்தப் பார்வதி தேவி பிறந்த குலமல்லவா பாண்டிய குலம்? அப்பேர்ப்பட்ட குலத்தில் உதித்த வானமா தேவியின் சௌந்தரியத்தை நம் போன்றவர்களால் வர்ணிக்க முடியுமா?

* * *

''தேவி! புறப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. நாளைச் சூரியன் உதயமாகும்போது, நானும் போருக்குப் பிரயாணமாவேன்!'' என்றார் சக்கரவர்த்தி.

வானமா தேவி மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. அவளுடைய கண்களின் ஓரத்திலே இரு கண்ணீர்த் துளிகள் ததும்பி நின்று தீபச் சுடரின் ஒளியில் முத்துக்களைப் போல் பிரகாசித்தன.

''திரும்பி வர எத்தனை காலம் ஆகுமோ தெரியாது. ஒருவேளை திரும்பி வருகிறேனோ, என்னவோ! அதுவும் சொல்வதற்கில்லை. தேவி! உனக்குப் பெரும் பொறுப்பைக் கொடுத்துவிட்டுப் போகிறேன். மகேந்திரனையும் குந்தவியையும் நீ கண்ணும் கருத்துமாய் வளர்த்து வர வேண்டும். இந்தப் பல்லவ இராஜ்யத்தைப் பாதுகாத்து, மகேந்திரனுக்கு வயது வந்ததும் அவனிடம் ஒப்புவிக்க வேண்டும்!'' என்று மாமல்லர் கூறியபோது, அது வரை தலை குனிந்து நின்று கொண்டிருந்த வானமாதேவி சக்கரவர்த்தியின் காலடியில் அமர்ந்து, அவருடைய பாதங்களைக் கண்ணீரால் நனைத்தாள்.

''தேவி! இது என்ன? வீர பாண்டியன் குலத்தில் உதித்தவள் கணவனைப் போர்க்களத்துக்கு அனுப்பத் தயங்குகிறாயா?'' என்று சக்கரவர்த்தி சிறிது பரபரப்புடன் கேட்டார்.

வானமாதேவி நிமிர்ந்து நோக்கிக் கூறினாள்: ''பிரபு! அத்தகைய தயக்கம் எனக்குச் சிறிதும் இல்லை. இந்த இராஜ்யத்தைப் பாதுகாத்து மகேந்திரனிடம் ஒப்படைக்கும் பொறுப்பும் எனக்கு நிச்சயமாய் ஏற்படாது. நான் பிறந்த மதுரை மாநகரில் ஜோசியக் கலையில் தேர்ந்த நிபுணர்கள் பலர் உண்டு. அவர்கள் என்னுடைய மாங்கல்ய பலத்தைப் பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் சளுக்கரை வென்று வாதாபியை அழித்துவிட்டு வெற்றிவீரராகத் திரும்பி வருவீர்கள். சந்தேகம் இல்லை!''

''பின் எதற்காக உன்னுடைய கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் சிந்



தின? உனக்கு என்ன துயர் யாரால் ஏற்பட்டது? மனத்தைத் திறந்து சொல்ல வேண்டும்'' என்றார் மாமல்லர்.

''சுவாமி! என்னுடைய மாங்கல்யத்தின் பலத்தைப் பற்றிச் சொன்ன அரண்மனை ஜோசியர்கள் இன்னொரு விஷயமும் சொல்லியிருக்கிறார்கள். என் கழுத்திலே மாங்கல்யத்தோடு, என் நெற்றியிலே குங்குமத்தோடு மீனாட்சியம்மனின் பாத மலரை நான் அடைவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை தாங்கள் திரும்பி வருவதற்குள் அவ்விதம் நேர்ந்துவிடுமோ என்று எண்ணினேன். அதனாலேதான் கண்ணீர் வந்தது. தாங்கள் வெற்றி மாலை சூடி இந்த மாநகருக்குத் திரும்பி வருவதைக் கண்ணாற் பாராமல் வானுலகத்துக்குப் போகக்கூட எனக்கு இஷ்டமில்லை!'' என்று வானமா தேவி கூறியபோது மீண்டும் அவளுடைய விசாலமான நயனங்களிலிருந்து கலகலவென்று கண்ணீர்த் துளிகள் சிந்தின. அப்போது மாமல்லர் அந்தப் பாண்டியர் குல விளக்கைத் தம் இரு கரங்களினாலும் தூக்கிக் கட்டிலில் தம் அருகில் உட்

கார வைத்துக் கொண்டார். தமது வஸ்திரத்தின் தலைப்பினால் அவளுடைய கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்தார்.

''தேவி! நானும் ஒரு ஜோசியம் சொல்கிறேன், கேள்! புலிகேசியைக் கொன்று வாதாபியையும் அழித்து விட்டு நான் வெற்றி மாலை சூடித் திரும்பி வருவேன். திக்விஜயம் செய்து விட்டுத் திரும்பி வரும் சக்கரவர்த்தியைக் காஞ்சி நகர்வாசிகள் கண்டு களிக்கும் பொருட்டு வெண் புரவிகள் பூட்டிய தங்க ரதத்தில் நான் ஏறி நகர் வலம் வருவேன். அப்போது என் அருகில் நீ வீற்றிருப்பாய். உன்னுடைய மடியில் மகேந்திரனும் என்னுடைய மடியில் குந்தவியும் அமர்ந்திருப்பார்கள்.''

''பிரபு! அத்தகைய ஆசை யெல்லாம் எனக்கில்லை. தாங்கள் திக்விஜயத்திலிருந்து திரும்பி வருவதைக் கண்ணால் பார்க்கும் பேறு பெற்றேனானால் அதுவே போதும். தாங்கள் திரும்பி வந்த பிறகும் நான் இந்தப் பூமியில் இருக்க நேர்ந்தால், நான் இத்தனை நாளும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஸ்தானத்தை, தங்கள் அருகில் வீற்றிருக்கும் பாக்கியத்தை, அதற்கு நியாயமாக உரியவளிடம் உடனே ஒப்புவித்து விட்டு அகன்று விடுவேன். இந்த அரண்மனையில் தாங்கள் மனம் உவந்து ஒரு சிறு இடம் கொடுத்தால் இங்கேயே இருப்பேன். தங்கள் சித்தம் வேறு விதமாக இருந்தால் என் பிறந்தகத்துக்குப் போய்விடுவேன்!'' என்று வானமா தேவி கூறிய மொழிகள் மாமல்லரைத் தூக்கிவாரிப் போட்டன.

''தேவி! இது என்ன? இந்த ஒன்பது வருஷங்களாக ஒரு நாளும் சொல்லாத வார்த்தைகளைக் கூறுகிறாய்? உன்னிடம் யார் என்ன சொன்னார்கள்? எதை எண்ணி இவ்வாறெல்லாம் பேசுகிறாய்?'' என்று மாமல்லர் மனக் கிளர்ச்சியோடு வினவினார்.

''சுவாமி! இந்த அரண்மனையிலும் இந்த மாநகரிலும் இந்தப் பல்லவ இராஜ்யத்திலும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் எனக்கு மட்டும் தெரியாமல் இருக்கும் என்று நினைத்தீர்கள்?''

''நீ எதைப் பற்றிச் சொல்கிறாய் என்பது இன்னமும் எனக்குத் தெரியவில்லை. அரண்மனையிலும் இராஜ்யத்திலும் எல்லாருக்கும் தெரிந்த அந்த மர்மமான விஷயம்தான் என்ன?'' என்று சக்கரவர்த்தி ஆர்வத்துடன் கேட்டார்.

''மர்மம் ஒன்றும் இல்லை பிரபு! தாங்கள் வாதாபிக்கு எதற்காகப் படையெடுத்துச் செல்கிறீர்கள் என்பதைப் பற்றித்தான்.''

''எதற்காகப் படையெடுத்துப் போகிறேன்? அதைப் பற்றி நீ என்ன கேள்விப்பட்டாய்?'' என்று மாமல்லர் கேட்டார்.

''என் வாயினால் சொல்லத்தான் வேண்டுமா? ஆயனச் சிற்பியின் மகளைச் சிறை மீட்டுக் கொண்டு வருவதற்காகப் போகிறீர்கள்.''

''ஆஹா! உனக்கும் அது தெரியுமா? எத்தனை காலமாகத் தெரியும்? எப்படித் தெரியும்?''

''எத்தனையோ காலமாகத் தெரியும். ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் நான் இந்த அரண்மனையில் பிரவேசித்த புதிதில் தாய்மார்களும் தாதிகளும் என்னை அடிக்கடி பரிதாபமாகப் பார்த்தார்கள். என்னைப் பற்றி ஒருவருக்கொருவர் அநுதாபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டு பேசினார்கள். சிறிது சிறிதாக அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து நான் ஊகித்துத் தெரிந்து கொண்டேன். சுவாமி! நான் தங்களுடைய பட்ட மகிஷியாகி ஒரு வருஷத்துக்குள்ளேயே தங்களுடைய இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பட்டமகிஷி வேறொருத்தி உண்டு என்று அறிந்து கொண்டேன்.''

''அப்படித் தெரிந்திருந்தும் நீ என்னை ஒரு முறையாவது அந்த விஷயமாய்க் கேட்கவில்லை. ஒன்பது வருஷங்களில் ஒருமுறையாவது என்மீது குற்றம் கூறி நிந்திக்கவில்லை. தேவி! கதைகளிலும், காவியங்களிலும் எத்தனையோ கற்பரசிகளைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன். அவர்களில் யாரும் உனக்கு இணையாக மாட்டார்கள்'' என்று மாமல்லர் பெருமிதத்துடன் கூறினார்.

''பிரபு! தங்களுடைய வார்த்தைகள் எனக்குப் புளகாங்கிதத்தை அளிக்கின்றன. ஆனால், அந்தப் புகழுரைகளுக்கு நான் அருகதையுடையவள் அல்ல!'' என்றாள் பாண்டிய குமாரி.

''நீ அருகதையுடையவள் அல்லவென்றால் வேறு யார்? உன்னை அக்கினி சாட்சியாக மணந்த புருஷன் இன்னொரு பெண்ணுக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தவன் என்று தெரிந்திருந்தும் நீ ஒரு தடவையாவது அதைப் பற்றி என்னைக் கேட்கவில்லை. என்பேரில் குற்றம் சொல்லவும் இல்லை. பெண் குலத்திலே இதைக் காட்டிலும் உயர்ந்த குண நலத்தை யார் கண்டிருக்கிறார்கள்?''

''சுவாமி! தங்கள் பேரில் எதற்காகக் குற்றம் சொல்ல வேண்டும்? குற்றம் ஏதாவது இருந்தால் அது என் தந்தை

யையும் தமையனையுமே சாரும். அவர்கள்தானே என்னைத் தாங்கள் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள்? தாங்கள் அதை மறுத்ததற்காக என் தமையன் ஜயந்தவர்மன் கோபங்கொண்டு இந்தப் பல்லவ இராஜ்யத்தின் மேல் படையெடுத்துக்கூட வந்தானல்லவா? அவனைத் தாங்கள் கொள்ளிடக் கரையில் நடந்த போரில் வென்று புறங்காட்டி ஓடச்செய்யவில்லையா? என் தமையன் திரும்பி வந்து தங்களை ஜயித்துவிட்டதாகச் சொன்னபோது மதுரை அரண்மனையிலே நாங்கள் யாரும் அதை நம்பவில்லை. தற்பெருமை மிகுந்த என் தமையனுக்குத் தங்களால் நேர்ந்த கர்வ பங்கத்தைப் பற்றிப் பேசிப் பேசி மகிழ்ந்தோம். அப்படியும் என் அண்ணன் தங்களை விடவில்லை. தன்னுடைய வார்த்தையை நிலைநாட்டுவதற்காக எப்படியாவது என்னைத் தங்கள் கழுத்தில் கட்டிவிடப் பிரயத்தனம் செய்தான்.''

''தேவி! ஜயந்தவர்மனுடைய கட்டாயத்துக்காகவே நான் உன்னை மணந்ததாக இன்னமும் நீ நம்புகிறாயா?'' என்று நரசிம்ம வர்மர் கேட்டபோது அவருடைய முகத்தில் புன்னகை தோன்றியது.

''இல்லை பிரபு! ஜயந்தவர்மனுடைய கட்டாயத்துக்காக என்னைத் தாங்கள் மணக்கவில்லை. பல்லவ இராஜ்யத்தின் நன்மைக்காக என்னை மணந்தீர்கள். வடக்கேயுள்ள ராட்சதப் பகைவனோடு சண்டை போடுவதற்காகத் தெற்கேயுள்ள மன்னர்களுடன் சிநேகமாயிருக்க வேண்டுமென்று என்னை மணந்தீர்கள். என் தமையனுடைய கட்டாயத்துக்காக என்னைத் தாங்கள் மணக்கவில்லை. தங்கள் தந்தையின் உபதேசத்தைக் கேட்டு மணந்தீர்கள். இந்த அரண்மனைக்கு வந்த சில நாட்களிலேயே இதெல்லாம் நான் தெரிந்து கொண்டேன்.''

'ஆயினும் ஒரு தடவையாவது இதையெல்லாம் பற்றி என்னிடம் நீ கேட்கவில்லை. ஆகா! பெண்களின் இருதயம் வெகு ஆழமானது என்று சொல்வது எவ்வளவு உண்மை?' என்று மனத்துக்குள் எண்ணிய வண்ணம் மாமல்லர் தம் பட்டமகிஷியின் முகத்தை உற்றுப் பார்த்தார். அந்தச் செந்தாமரை முகத்தில் கபடத்தின் அறிகுறியை அணுவளவும் அவர் காணவில்லை. எல்லையில்லாத நம்பிக்கையும் அளவு காணாத அன்பும் சாந்தமும் உறுதியும் காணப்பட்டன.


வானமாதேவி கூறினாள்: ''சுவாமி! தாங்கள் எதற்காக என்னை மணந்து கொண்டீர்கள் என்பது பற்றி நான் என்றைக்கும் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் எதற்காகத் தங்களை மணந்தேன் என்பது என் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தது. ஜயந்த வர்மன் கொள்ளிடக் கரையில் தங்களால் முறியடிக்கப்பட்டுத் திரும்பி வந்த செய்தியைக் கேட்டபோது என் உள்ளம் தங்களைத் தேடி வந்து அடைந்தது. அந்த நிமிஷத்தில் மணந்தால், தங்களையே மணப்பது, இல்லாவிடில் கன்னிகையாயிருந்து காலம் கழிப்பது என்று உறுதி கொண்டேன். என் விருப்பம் நிறைவேறியது. தங்களை மணக்கும் பாக்கியத்தை அடைந்தேன். தங்கள் அரண்மனையில் ஒன்பது வருஷ காலம் எவ்வளவோ ஆனந்தமாக வாழ்ந்து வந்தேன். பிரபு! இந்த ஆனந்தம் என்றென்



றைக்கும் நீடித்திருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படவில்லை. சில காலமாவது மற்றவர்களும் சந்தோஷமாக இருக்க வேண்டுமல்லவா? ஆயனர் மகளைச் சிறை மீட்டு அழைத்துக் கொண்டு தாங்கள் என்றைக்கு இந்த மாநகருக்குத் திரும்பி வருகிறீர்களோ, அன்றைக்கே நான் இந்தப் புராதன பல்லவ சாம்ராஜ்யத்தின் தங்கச் சிம்மாசனத்திலிருந்தும், இந்தப் பூர்விக அரண்மனையின் தங்கக் கட்டிலிலிருந்தும் கீழே இறங்கச் சித்தமாயிருப்பேன்.'' இவ்வாறு தழுதழுத்த குரலில் கூறி வானமாதேவி கண்ணீர் ததும்பிய கரிய கண்களினால் மாமல்லரைப் பார்த்தாள்.

உணர்ச்சி ததும்பிய அந்த வார்த்தை ஒவ்வொன்றும் கள்ளம் இல்லாத உண்மை உள்ளத்திலேயிருந்து வந்தனவென்பதை மால்லர் தெளிந்து உவகை கொண்டார். (தொடரும்)

நாம் தினமும் வீட்டில், வெளியில் பல நபர்களைச் சந்திக்கிறோம். மற்றவர்கள் நம்மிடம் சொல்லும் பல விஷயங்களைக் கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் சொன்னதிலிருந்து சொல்லாதது புரியும். அதில் சாமர்த்தியமான நகைச்சுவையும் ஒளிந்திருக்கும். உதாரணத்துக்குச் சில இதோ!



"எனக்குக் கீழே முந்நூறு பேர் வேலை பார்க்கிறார்கள் தெரியுமா?"

(அவனுக்கு மூன்றும் மாடியில் ஒரு சாதாரண உத்தியோகம்)



"எனக்காக நான்கு கம்பெனிக் காரர்கள் அலைகிறார்கள், பாவம்."

(தவணை முறையில் வாங்கிய பீரோ, ரேடியோ, கடிகாரம், சைக்கிள் எல்லாவற்றுக்கும் இன்னும் பணம் கட்டின பாடில்லை!)



"அப்பா! எங்கள் வகுப்பில் கணக்கில் என்னையும் சேர்த்து இரண்டே பேருக்குத்தான் ஐம்பது மார்க்குக்கு மேல் கிடைத்தது."

(பாக்கிப் பேருக்கெல்லாம் எண்பது மார்க்குக்கு மேல் கிடைத்திருக்கிறது!)




"என் கணவருக்குக் கர்நாடக சங்கீதம் என்றால் சர்க்கரை மாதிரி!"

(அவருக்கு 'டயாபடீஸ்' வியாதி!)

"என்னால் எத்தனை பேர் உயர்ந்திருக்கிறார்கள் தெரியுமா?"

('ஹை ஹீல் ஷூ' தயாரிக்கும் கடை வைத்திருக்கிறேன்.)





"மேலே படிப்பதற்காக என் மகன் பாரிஸ் போகிறான்!"

('பாரீஸி'ல் உள்ள நைனியப்ப நாயக்கன் சந்து 'டுட்டோரியல் காலேஜி'ல் படிக்க!)

சொன்னதும் சொல்லாததும்!

கே. ஜெ. மாரி.



"அதோ அவர் சமீபத்தில் எடுத்த படம் பிரமாதமாக ஓடிக் கொண்டிருக்கிறது!"

(ஊர் விட்டு ஊர்!)



"அவன் பாட ஆரம்பித்தால் இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம்."

(நிறுத்தும்படி செய்யப் பிரம்மா தான்வரவேண்டும்!)



"நான் செய்திருக்கும் அல்வாவை நீங்கள் சாப்பிட்டால் குறைசொல்லவே முடியாது."

(எப்படி முடியும்? வாயைத் திறக்க முடிந்தால்தானே?)



"என்னுடைய வேலை கொஞ்சம் கூடக் கஷ்டமே இல்லை. பட்டனை அமுக்கினால் போதும்; எல்லாம் தானாக நடக்கும்!"

(லிஃப்ட் ஆப்பரேட்டராக இருக்கிறேன்!)



"இன்ஜினீயரும் நானும் ஒரே வகுப்பில் ஒரே வருடத்தில் படித்தோம்."

(ஆனால் நான் 'காட்டாங்குளத்தூரில்' — அவர் அமெரிக்காவில் படித்தோம்!)



"இந்தப் போர்ஷனில் கோடையின்போது காற்று சும்மா பிய்த்துக் கொண்டு வீசும்."

(சந்தேகம் இருந்தால் குழாயைத் திறந்து பாருங்கள்!)

யாருக்காக அழுதான்?

''சிட்டி!''

பதில் இல்லே.

''டேய் கண்ணு!...'' என்று சற்று உரக்கவே குரல் கொடுத்தான் ரங்கசாமி.

அப்போதும் சிட்டி பாபு எழுந்திருக்கவில்லே. தூங்குபவனே எழுப்பி விடலாம். ஆனால் தூங்குவதாகப் பாசாங்கு செய்பவனே எழுப்ப முடியுமா? அதிலும் சிட்டிபாபு வெறுமனே பாசாங்கு செய்யவில்லே. அவனுக்குக் கோபம் வேறு.

ரங்கசாமிக்கு அது தெரியாது. ஆனால் பொன்னம்மாவுக்குத் தெரியும்.

''இந்தா... நீ சாப்பிட்டுடு. அவன் பதறும எந்திரிச்சிச் சாப்பிடுவான்.''

ரங்கசாமிக்கு மனசில்லே. பகலெல்லாம் கல்லூரியில் கால் கடுக்க நின்றிருந்தானே... பசி—தாகம் என்ற உணர்வில்லாமல் பதைத்துக்கொண்டிருந்தானே. பாவம், எப்படிக் களைத்திருப்பான்!

''தொட்டு உசுப்பி எழுப்பலாமா?' என்று நினைத்தான். வேண்டாம் அவன் தூங்கட்டும்.

ரங்கசாமி மட்டும் சாப்பிட உட்கார்ந்தான். காலேயிலிருந்து அவனும் சரியாகச் சாப்பிடவில்லே தான். குட்டி போட்ட பூனே மாதிரி கீழேயும் மேலேயும் அலேந்ததிலேயே அரை வயிறு 'நாஷ்டா'வும் ஜீரணமாகி விட்டிருக்கிறது. இப்போது நல்ல பசி.

தட்டில் ஆவி பறக்கச் சோறு போட்டுக் குழம்பு ஊற்றினுள் பொன்னம்மாள்.

உருட்டி வாயில் போட்டு வான்கோழி மாதிரி விழுங்க வேண்டியதுதானே!

ஊஹூம். ரங்கசாமிக்கு அதில் நாட்டம் செல்லவில்லே. வெறுமனே சாதத்தை அளேந்தான்.

''சாப்பிடேன்..'' என்றுள் பொன்னம்மா.

ரங்கசாமியின் விரல்கள் இன்னும் சாதத்தை அளேந்துகொண்டே யிருந்தன.

''அட... என்னத்தே யோசனே பண்ணிக்கிட்டிருக்கே?''

அவனுக்கு யோசனேதான். இப்போது மட்டுமல்ல. கடந்த சில மாதங்களாகவே. ஆனால் 'அது என்ன யோசனே? எதைப் பற்றி?' என்று வெளியில் சொல்ல முடியுமா?

சாப்பிட்டதாகப் பேர் செய்துவிட்டு வெளியில் வந்து வெற்றிலேயைக் குதப்பியபோது மனம் அசை போட்டது.

சிட்டிபாபு எப்படி ரங்கசாமிக்கு ஒரே பிள்ளேயோ அப்படித்தான் ரங்கசாமியும் அவன் அப்பாவுக்கு.

ஒரே பிள்ளே என்ற அருமையை ரங்கசாமி உணர்கிருன். ஆனால் ரங்கசாமியின் அப்பா அதை உணர்ந்திருப்பாரா?

சந்தேகம்தான். அப்படி அவர் உணர்ந்திருந்தாரானல் ரங்கசாமி இன்று ஒரு பியூனுக இருக்க வேண்டியதில்லே. குறைந்த பட்சம் ஒரு கிளார்க்காக வந்திருக்க முடியும்.

ரங்கசாமியே பார்க்கிருன். அவன் பேட்டையைச் சேர்ந்தவர்கள் — ஒரு காலத்தில் அவனேடு படித்த பையன்கள்தான் — இன்று வெவ்வேறு ஆபீஸ்களில் கௌரவமான வேலேயில் இருக்கும்போது அவன் மட்டும் ஒரு பியூனுக — வருவோர் போவோர்க்கெல்லாம் சலாம் அடித்துக் கொண்டு — எடுத்தது தொட்டதற்கெல்லாம் பயந்து கொண்டு ஒரு சராசரி அடிமையைப் போல்...

நினேக்கிறபோது அவனுக்கு நெஞ்சு கலங்குகிறது.

இதையெல்லாம் அவன் நினேக்காமல்தான் இருந்தான். கூடவோ குறையவோ வயிற்றுக்கு வஞ்சகமில்லாமல் சாப்பிட்டு நிம்மதியாக இருந்தால் போதும் என்பதுதான் அவன் போக்கு. ஆனால் சில மாதங்களுக்கு முன்பு அவனுடைய தூரத்து உறவினர் ஒருவர், பல வருடங்களுக்கு முன்பு அவனே எதிர்பாராமல் சந்தித்து விட்டார்.

''என்னடா, ரங்கா! என்ன பண்ணறே?''

''கோட்டையிலே பியூனுக இருக்கிறேன் மாமா...''

அந்த உறவினருக்குச் சப்பென்று போய் விட்டது.

''பியூனு? அதைப் போய் என்னவோ பெரிசா கலெக்டர் வேலே மாதிரி பெருமையாச் சொல்லிக்கிறியே... ஒங்க அப்பாரு ஒரு சாதாரண ஆளுதான். இருந்தாலும் அவன் மனசு வைச்சிருந்தா உன்னே ஒரு நல்ல நிலேமைக்குக் கொண்டாந்திருக்க முடியும். நீ ஒரே பிள்ளேதானே... சரி சரி.... அதைப் பத்தியெல்லாம் பேசி என்ன பண்ணறது? எப்படியாவது நல்லா இருந்தாற் போதும்.''

சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு அவர் போய்விட்டார். ரங்கசாமியும் அதை அப்போது சர்வ சாதாரணமாகத்தான் எடுத்துக்கொண்டான்.

ஆனால் அன்றிரவு சாப்பிட்டுவிட்டுப் படுக்கையில் சாய்ந்தபோது கொசுவும் மூட்டைப் பூச்சியும் சேர்ந்து கொண்டு அவனேத் தூங்க விடாமல் இம்சித்தபோது அந்த இம்சையில், அந்த எரிச்சலில் உறவினர் சொன்ன வார்த்தைகள் உள்ளத்தைத் திடீரென்று உலுப்பின.

'அவர் சொன்னது போல் தன் தந்தை சாதாரண ஆள்தான். ஆனால் அவர் நினேத்திருந்தால் தனக்கு ஒரு சுமாரான எதிர் காலத்தை உருவாக்கித் தந்திருக்க முடியும்!'

ரங்கசாமிக்கு இப்போது ஒவ்வொன்ருக நினேவுக்கு வந்தது.

வேறு நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுமாறு தன் தந்தையிடம் சொல்வான் ரங்கசாமி. அவரும் 'சரி... சரி' என்று சொல்லி விட்டுப் போவார். பிறகு ஒரு வாரம் பத்து நாட்கள் கழித்து 'போடா, எந்த ஸ்கூல்லேயும்

இடம் கிடைக்கலே. அந்த ஸ்கூல்லேதானே படி' என்று எரிச்சலோடு சொல்லிவிடுவார்.

அதோடு அந்தப் பிரச்னை சரி.

ரங்கசாமி எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்ததும் கல்லூரியில் சேர்த்து விடச் சொன்னான். அதற்கும் சரிசரி என்று தலை யாட்டிவிட்டு நான்கைந்து கல்லூரிகளிலிருந்து அப்ளிகேஷன்களும் வாங்கி வந்து கொடுத்தார். அப்ளிகேஷன் போட்டுப் பதினைந்து நாட்கள்—இருபது நாட்கள்—ஒரு மாதம் என்று ஆன பிறகு ஒரு நாள் மாலையில் ''ஆமா... காலேஜ் நடத்துறாங்களாம் காலேஜ்! பொல்லாத காலேஜ். எவனாவது இடம் தர்றேங் கிறானா?...காலேஜும் வேணாம் மண்ணாங்கட்டியும் வேணாம்.... ஏதாவது வேலையைப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டார்.

அதோடு அந்தப் பிரச்னையும் சரி.

'வேலை பார்ப்போம்' என்று அவர் சொன்ன முகூர்த்தம் ரிசர்வ் பாங்கில் பியூன்கள் எடுப்பதாகக் கேள்விப்பட்டு, அதற்கு அப்ளிகேஷன் போட்டான் ரங்கசாமி. அவனுடைய தந்தையும் ரிசர்வ் பாங்கில் தான் பியூனாக வேலை பார்த்தார். 'கலபத்தில் வேலை கிடைத்து விடும் என்று அவன் ஆசையோடும், நம்பிக்கையோடும் எதிர் பார்த்திருந்த சமயத்தில் ''இதோ பாருடா எவ்வளவோ கேட்டுப் பார்த்துட்டேன்.; வேலை கிடைச்சா உண்டு. இல்லேனா விடு'' என்று செயலற்றுப் போய் அமர்ந்து விட்டார் ரங்கசாமியின் தந்தை.

ஆக, அந்தப் பிரச்னையும் முடிந்தது.

''இப்படி அடித்தளமான படிப்பிலிருந்து அதற்கு அடுத்த கட்டமான வேலை வரை அவர் எனக்காக என்ன செய்தார்? எந்தவகையில் அவர் அக்கறை எடுத்துக் கொண்டார்? ஏதோ பெற்றார் — வளர்த்தார் — உறவுப் பெண்ணைப் பிடித்துக் கையில் ஒப்படைத்து விட்டுக் கண்களை மூடிவிட்டார். இந்தப் பியூன் வேலை கூட நாமாகப் பார்த்துக் கொண்டது தானே....'' என்று சங்கிலித் தொடர் போல் ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தபோது ரங்கசாமியின் நெஞ்சம் கனத்தது.

''இல்லே. அப்படியே அசந்து தூங்கிட்டான். தூங்கட்டும்'' என்று கூறிய பொன்னம்மா,' ரங்கசாமிக்கு எதிரே அமர்ந்தாள். பிறகு கேட்டாள்: ''காலேஜிலே இடம் கிடைச்சிடுமா?''

''தெரியலே. நாளைக்கு முடிவாச் சொல்றேன்னு பிரின்ஸிபால் சொல்லிட்டார்.''

''வேறே யார்கிட்டேயும் சிபாரிசு கேட்டுப் பாரேன்!''

''இன்னும் யாரைக் கேட்கிறது? எங்க ஆபீசரும் அந்தப் பிரின்ஸிபாலும் நெருங்கிய சிநேகிதங்க... எங்க ஆபீசர் கூட ரெண்டு மூணு தடவை போன் பண்ணிட்டாரு.''



யாருக்காக அழுதான்?

டி.கே.டி. துரைராஜன்

'தன் மகனுக்குச் செய்ய வேண்டிய சில சராசரிக் கடமைகளைச் செய்யாத — செய்ய வேண்டும் என்ற அக்கறை இல்லாத ஓர் அப்பனுக்கு நாம் பிள்ளையாய்ப் பிறந்து விட்டோமே' என்ற உணர்வு இப்போதல்ல, கடந்த சில மாதங்களாகவே ரங்கசாமியின் மனத்தைத் துளைத்தது.

• • •

பொன்னம்மா வெளியில் வந்தான்.

''சிட்டி எந்திரிச்சிட்டானா?'' என்று கேட்டான் ரங்கசாமி.

''எப்படியாவது அவனைச் சேர்த்துவிட்டுடு. இல்லாட்டிப் புள்ளெ ஏமாந்துடும்'' என்றாள் பொன்னம்மா.

ரங்கசாமிக்கு அது தெரியும். சிட்டிபாபு ஏமாந்துதான் போவான். அவனுக்கு அந்த

இதயமுள்ள இதயநோய் நிபுணர்

அந்த இதய நோயாளி இறந்து விட்டான் என்னும் தகவல் தெரிய வந்ததும் அவனுக்குச் சிகிச்சை செய்து வந்த டாக்டர் - இதய நோய் நிபுணர் - உடனே அவன் வீட்டுக்குப் போய்க் கண்களில் நீர் மல்க, சடலத்தின் அருகே இரண்டு நிமிஷங்கள் மௌனமாய் நின்றார். பிறகு கனிவும் கசிவும் கொண்ட குரலில், ''அம்மா, பன்னிரண்டு ஆண்டுகள் இதய நோயால் அவதிப்பட்டாய்; நான் உனக்குச் சிகிச்சையின் மூலம் ஓரளவு உன் வேதனையைக் குறைத்து வந்தேன்....கடைசியில் நீ இறந்து விட்டாய்....'' என்று கூறிக் கண்ணீருக்கிடையில் சடலத்தின் கையைப் பிடித்து நாடி பார்த்துவிட்டுத் தலையணையை ஒழுங்காக வைத்துவிட்டுக் குனிந்த தலை நிமிராமல் வெளியேறினார்.



இன்னொரு நோயாளிக்கு முடிவு நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இந்த டாக்டருக்குச் சொல்லி அனுப்பினார்கள். நோயாளி ''இறந்து விட்டார்'' என்ற துயரச் செய்தியைத்தான் டாக்டரால் அவர்களுக்குச் சொல்ல முடிந்தது. டாக்டர் வாசலுக்கு வந்து தம் காரில் ஏறிய சமயத்தில், இறந்தவரின் உறவினர் ஒருவர் வாசலுக்கு ஓடி வந்து ''.....டாக்டர்! உங்கள் ஃபீஸை வாங்கிக் கொள்ளாமல் போகிறீர்களே!'' என்று கூறிப் பணத்தைக் கொடுத்தார். ''இருக்கட்டும்.... இதை இறந்தவரின் இறுதிச் சடங்குக்கு வைத்துக்கொள்ளுங்கள்....'' என்று கூறிவிட்டு அவரது பதிலை எதிர்பாராமலே காரை 'ஸ்டார்ட்' செய்து புறப்பட்டு விட்டார்.

அந்த இதயமுள்ள டாக்டர் சமீபத்தில் மறைந்த டாக்டர் டி. என். கிருஷ்ணசாமிதான். இதய நோய் நிபுணரான அந்த டாக்டருக்கு மனிதாபிமானமும், பிறர் துயர் கண்டு இரங்கும் இதயமும் இருந்ததுதான், அவரது பெருக்கும் புகழுக்கும் காரணம். பகவான் ஸ்ரீரமண மகரிஷியிடம் மாறாத பக்தியும், ஸ்ரீ சாயி பாபாவிடம் அளவுகடந்த ஈடுபாடும் கொண்டிருந்த டாக்டர் டி. என். கிருஷ்ணசாமி ஓர் ஆதர்ச டாக்டராக விளங்கினார்.

OXOXOXOXO:XOX:OXOXOXOXO

ஏமாற்றத்தை — அதுவும் இந்த இளம் வயதில் — தரலாமா? இல்லை... தலையை அடகு வைத்தாவது அவனுக்கு இடம் வாங்கித் தந்து விடவேண்டும்.

ரங்கசாமி தன் தந்தையை நினைத்துக் கொண்டான். தனக்குள்ள உறுதி—வைராக்கியம் — அக்கறை இவையெல்லாம் இருந்திருந்தால்....?

நினைத்துப் பார்க்கிறபோது தன்னைப் பற்றிய ஒரு பெருமை உணர்வும் — தந்தையின் மீது வெறுப்பும் ஏற்பட்டது.

''பொன்னு... காலையிலே சீக்கிரமா எழுப்பிவிடு. பிரின்ஸ்பால் வீட்டுக்குப்போயிடறேன். அவர் கையைக் காலைப் பிடிச்சாவது எடம் வாங்காமல் விடுறதில்லே!''

''சிட்டியையும் கூட்டிக்கிட்டுப் போ. இல்லாட்டி நீ வர்றதுக்குள்ளே என்னைத் தொளைச்சு எடுத்திடுவான்.''

மறுநாள் — மாலை நேரம்.

அந்தி மயங்கி இருட்டிக் கொண்டு வந்தது.

காலைக் கருக்கலில் எழுந்து போன புருஷனையும் புள்ளையையும் இன்னும் காணோம். இடம் கிடைத்ததா இல்லையா என்று பொன்னம்மா தவித்துப் போனாள்.

சமையல்கூடச் செய்யாமல் தெருக் கோடியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது—

ரங்கசாமி மட்டும் வருவது தெரிந்தது.

''சிட்டி பாபு எங்கே?'' புருஷனை நோக்கி எதிர்கொண்டு விரைந்தாள் பொன்னம்மா.

''சிட்டி எங்கே?''

''அதோ நிற்கிறான் பாரு அழுதுக்கிட்டு!''

''ஏன்? காலேஜிலே எடம் கிடைக்கலியா?''

''கிடைச்சது. அவன் கேட்ட குருப் கிடைக்கலே. வேறே குருப்தான் குடுத்தாங்க. பணத்தைக் கட்டிட்டு வந்துட்டேன்.''

இதற்குள் சிட்டி அருகில் வந்துவிட்டான். அழுது அழுது கண்கள் சிவந்து முகம் கன்றிப் போயிருந்தது.

''மூஞ்சியைப் பாரு... ஏண்டா இப்படி அழுகிறே?'' என்று கத்தினான் ரங்கசாமி.

''எனக்கு அந்தக் குருப் வேணும். சயன்ஸ் குருப்தான் வேணும்'' என்று விம்மினான் சிட்டி.

''என் பாக்கெட்டிலே இருக்கு... எடுத்துக்க.... அறைஞ்சன்னா...'' என்று கையை ஓங்கினான் ரங்கசாமி.

''அந்தப் பிரின்சிபாலைக் கேட்கிறது தானே?'' என்றாள் பொன்னம்மா.

''கேட்கிறதா? காலைக்கூடத் தொட்டுக் கும்பிட்டுட்டேன். ஆனா அவர் குடுத்தாத் தானே? இந்தக் குருப்தான் தர முடியும்னு சொல்லிட்டாரு. அப்புறமும் நான் என்ன பண்றது? முயற்சி பண்ணினேன். அலைஞ்சேன். கெஞ்சினேன். ஒரே பிள்ளை சார்ன்னு கையெடுத்துக் கும்பிட்டேன். ஆனா நடக்கலியே'' என்று ஏதோ ஓர் எரிச்சலில் ரங்கசாமி சொன்னபோது—

திடீரென்று அவன் மனத்தில் மின்னல் போல் ஓர் எண்ணம்—

'இதே எரிச்சலுடன் தன் தந்தை எத்தனை முறை வீடு வந்து சேர்ந்திருக்கிறார்! எத்தனை நாட்கள் செயலற்றுப் போய் அமர்ந்திருக்கிறார்!

'அப்படியானால் சிட்டிக்காக நாம் கஷ்டப்பட்டது போல் — நாம் கெஞ்சியதுபோல் பிறர் காலை நாம் தொட்டுக் கும்பிட்டது போல் — ஒரே பிள்ளை ஸார் என்று நாம் உருகி உருகி நின்றதைப் போல் நம் தந்தை நமக்காகக் கஷ்டப்பட்டிருப்பாரோ? கெஞ்சியிருப்பாரோ? கையெடுத்துக் கும்பிட்டிருப்பாரோ?

'கடவுளே! அந்தத் தந்தையைப் பற்றி எவ்வளவு தாழ்வாக நினைத்து விட்டோம்?

ரங்கசாமிக்குத் திடீரென்று கண்கள் பனித்து விட்டன.

''சரி சரி... முட்டி மோதி முயற்சி பண்ணினாலும் நடக்கிறதுதான் நடக்கும். சிட்டி அழுறான்னு சொல்லிட்டு நீயும் அழாதே'' என்றாள் பொன்னம்மா.

அவளுக்குத் தெரியாது—

தன் புருஷன் மகனுக்காக அழவில்லை— தந்தைக்காக அழுகிறான் என்று!



விளைந்தது கொஞ்சம்; எரிந்தது நெஞ்சம்!

அரசு ஜீப்புகள் நுழைந்து விட்டால், கிராமத்து மக்கள் கிலி கொள்ளுகின்றனர். ஏன் பீதியுற வேண்டும்? இந்த ஆண்டு விளைச்சல் மோசம் செய்து விட்டது. அரசாங்கம் விதித்திருக்கும் லெவியை அவர்களால் தர முடியவில்லை. அதனால்தான்.

உதாரணமாக ஒருவருக்கு ஆறு ஏக்கர் நிலம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் சொந்தச் சாகுபடி செய்கிறார் என்றும் வைத்துக் கொள்ளுவோம். அவர் அளக்க வேண்டிய லெவி 72 மூட்டை நெல். அறுவடையில் 45 மூட்டைகள் மட்டுமே நெல் கண்டவர்களும் உண்டு. இவர்கள் லெவி பாக்கிக்கு எங்கே போவார்கள்? லெவி அளக்கவே, அதிகம் விளைந்த பெருந்தவக்காரர்களின் உதவியை நாடினால் அவர்கள் இலேசில் தருவார்களா? அதற்கு அதிக விலையல்லவா தர வேண்டும்! அப்புறம் தங்கள் வயிற்றுப்பாட்டுக்கும், குடும்பப் பராமரிப்புக்கும் என்ன செய்வார்கள்? ஏன்தான் நாம் நிலம் வைத்துக் கொண்டோமோ என்று தலையில் கைவைத்துக் கொள்ள வேண்டியவர்களாக நிற்கிறார்கள்.


இதுவே, குத்தகை நிலமாகி விட்டால், மிராசுதாருக்கு 36 மூட்டை, சாகுபடிதாரருக்கு 36 மூட்டை என்று நியாயம் வழங்கப் பெறுகிறது. மிராசுதாரர் சட்டத்துக்குப் பயந்து எப்படியாவது லெவி அளந்துவிட முயலுகிறார். ஆனால் குத்தகைதாரர் காட்டில் மழை பெய்கிறது. இவ்வாண்டு வானம் வறண்டு ஏமாற்றி விட்டதால், அரசாங்கம் அவர்கள்பால் நல்ல மனம் கொண்டு குத்தகை பாக்கி அளக்கவில்லை என்பதற்காக நடப்பு ஆண்டுக்கு அவர்மீது வழக்குத் தொடர முடியாத வகையில் ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறது. இந்த அவசரச் சட்டம் குடியானவர்களுக்குக் கேடயமாகப் பயன்படுகிறது. அவர்கள் மிராசுதாரர்களின் பங்கு நெல்லைத் தருவதில்லை. மிராசுதாரர்கள் லெவி நெல்லுக்கு எங்கே போவார்கள்?


குடியானவர்கள் தங்கள் பங்கு லெவியையாவது அளக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. அரசாங்கச் சிப்பந்திகள் அவர்களை அண்டவே அஞ்சுகிறார்கள். யாராவது தெரிந்து குளவிக் கூட்டில் கைவைத்து விருதுபட்டிச் சனியனை விலைக்கு வாங்கிக் கொள்வார்களா?

லெவி கொள்முதலுக்கு 'ஈ' பாரம் என்று ஒன்று வழங்கப்படுகிறது. அரசாங்க அத்தாட்சி பெற்ற வியாபாரிகளிடம் இடைக்கும். மூட்டைக்கு இத்தனை ரூபாய் என்று அவர்களிடம் 'தள்ளி' விட்டால் ஒருவர் தாம் போட வேண்டிய லெவி அத்தனையும் போடாமலே போட்டுவிட்டதாகக் கணக்குக் காட்டி விடலாம்; ஒரு மணி நெல்கூட லெவிக்கு அளக்காமல் தப்பி விடலாம். இந்த 'ஈ' பாரம் அரசாங்க முத்திரை பெற்றது. ஆனால் வியாபாரிகளே அச்சிட்டுக் கொண்டது. இது இந்திர ஜாலம் புரிகிறது. அதிகாரிகளே கூடப் பகிரங்கமாக 'ஈ' பாரம் வாங்கி வரச் சிபாரிசு செய்கிறார்கள். இதில் யார் உட்கை, யார் வெளிக்கை என்பதைக் கண்டுபிடிக்க சி. பி. ஐ. தான் வரவேண்டும்!

இந்தக் கொள்முதல் பட்டியல் என்னும் 'ஈ' பாரம் வழங்கப்பட்டிருப்பதை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால், அதாவது கிராமத்துக் கர்ணங்களிடம் உள்ள லெவிப் பதிவேட்டின் கணக்குப்படி பார்த்தால், ஆனந்த வருஷம் அமோக விளைச்சலைக் கொடுத்திருக்கிறது என்பது தெரிய வரும். அநேகமாக 'டார்ஜெட்'டை எட்டிப் பிடித்து விட்டதாக இறுமாப்புகூடக் கொள்ளலாம். ஆனால் கொள்முதல் கணக்கையும் அரிசிக் கிடங்குகளில் உள்ள அரிசியையும் கணக்கிட்டுப் பார்த்தால் 'பக்'கென்று போய்விடும். அப்பாவி நிலச்சுவான்தார்கள் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு அஞ்சி 'ஈ' பாரம் பெறப் பணமாகக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பண விளைச்சலைப் பங்கு போட்டுக் கொண்டவர்கள்...? நெல் வியாபாரியில் தொடங்கி ஆட்சி பீடத்தின் உயர் மட்ட அதிகாரிகள் வரை இருக்கலாமோ?

— அஜயம்







ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம், புதுக்கோட்டை

ஸ்ரீ மாதா புவனேச்வரி
மூலமந்த்ர லக்ஷ ஹோம அழைப்பிதழ்

21-5 1975 ராக்ஷஸ ௵ வைகாசி மீ 7உ

"सर्व चैतन्यरूपां तां आद्यां शक्ति च धीमहि ।
ह्रींकार रूपिणीं देवीं धियो यो नः प्रचोदयात्" ॥

ஸர்வசைதன்ய ரூபாம்தாம் ஆத்யாம் சக்திம் ச தீமஹி ॥
ஹ்ரீங்கார ரூபிணீம் தேவீம் தியோ யா ந:
ப்ரசோதயாத் ॥ (ஸ்ரீ புவனேச்வரி காயத்ரி)

[கருத்து: ஸகல சராசரப் பிரபஞ்சமும் தோன்ற ப்ரக்ருதி சக்தியாய் ஸர்வ ஜீவராசிகளிலும் ஆத்ம ஸ்வரூபிணியாய் வியாபித்து ஸ்வநாதப் பிரபஞ்ச பீஜமான ஹ்ரீங்காரஸ்வரூபிணியாய் உலகில் அறிவெனும் ஞானத்தின் அதிதெய்வமாய் விளங்கும் ஸ்ரீ ஜகன்மாதா புவனேச்வரி நமது நல்வினைக்குக் காரணமான நற்புத்தியை அளித்து அருள்பாலிக்கட்டும்.]

ஸர்வலோக ஜனனியான ஸ்ரீ புவனேஸ்வரியின் திருவருளைப் பெற்று விளங்கும் நவஸாலபுரி என்ற புதுக்கோட்டை மாநகரில், ஜட்ஜ் ஸ்வாமிகள் என்று போற்றப்படும் ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் அன்னாரின் ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு உலக க்ஷேமத்தைக் கருதி நிகழும் ராக்ஷஸ வருஷம் வைகாசி மாதம் 7ந் தேதி (21-5-1975) புதன்கிழமை ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய ஸுயோக ஸுதினத்தில் இவ்வுலக மக்கள் அனைவருடைய 27 நக்ஷத்திரங்களுக்கும் விசேஷ மஹா சங்கல்பம் செய்து கொண்டு ஸ்ரீ மாதா புவனேஸ்வரி தேவியின் மூல மந்த்ர லக்ஷ ஹோமத்தை ஆரம்பித்து மந்த்ர உபாஸகர்களான ருத்விக்குகளைக் கொண்டு வைதிக, தாந்திரீக விதிப்படி ஒரே நாளில் லக்ஷ ஹோமத்தை நடத்திப் பூர்த்தி செய்ய ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ புவனேச்வரி மாதாவின் ப்ரேரணைமேல் ஸங்கல்பித்துள்ளார்கள்.

இப்பொழுது நம் பாரத நாட்டில் கோரமான உணவுப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் படும் துயரம் சொல்லத்தரமல்ல; இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஆதி பராசக்தியும் ஜகஜ்ஜனனியுமான ஸ்ரீ புவனேச்வரி ஒருத்தியால் தான் முடியும். இது சமயம் பகுத்தறிவுள்ள மக்கள் அனைவரும் அன்னை ஸ்ரீ புவனேச்வரியைச் சரண் அடைவது தவிர வேறு வழி கிடையாது.

உலகத்துக்கு உண்டாகும் எல்லாக் கஷ்டங்களையும் அப்போதைக்கப்போது துடைத்து மக்களை ரட்சிக்கஸ்ரீமாதா புவனேச்வரி அதற்குத் தகுந்த ரூபங்களை எடுத்து மக்களுக்கு உண்டாகும் துயரத்தைப் போக்குவதால் ஸ்ரீ புவனேச்வரி தேவி "விச்வார்த்தி ஹாரிணி" என்று போற்றப்படுகிறாள்.

முன்னொரு காலத்தில் நூறு வருஷ காலம் மழையே இல்லாமல், தண்ணீர் இல்லாமல் போனபொழுது மஹரிஷிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட ஸ்ரீ புவனேச்வரி தேவியான பராசக்தி, ஆவிர்ப்பவித்து, தன் நூறு கண்களால் மஹரிஷிகளுக்கு அநுக்கிரஹம் செய்தாள். அதனால் அவளுக்கு ''சதாக்ஷீ (நூறு கண்களுடையவள்) என்று பிரசித்தி ஏற்பட்டது. அப்பொழுது மறுபடியும் மழை பொழிந்து பஞ்சம் நீங்கும்வரை ஜீவர்களின் உயிர் உடலில் நிலைத்திருப்பதற்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தன் சரீரத்திலிருந்தே கொடுத்து ஸ்ரீ புவனேச்வரி மாதா ''சாகம்பரீ'' என்ற பெயரை அடைந்தாள் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த ''சாகம்பரீ''யைப் பற்றி ஸப்தஶதி என்ற தேவி மஹாத்மியம் என்ற க்ரந்தத்தில் மூர்த்தி ரஹஸ்யத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த சாகம்பரீ தேவியைப் பற்றிக் கூறுமிடத்தில் தேவி தன் கைமுஷ்டியில் வண்டுகள் மொய்க்கும் தாமரையை உடையவளாயும் நல்ல ரஸத்தோடு கூடிய புஷ்பம், துளிர்கள், கிழங்குகள், பழங்கள், காய்கறிக் குவியல்களோடு தோன்றி, பசி, தாகம், ம்ருத்யு பயம் இவற்றைப் போக்கடிக்கிறள் என்று கூறி, இந்த சாகம்பரீ தேவியை ஸ்தோத்திரம் செய்து பூஜையும் செய்தால் குறைவற்ற அன்னபானாதி பலன்கள் சீக்கிரம் கிடைக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சாகம்பரீம் ஸ்துவன் த்யாயன்ஜபன் ஸம்பூஜயன் நமன் !
அக்ஷய்யம் அச்னுதே சீக்ரம் அன்னபானாம்ருதம் பலம் !!

ப்ரம்மாண்டத்துக்கே தாயாரான ஸ்ரீ புவனேச்வரீயேதான் ஆதி பராசக்தி என்று அவ்வப்பொழுது தேவி பாகவதம் மூலம் அறியப்படும். ஸ்ரீ புவனேச்வரித் தாயான அவளேதான் அன்னபூரணியாகவும், சாகம்பரியாகவும் அருள்பாலிக்கின்றாள். ப்ரம்மாண்டத்தை ஆக்கவும், ரக்ஷிக்கவும் அழிக்கவும் முறையே ப்ரம்ம, விஷ்ணு, ருத்ரர்களை உண்டாக்கி அவர்களுக்குச் சக்தியைக் கொடுத்து உபதேசம் செய்தாள். ஸ்ரீ மாதா புவனேச்வரி என்றும் அம்மூவரும் மணித்வீபத்தில் தேவியைத் தரிசித்து ஸ்தோத்திரம் செய்து அருள் பெற்றார்கள் என்பதும் தேவி பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீ மாதா புவனேச்வரி தேவியே மக்களின் பசிப் பிணியைப் போக்க சாகம்பரியாக அவதாரம் செய்த ரகசியத்தை நாம் மறந்துவிடலாகாது. ஆகையால் இந்தக் கொடிய பஞ்சம் தீர சாகம்பரி தேவியாகத் தோன்றி உலகத்தை ரக்ஷித்த ஸ்ரீ ஆதி பராசக்தி ஸ்ரீ புவனேச்வரியை லக்ஷ ஹோமங்களைச் செய்து ஆராதித்து மக்களுக்கு மேலான க்ஷேமத்தை விளைவிக்க ஸ்ரீ புவனேச்வரி மூலமந்த்ர லக்ஷ ஹோமத்தை ஒரே நாளில் நடத்த வேண்டுமென ஸ்ரீ மாதா புவனேச்வரி தேவியின் ஸன்னிதியில் ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் ஸங்கல்பித்துள்ளார்கள்.

முப்பத்து முக்கோடி தேவதைகளும் ஸ்ரீ புவனேச்வரியின் கலைகளே ஆவதால் ஆதி மூலப் பொருளான ஸ்ரீ புவனேச்வரியை விசேஷமாக ஆராதித்தால், முப்பத்து முக்கோடி தேவர்களும் திருப்தி அடைந்து விடுகிறார்கள் என்பது தேவி பாகவதம், சாஸ்திரங்களின் ஸாரம்.

அம்பாளின் ஆராதனையும் ஜபம், ஹோமம் என்ற வகைகளில் உள்ளது. அதில் ஹோமத்தால் தேவி அதிக திருப்தி அடைகிறாள் என்பது மஹரிஷிகள் கண்ட உண்மையாகும்.

''ஜுஹுயாத் ஸ்தோத்ர மந்த்ரைர்வா சண்டிகாயை சுபம் ஹவி:'' ஸ்தோத்ர மந்த்ரங்களால் சண்டிகையின் பொருட்டு மங்களகரமான ஹவிஸ்ஸை ஹோமம் செய்க, என தேவி மஹாத்மியம் கூறுகின்றது. இந்த ஸ்ரீ புவனேச்வரி மாதாவின் லக்ஷ ஹோமங்களை அஷ்ட த்ரவியங்களால் ஹோமம் செய்தால் எல்லா விருப்பங்களையும் தேவி பக்தன் அடைகிறான். சிறந்த ஸித்தியையும் அடைகிறான் என்பதும் மந்த்ர சாஸ்திரங்களின் ஸித்தாந்தம்.

உத்தமர்கள் அனைவரும் நம்பிக்கையும் உறுதியும் உத்ஸாகமும் கொண்டு உலக க்ஷேமத்தைக் கருதி அன்னை ஸ்ரீ புவனேச்வரியை லக்ஷ ஹோமத்தால் பூஜித்து நம் நாட்டுக்கு உண்டாகியிருக்கும் கொடிய பஞ்சம் முதல் எல்லாத் துன்பங்களையும் விரட்டி ஒழித்து மக்கள் அனைவருக்கும் எல்லாவிதமான இன்பங்களையும் உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமென ஸத்ய ஸங்கல்பம் செய்து கொண்டு முன்வந்திருந்து ஸ்ரீ புவனேச்வரி மூலமந்த்ர லக்ஷ ஹோமத்தை ஸ்ரீ மாதா புவனேச்வரி தேவியின் ஸன்னிதியில் நடத்திக் கொடுக்க வேண்டுமென ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் உள்ளன்புடன் மனிதாபிமானமுள்ள மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துகிறார்கள்.

ஒரே நாளில் நடத்தப்படும் ஸ்ரீ புவனேச்வரி மூலமந்த்ர லக்ஷ ஹோமத்துக்கு ரூ. 900 (ரூபாய் தொள்ளாயிரம்) நன்கொடை அளிப்பவர்களுக்கு ஸ்ரீ புவனேச்வரி வெள்ளி பூஜா யந்த்ரம் ஹோம ப்ரஸாதத்துடன் அனுப்பப்பெறும். ஸ்ரீ புவனேச்வரி மூலமந்த்ர லக்ஷ ஹோம பூஜைகளுக்காக ரூ. 18 (ரூபாய் பதினெட்டு) நன்கொடையாக அளிப்பவர்களுக்கு ஸ்ரீ புவனேச்வரி தாம்ர பூஜா யந்த்ரம் லக்ஷ ஹோம பூஜையில் வைத்து ஹோம ப்ரஸாதத்துடன் கொடுக்கப்படும்.

நமது பாரத தேசத்தின் நலமொன்றையே நினைத்துள்ள மனிதாபிமானமுள்ள உத்தமர்கள் அனைவரும் லக்ஷ ஹோம கைங்கரியத்தில் முழு மனதுடன் பங்கு கொண்டு மேலான அறம், பொருள், இன்பம், வீடுகளாகிய க்ஷேமத்தை அடைந்துய்யக் கோருகிறோம்.

* ''நவதுர்காம் மஹாகாளீம் ப்ரம்மவிஷ்ணு சிவாத்மிகாம் !
த்ரிகாலக்ஞானஸம்பன்னாம் நமாமி புவனேச்வரீம்'' !!

குறிப்பு : பொருளுதவி செய்பவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

ஸ்ரீமத் சாந்தானந்த ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி : **S. வைத்யநாத சாஸ்திரிகள், B.A., B.L.**
காரியகர்த்தா, அதிஷ்டானம், கீழ 7-ம் வீதி, புதுக்கோட்டை-1, புதுக்கோட்டை மாவட்டம், தமிழ்நாடு

குறிப்பு : 1. மணியார்டர் மூலம் பணம் அனுப்புவோருக்கு ரசீது ஹோமப் பிரஸாதத்துடன் அனுப்பப்பெறும்.
2. ஸ்ரீ புவனேச்வரி லக்ஷஹோமம் பூஜா யந்த்ரம் கிடைக்கும்வரை ரசீதைப் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

* இதில் குறிப்பிட்டுள்ள இரண்டு மந்த்ரங்களையும் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் குறைந்தது 1008 தடவை ஜபம் செய்து ஸ்ரீ மாதா புவனேச்வரியின் பரிபூர்ண க்ருபாகடாக்ஷத்துக்குப் பாத்திரர்களாகி அறம், பொருள், இன்பம், வீடு என்ற சதுர்வித புருஷார்த்தங்களையும் பெற்றுய்யுமாறு ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்தஸ்வாமிகள் அவர்கள் அநுக்கிரஹிக்கிறார்கள்.

பொன்னியின் புதல்வர்

சுந்தா



42. முத்தையன் கதையின் கதை

கதைக்கும் கதையுண்டு
கதியும் விதியும் உண்டு

ஜம்புலிங்கம் என்றொரு கள்ளன். சோரப்புலி என்றாலும் சூரப்புலி அவன். திருநெல்வேலி களக்காட்டுப் பகுதியில் அந்த ஜம்புலி பதுக்கிடம் கொண்டு, சாலைகளிலும், கிராமங்களிலும் பாய்ந்து மறித்தும், மிரட்டியும் கொள்ளையடித்தும் அந்த மாவட்டம் முழுவதிலும் கிலிபிடித்து நடுங்கச் செய்தான். வெகு நாளாய்ப் போலீஸ் வேட்டைகளுக்குத் தப்பித் திரிந்து கொண்டிருந்த அவனை, இறுதியில் முத்தைய பிள்ளை என்ற போலீஸ் அதிகாரி, காடு மேடெல்லாம் துரத்திச் சென்று சுட்டு, தாமும் சுடு பட்டுத் தப்பிப் பிழைத்தார். ஜம்புலி கிலியை ஒழித்த புகழுடன் ஓய்வுபெற்ற போலீஸ் பிள்ளை, வண்ணார்பேட்டையில் குடியமர்ந்து, டி. கே. சி. யின் வட்டத் தொட்டிக்கு வந்து போய்க்கொண்டிருந்தார். ஒரு சமயம் ரசிகமணியுடன் தங்கியிருக்கக் கல்கி வந்தபோது, அவரிடம் முத்தைய பிள்ளை அந்தக் கள்ளனின் கதையை, அவர் விரும்பிக் கேட்டதன் பேரில் விரிவாகச் சொன்னார்.

''கள்வனின் காதலி'' நாவல் தொடராக வந்தபோது, அதைப் படித்த முத்தைய பிள்ளை, ''நான் சொன்னதை வச்சுக்கிட்டு எம்புட்டு ஜோரா கல்கி எழுதிப்போட்டாக!'' என்று பாராட்டிச் சொல்லிக் கொண்டிருந்தார். அத்துடன், ''எம் பெயரைக் கொண்டு போய்க் கள்ளனுக்குக் கொடுத்துட்டாகளே'' என்ற ஆவலாதியையும் சேர்த்துக் கொண்டார். அந்த நாவலின் நாயகன் முத்தையனுக்கு மூலமானவன் ஜம்புலிங்கமே என்று, அவர் மட்டும் அல்லாமல், வட்டத் தொட்டி உறுப்பினர்களும், மற்றும் திருநெல்வேலி வாசகர்கள் எல்லாருமே நினைத்தார்கள். ஆனால், ஜம்புலிங்கத்தின் சாயல் ஓரளவேதான் முத்தையனிடம் உண்டு. அண்மையில் தெரிய வந்தது இது.

முத்தையனுக்குப் பெரும் அளவில் மூலமானவன், கல்கியின் சொந்த ஊரைச் சுற்றியுள்ள பகுதிகளில் திகிலடிக் கொள்ளைகளில் ஈடுபட்டிருந்த



பி. என். சுப்பிரமணிய பிள்ளை - மகராஜனின் தகப்பனார்.



கள்வன் முத்தையனாக டி. கே. சண்முகம்.



சர்வோத்தம சாஸ்திரி - டி. கே. பகவதி.

கதிர்வேலு என்பவன். எவ்வித சந்தர்ப்பங்களினால் முத்தையன் கள்வனாய் மாற நேர்ந்ததாகக் கல்கியின் நாவலில் சொல்லியிருக்கிறதோ, கிட்டத்தட்ட அதே சந்தர்ப்பங்களுக்கு உள்ளானவன் கதிர்வேலு. நாவலில் வரும் கார்வார் சங்குப் பிள்ளைக்கு மூலமான ஒருவன், சைவ மடம் அமைந்த ஊர் ஒன்றில் கதிர்வேலுக்குக் கொடுமை இழைத்தான். அந்த மடத்தின் நற்பெயரைக் கெடுக்க வேண்டாம் என்ற எண்ணத்தினால்தான், திருப்பரங்கோவில் என அதற்குக் கற்பனைப் பெயர் கொடுத்தார் கல்கி.

ஒரு நாவல் என்பது உண்மையான நிகழ்ச்சிகளை அப்படியே கோத்துச் சொல்லும் செய்தி அறிக்கை அல்ல. ஆதலால், ''கள்வனின் காதலி'' நாவலில் நிகழ்பவை யெல்லாமே உண்மையில் நிகழ்ந்தவை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அடிப்படையான சில நிகழ்ச்சிகள் மட்டுமே உண்மையானவை. அதே போல, அதில் வரும் கதை மாந்தர் எல்லாருக்குமே அசல்கள் இருந்திருக்கவில்லை; இருந்திருக்க முடியாது; இருந்திருக்கவும் கூடாது. ஆயினும் கதிர்வேலு, ''சங்குப் பிள்ளை'' ஆகியோருடன் இன்னும் ஒருவர் அசலாகவே இருந்தார் — போலீஸ் இன்ஸ்பெக்டர் பி. என். சுப்பிரமணிய பிள்ளை —நாவலில், ஸர்வோத்தம சாஸ்திரி. பல நாளாய்ப் பல கைகளுக்குத் தப்பிக் கொண்டிருந்த, ஆணைப்பட்ட கதிர்வேலுவைச் சுட்டுக் கொன்றவர் அவர்.

கதிர்வேலு வீழ்ந்தது பற்றிச் சென்னைப் பத்திரிகைகளில் பெரிதாக வெளியான செய்தியைப் படித்ததும்தான், ''கள்வனின் காதலி'' கதையை எழுதும் யோசனை கல்கிக்கு உண்டாயிற்று



முதலில் கள்வனின் காதலியை அரங்கேற்றிய பூர்ணம் விசுவநாதன்.



முதல் நாடகத்தின் இயக்குனர் கப்புடு.

எனலாம். ஏற்கனவே அவர், தம் கிராமத்துக்குப் போனபோதெல்லாம் அந்தக் கள்வனின் துணிகரச் செயல்கள் பற்றிப் பலரும் திகிலுடனும் வியப்புடனும் பேசிக் கொண்டதைக் கேட்டிருந்தார். படித்தது கேட்டதுடன் கற்பனையை ஓடவிட்டுப் பிறகு நாவலைப் புனைந்திட்டார். அப்படிப் புனைவதற்கு முன்னால் கதிர்வேலு பதுங்கி இருந்த இடங்கள், புழங்கிய இடங்கள் முதலியவற்றைப் பாலிய நண்பர் சுப்பிரமணியத்தின் துணையுடன் சென்று பார்த்தார். அப்படியே படம் பிடித்தாற்போல் அமைந்த அவற்றின் வர்ணனைகளை நாவலில் பார்க்கலாம். சில உதாரணங்களை இந்த வரலாற்றின் முன் அத்தியாயம் ஒன்றிலேயே பார்த்தோம்.

கதிர்வேலுதான் முத்தையனுக்கு மூலமானவன் என்பதை முதலில், கல்கியின் அண்ணா வேங்கடராம அய்யர் தெரிவித்தார். பின்னர் கல்கியின்

நாடகாசிரியர்: திரு எஸ். டி. சுந்தரம்.



ஆனந்த விகடனில் கள்வனின் காதலி தொடர் கதைக்கு வர்மா சித்திரம்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

சென்ற ஆண்டு போலவே இந்த வருஷமும் அமரர் கல்கி நினைவாகச் சிறுகதைப் போட்டி நடத்தத் தீர்மானித்துள்ளோம். எழுத்துத் துறையில் புதிதாக அடியெடுத்து வைக்க விரும்புகிறவர் முதல் முதுபெரும் எழுத்தாளர் வரை அனைவரும் இதில் கலந்து கொண்டு தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தை வளப்படுத்த வேண்டுகிறோம்.

முதல் பரிசு பெறும் சிறுகதை ஆகஸ்டு 3ந் தேதி கல்கி இதழில் பிரசுரமாகும்.



முதல் பரிசு ரூ. 1000

இரண்டாம் பரிசு ரூ. 500

மூன்றும் பரிசு தலா 250 வீதம் இரண்டு கதைகளுக்கு ரூ. 500

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும் இதர கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 100/- வழங்கப்படும்

அறிமுக எழுத்தாளருக்கு ஒரு 'போனஸ்' உண்டு!

முடிவு தேதி 30-6-75

கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய தபால் பில்லைகள் ஒட்டித் தம் முகவரியிட்ட உறைகளைக் கதையுடன் வைத்து அனுப்புதல் வேண்டும். கடிதப் போக்குவரத்து கிடையாது.

சிறுகதைகள் கல்கியில் நாலு அல்லது ஐந்து பக்கங்களில் அடங்குவதாய் இருப்பது நலம்.

ஆசிரியர், கல்கி, சேத்துப்பட்டு, சென்னை 600031

இலக்கிய நண்பரும், புத்தமங்கலத்துக்கு அடுத்த இருச்சிற்றம்பலம் கிராமத்துக்காரருமான மு. அருணாசலம் அதை உறுதிப்படுத்தினார். அவர்தான், ஸர்வோத்தம சாஸ்திரிக்கு அசல் பி. என். சுப்பிரமணிய பிள்ளை என்பதையும் சொன்னார். அத்துடன் அவர், அதற்கு முன் தெரிந்திராத இன்னொரு தகவலையும் தெரிவித்தார். அந்தப் போலீஸ் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை, ஓய்வு பெற்ற உயர் நீதிபதி மகராஜனின் தந்தையார் என்பதே அது.

அதன் தொடர்பாக, நண்பர் மகராஜனிடம் அவருடைய தகப்பனாரைப் பற்றி மேலும் விவரங்கள் கேட்கலாம் என்ற நோக்கத்துடன், அவரைக் காணச் சென்றபோது, ஓர் அதிசயம் காத்திருந்தது. தமது தந்தையார் ''கள்வனின் காதலி'' நாவலில் ஒரு முக்கிய பாத்திரமாய் அமைந்துள்ளார் என்பது மகராஜனுக்குத் தெரியாது! எப்படித் தெரியாமல் இருந்தது என்றால், அந்த நாவலை அவர் படித்ததில்லை. அந்தப் பாத்திரம் பற்றிய விவரங்களைக் கேட்டதும், அவர் தமது தந்தையாரின் அடையாளங்களை அதில் கண்டு வியப்புற்றார். வண்ணார்பேட்டையிலும் குற்றாலத்திலும் எத்தனையோ தரம் கல்கியுடன் பேசிக் கொண்டிருந்ததை நினைவுபடுத்திக் கொண்டு அவர் சொன்னார்: ''என்னுடைய கோர்ட்டு அனுபவங்களைக் கல்கி சொல்லச் சொல்லிக் கேட்பதுண்டு. நான் சொன்ன சம்பவம் ஒன்றை ஒரு கதையில் அவர் உபயோகித்துக் கொண்டார் என்று ஞாபகம். அத்தனை பேச்சுக்களுக்கு இடையே, என் தந்தையாரைப் பற்றி நான் சொல்லியிருந்தேனேயானால், அவரைத் தமது நாவலில் ஒரு பாத்திரமாகக் கொண்டுள்ளதை அவர் தெரிவித்திருக்கக்கூடும். இந்த நாவலைப் படித்துள்ள என் நண்பர்களிலும், இதுவரை யாரும் இந்த விஷயத்தை எனக்குத் தெரிவிக்காமல் போனதும் ஆச்சரியமே!''

நெருங்கிப் பழகுகிறவர்களிடையேயும், ஒருவரைப் பற்றிய முக்கியமான விஷயங்கள்கூட, மற்றவருக்குத் தெரியாமல் இருக்கலாம் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மகராஜனின் தந்தையார், கல்லூரியில் தத்துவத்தைப் பாடமாகக் கொண்டு, வாழ்க்கையிலும் தத்துவ நெறிகளைப் பயின்றவர். பார்த்தது போலீஸ் உத்தியோகமாதலால், அதற்கு உரிய கடமைகளைத் தவறுமலும் கண்டிப்புடனும் செய்தவர். போலீஸ் உடைக்கு உள்ளே, போலீஸ் கடமைகளுக்குப் புறத்தே எவ்வித மனிதராய்



1. கேசத்தை ஷாம்புவால் சுத்தம் செய்யுங்கள்.
2. நரை முடியின் மீது க்ளீம் ஹேர் டையை சமமாகப் பரப்புங்கள். சிறிது நேரம் அப்படியே இருக்கட்டும்.
3. நன்றாக நீரால் கழுவி, ஷாம்புவால் சுத்தம் செய்யுங்கள்.
4. கண்ணாடியில் பாருங்கள். நீங்கள் எவ்வளவு இளமையுடன் தோன்றுகிறீர்கள்!
உங்கள் கேசத்தை மீண்டும் இளமையுடன் விளங்க வைப்பது எவ்வளவு எளிது பாருங்கள்.
புதிய க்ளீம் ஹேர் டை உபயோகிக்க எளிதானது. இது சமமாகப் பரவி, விரைவில் செயலாற்றுகிறது. உங்கள் கேசத்திற்கு இயற்கையான வண்ணமும் பளபளப்பும் அளிக்கிறது. இது கரைந்து போகாது; மங்காது—பல முறை கேசத்தை சுத்தம் செய்த பிறகு கூட. உங்களுக்குச் சிறந்தது—க்ளீம் பர்மனென்ட் ஹேர் டை.
புதிது
GLEEM
PERMANENT HAIR DYE
NATURAL BLACK
க்ளீம்
பர்மனென்ட் ஹேர் டை
இயற்கையான கருமை & கருமை கலந்த பழுப்பு.
சிறப்பான வண்ணம் பெற க்ளீம் ஷாம்பு உபயோகியுங்கள். பிரபல கேச அலங்கார நிபுணர்கள் சிபாரிசு செய்வது.
GHD-1-A
Geoffrey Manners & Co., Ltd.



லின்டாஸ்-PZ.VI.2a-140 TM

இருந்தார் அவர் என்பது. கதிர்வேலு சுடுபட்டு விழுந்ததை அடுத்து அவர் நடந்து கொண்ட விதம் புலப்படுத்திற்றும். விழுந்து கிடந்தவனை அவர் மடி மேல் தூக்கிப் போட்டுக் கொண்டார். அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொண்டு வரும்படி ஜவான்களுக்குக் கட்டளை இட்டார். தண்ணீர் வருவதற்குள் அவனுடைய உயிர் பிரிந்ததைக் கண்டு அவர் வேதனையுற்றார். பின்னர் அவர் மேலதிகாரிகளுக்கு அனுப்பிய அறிக்கையில், ''அவனுடைய மரண தாகத்தைத் தணிக்க முடியாமற் போனது பற்றி வருந்துகிறேன்'' என்று எழுதினார். அவனுடைய வீரத்தையும் அந்த அறிக்கையில் பாராட்டி எழுதி, அவனுடைய துப்பாக்கி முதலிய உடைமைகளைக் காட்சிப் பொருள்களாய் வைக்க வேண்டும்என்றும் சிபாரிசு செய்தாராம்.

அவருக்கு ஒப்பான குணப் பண்பை ஸர்வோத்தம சாஸ்திரியிடமும் காணலாம்.

ஏற்கனவே தத்துவ அறிஞராய் இருந்தவர் சுப்பிரமணிய பிள்ளை; முத்தையனின் முடிவுக்குப் பிறகு, அதன் காரணமாகவே வேதாந்தியாய் மாறுகிறார் சாஸ்திரி. நாவலின் கடைசி அத்தியாயத்தில் இந்த மாற்றத்தைப் பற்றி உள்ள பகுதி, இன்னொரு விஷயத்தையும் புலப்படுத்துகிறது:

முத்தையனுடைய முடிவு சாஸ்திரியைப் பெரிதும் சிந்தனையில் ஆழ்த்தி, அவரை உலக வாழ்க்கையின் மகா இரகசியங்களைப் பற்றிய விசாரணையில் இறங்குமாறு தூண்டிற்று.

''அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை''.

என்னும் தமிழ் மறைக் கூற்றின் உண்மைப் பொருளை அவர் அப்பொழுதான் நன்கு உணர்ந்தார்.

இந்தக் குறளுக்குச் சாதாரணமாய், ''நற்கருமங்களுக்கே அன்பு ஆதாரமென்று தெரியாதவர்கள் சொல்வார்கள்; தீய செயல்களை விலக்குவதற்கும் அன்பே ஆதாரமானது'' என்று வலித்துப் பொருள் கூறுவது வழக்கம். ஆனால், தமிழ் நாட்டில் தற்போது வாழ்ந்திருக்கும் பெரியார்களில் ஒருவர், மேற்படி பொருளின் பொருத்தமின்மையை எடுத்துக் காட்டி, ''தீய செயல்களுக்குங்கூட அன்பே தூண்டுகோல்'' என்று பொருள் கூறியதை சாஸ்திரியார் கேட்டிருந்தார். இது எவ்வளவு உண்மை என்பது முத்தையனுடைய வாழ்விலிருந்து அவருக்குத் தெளிவாக விளங்கிற்று.

இதில் வரும் ''பெரியார்களில் ஒருவர்'' டி. கே. சி.யே; அவர்தான் அப்படி ஒரு பொருள் அந்தக் குறளுக்குக் கூறியவர். இதையும் மகராஜன் முன்பு அறிந்திருக்கவில்லை — நாவலைப் படித்திராத காரணத்தினால்.

மகராஜனின் வீட்டு வரவேற்பு அறையில், சுப்பிரமணிய பிள்ளையும் டி.கே. சி.யும் எதிரெதிரே பட உருவில் காட்சி அளிக்கிறார்கள் — ஒருவர் தந்தை; இன்னொருவர் தந்தைக்கு ஒப்பாகப் பாசம் கொண்டிருந்தவர். அவர்கள் இருவரும் கல்கியின் சிறந்த நாவல் ஒன்றில் குண உருவில் காட்சி அளிக்கிறார்கள் என்பதை அறிந்து மகராஜன் பெருமிதம் அடைந்தார்.

மற்ற நயங்களுடன் நாடக நயங்களும் கொண்ட இந்த நாவலை முதல் முதலாக நாடக வடிவில் அமைத்த பெருமை, சிறந்த அமெச்சூர் நடிகராக மேலும் மேலும் புகழ் பெற்ற பூர்ணம் விசுவநாதனுக்கு உரியது. அவரே முத்தையனை நடித்த அந்த நாடகம் கல்கி படித்த திருச்சி தேசியக் கல்லூரியின் வைர விழா நிதிக்காக, புதுடெல்லியில் 1946 நவம்பர் மாதத்தில் அடுத்தடுத்து 9, 10 தேதிகளில் நடைபெற்றது. கல்கி அளித்த ஊக்கத்தினால், அரங்குக் கலைகளை விமரிசனம் செய்யும் வல்லுநராய்ப் பின்னர் சிறப்புற்ற சுப்புடு, அந்த நாடகத்தை இயக்குவித்தார். அச்சமயம் மத்திய அரசில் கல்வி — கலை மந்திரியாய் இருந்த ராஜாஜியின் முன்னிலையில் அது நடந்தது ஒரு தனிச் சிறப்பு. தாம் அடைந்த மகிழ்ச்சியை ராஜாஜி, கடிதம் எழுதிக்கல்கிக்குத் தெரிவித்தார்.

டில்லி, 12—11—46

இந்த ஊர்த் தமிழர்களின் நாடகக் கழகம் மிகவும் நன்றாக உங்கள் கதையை நடித்து வெற்றிகரமாகவே முடித்தார்கள். இரண்டு நாள் நடத்தினார்கள். இரண்டு நாளும் நான் இருந்து பார்த்துக் கூட்டத்தில் சொற்பொழிவும் நிகழ்த்தினேன்.

நடித்தது ரொம்பச் சரியாக இருந்தது. எள்ளளவும் ஒழுங்குக் குறைவு இருக்கவில்லை. துளிக்கூடத் தவறு இல்லாமல் காதல் நாடகம் என் மனத்துக்குத் திருப்தியாய் நடத்துவது சிரமம். ஆயினும் அதை இந்தக் கழகத்தார் நடத்தி முடித்தார்கள்.

'கள்வனின் காதலி' கதையை நான் பிரகரமானபோது படிக்கவில்லை. இப்போதுதான் கதை இன்னதென்று பார்த்தேன். ரொம்ப நன்றாக இருந்தது. டி. கே. சி. பார்த்திருந்தால் ரொம்பச் சந்தோஷப்பட்டிருப்பார்கள், பேசியுமிருப்பார்கள்.

ராஜாஜியின் அன்புக்கும் கல்கியின் நட்புக்கும் உரிய ராணிப்பேட்டை தேசத் தொண்டர், கே. ஆர். கல்

உத்தரவால் வாழ்கிறான் பணக்காரன், உழைத்து வாழ்கிறான் ஏழை. —சோவியத் பழமொழி

யாணராமையர், அந்த நாடகத்தைப் பார்த்து விமரிசனம் எழுதினார். 24–11–46 கல்கி இதழில் வெளியான அந்த விமரிசனத்தில் ராஜாஜியின் பேச்சும் அடங்கி யிருந்தது. அந்தப் பேச்சின் ஒரு பகுதி ராஜாஜிக்கும் கல்கிக்கும் இடையே நிலவிய ''உறவு நிலை'' பற்றியது:

கல்கி என்னைக் கேட்டுக் கதை எழுதியிருந்தால் இம்மாதிரி சோகமாகக் கதையை முடிக்க வேண்டாம் என்று சொல்லி யிருப்பேன். ஆனால் நான் சொல்வதை அவர் கேட்க மாட்டார். 'தப்புச் செய்கிறவனைத் தப்ப விடக் கூடாது; தவறு செய்கிறவனுக்குத் தண்டனை கிடைக்கத்தான் வேண்டும்' என்று பிடிவாதம் பிடிப்பார்.

என்னைக் கேட்டுக் கொண்டும், எனக்குத் தெரிந்தும்தான் எல்லாம் அவர் செய்கிறார் என்று பலர் எண்ணுகிறார்கள். உண்மையில் அப்படி இல்லை. அவர் கதைகள் பலவற்றை நான் படித்ததில்லை. ஆனால் அவர் எழுதுவது எல்லாம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

புதுடெல்லியில் அந்த நாடகம் நடந்ததற்குச் சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ''கள்வனின் காதலி'' கதை மாந்தர் மீண்டும் நாடக பாத்திரங்களாக உருப்பெற்று, தமிழ் நாட்டு அரங்குகள் பலவற்றில் உலாவினார்கள். அச்சமயம் அந்த நாவலை நாடகமாக்கியவர், கல்கி மெச்சிய நாடக ஆசிரியர்களில் ஒருவரான கவிஞர் எஸ். டி. சுந்தரம். நாடகத்தை நடத்தியவர்கள், புதுப் புதுக் கதைகளை மேடையேற்றி நவீன நாடகக் கலையை வளர்த்த டி.கே. எஸ். சகோதரர்கள். நடிப்புக் கலையில் நோபல் பரிசுக்கு உரியவர் எனக் கல்கி பாராட்டிய ஔவை ஷண்முகம், முத்தையன் பாகத்தை ஏற்று, அன்பு காரணமாய்க் கொடுஞ் செயல்களில் ஈடுபட்ட அந்தக் குண சித்திரத்தை நடித்துக் காட்டினார். அவருடைய சகோதரர் டி. கே. பகவதி, ஸர்வோத்தம சாஸ்திரியாய் மாறி, கடமைக்கும் கருணைக்கும் இடையே ஊசலாடிய அந்தப் பாத்திரத்தின் குணப் பண்பை எடுத்துக் காட்டினார்.

டி.கே.எஸ். சகோதரர்களின் வெற்றி நாடகங்களில் ஒன்றான அதன் அரங்கேற்றம் 1953 ஜனவரி 20ம் தேதி, மயிலை ரசிக ரஞ்சனி சபா கொட்டகையில் நடைபெற்றது. குடும்பத்தாருடனும் நண்பர்களுடனும் கல்கி அமர்ந்திருந்து, பல ஆண்டுகளுக்கு முன்னால் தம் கற்பனை அரங்கில் தோன்றி, பின்னர் ஆயிரக் கணக்கான வாசகர்களின் மன அரங்கில் உலவி, அப்போது தம் கண் முன்னே நாடக அரங்கில் மீண்டும் எழுந்து நடமாடுவதைக் கண்டு களித்தார். அப்படி நடமாடச் செய்த குழுவினர் அனைவருக்கும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று கல்கி பூங்காவில் ஒரு பாராட்டு விருந்தளித்தார். வெவ்வேறு ஊர்களில் மொத்தம் நூறு தடவை நடந்த அந்த நாடகத்தைச் சுமார் பத்துத் தரமாவது கல்கி பார்த்திருப்பார்.

அந்த நாடகத்தின் அரங்கேற்றம் நிகழ்ந்து சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, திரைப்படமாய்க் ''கள்வனின் காதலி'' உருவாகி ஓடிற்று. நாடகமாய் ஆக்கிய எஸ். டி. சுந்தரமே திரைக் கதையையும் வரைந்து கொடுத்தார். சிவாஜி கணேசன் முத்தையனாகவும், சாரங்கபாணி சாஸ்திரியாகவும், டி. ஆர். ராமச்சந்திரன் கமலபதியாகவும் தோன்றினார்கள். கதாநாயகியாய் நடித்தவர் பானுமதி. வி. எஸ். ராகவன் இயக்கி, ரேவதி தயாரிப்பாக 1955 தீபாவளி யன்று அந்தப் படம் வெளியாயிற்று. — அதாவது, கல்கி காலமாகி ஓராண்டு கடந்த பிறகு.

கல்கியின் நினைவுக்கு அஞ்சலியாக வெளியான அந்தத் திரைப்படம் அவருடைய ஆயுட்காலத்திலேயே வெளியாகி யிருக்க வேண்டியது. ''கள்வனின் காதலி'' திரைப்படமாய் வரப்போவதாய் வெவ்வேறு தயாரிப்பாளர்களின் சார்பில் விளம்பரங்கள் வந்தனவே தவிர, படம் வரவில்லை. அப்படி வராமல் போனது கல்கியின் நிறைவேறாத ஆசைகளில் ஒன்று. திரைப்படமாய் வருவதற்கென்றே முதலில் ''ஸினாரியோ'' வடிவில் அவர் எழுதினார். அதை. அதனால்தான் அவருக்கு ஏமாற்றம். ஆனால் அந்த ஏமாற்றமே அவருடைய இலக்கிய வாழ்வில் ஒரு மாற்றத்தையும் ஏற்றத்தையும் உண்டாக்கிற்று. அந்தத் திரைக் கதை திரையை எட்டப் போவதில்லை என்பதை அறிந்ததுமே அதைக் கல்கி ஒரு நாவலாக விரித்து எழுதினார்; திரையை எட்டியிருந்தாலும் சிறிது காலம் ஓடியபின் ஓய்ந்து மறைந்திருக்கக்கூடிய ஒன்றை, இலக்கியத்தில் நிலைத்திருக்கக் கூடிய ஒன்றாகப் படைத்திட்டார்.

''கள்வனின் காதலி'' சிறந்ததொரு நாவலாசிரியராகக் கல்கியை அறிமுகப்படுத்திற்று. அந்த நாவலைப் போலவே, திரைக்குத் தப்பி இலக்கியப் படைப்பாய் நிலைத்துள்ள மற்றொன்றும் உண்டு. அதுதான் அவருடைய மிகச் சிறந்த நாவலான ''சிவகாமியின் சபதம்.''

(தொடரும்)

வறுமை பாவத்தின் பலன் அல்ல; பணமே வாழ்வின் குறி அல்ல. — சோவியத் பழமொழி

கொசுக்கள் அதிகமாகி வருகின்றன...

(டிடிடிக்கு எதிர்ப்பு பெறுகின்றன)

ஏன் துன்பப்பட வேண்டும்?

உபயோகிப்பீர்

ரிப்லெக்ஸ்

ரிப்லெக்ஸில் கலந்துள்ள விசேஷப் பொருட்கள் கொசுக்களை விரட்டியடிக்கின்றன! மனத்துக்கினிய நறுமணம் வாய்ந்ததும், வழவழப்பானதுமான, க்ரீம் தன்மையுடைய ரிப்லெக்ஸ் உங்கள் சருமத்திலிருந்து உடனே மறைகிறது. கொசுக்கள் மற்றும் பூச்சிகள் கடியிலிருந்து பலமணி நேரங்கள் உங்களைக் காப்பாற்றுகிறது.



இலவசம்!
ஒவ்வொரு ட்யூப் ரிப்லெக்ஸ்-உடனும்
வண்ண வண்ண துணி உலர்த்த உதவும்
க்ளோ-பெக்ஸ்

ராலிஸ் இந்தியா தயாரிப்பு.

RADEUS R-R-1

பாரதியார் சங்கத்தினருக்கு ஓர் ஆவல். எட்டையபுரத்தில் பாரதி மண்டபம் அமைந்ததுபோல் தமிழகத் தலைநகரிலும் ஒரு நினைவுச் சின்னம் அமைய வேண்டும் என்று.

சங்கத் தலைவர் பொள்ளாச்சி திரு மகாலிங்கம் ஆம், அது நல்ல காரியம் தான் என்று தீர்மானித்து விட்டார். வேறு யாராவது



வங்கக் கவிக்கு மண்டபம் சிங்கக் கவிக்கு அரங்கம்



தீர்மானித்தால் அது தீர்மானத்தோடு நிற்கும். ஆனால் இது 'சக்தி' மகாலிங்கத்தின் தீர்மானமாயிற்றே! முதல் கட்டமாக நகரின் ஒரு மையமான இடத்தில் அரசாங்கத்தை நிலம் ஒதுக்கச் செய்ய வேண்டும்; பிறகு ஓர் அரங்கத்தை மக்கள் ஒத்துழைப்புடன் அமைத்துக் கொள்ளலாம் என்று கருதினார். முதல்வரைப் போய்ப் பார்த்தார்.

''செய்ய வேண்டியது தான்; இடத்தைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?'' என்று கேட்டார் முதல்வர்.

''இல்லை, அதைச் செய்து விட்டு மீண்டும் வருகிறேன்'' என்று புறப்பட்டார் மகாலிங்கம். அண்ணா சாலை கவர்ன்மெண்ட் எஸ்டேட் தான். சாதாரணமாக எல்லோர் கண்களையும் உறுத்தும். மகாலிங்கமும் இதற்கு விதிவிலக்காயிராமல் மறுபடியும் முதல்வரைச் சந்தித்த போது 'ராஜாஜி ஹால் ஹாலுக்குப் பக்கத்தில்!' ...என்று ஆரம்பித்தார். அது உங்களுக்கு வசதிப்படாது. வேறு இடம் பாருங்கள்!'' என்றார் முதல்வர்.

இப்படியே வேறு இரண்டு மூன்று இடங்களை மகாலிங்கம் சுட்டிக்காட்ட முதல்வர் தட்டிக் கழித்துக் கொண்டு வந்தார். இன்னொருவராயிருந்தால் முடியாது என்று கூறுவதற்குப் பதில் முதல்வர் தட்டிக் கழிக்கிறார் என்று எண்ணுவார்கள். ஆனால் முதல்வரைச் சரியாக எடை போட்டிருக்கும் மகாலிங்கம் அப்படி நினைக்கவில்லை. பட்டினம் முழுதும் வலை வீசிப் பார்த்தார். சென்னையின் மையமான இடத்தில் நுங்கம்பாக்கம் மூர்ஸ் சாலையை ஒட்டி அரசுக்குச் சொந்தமான விஸ்தாரமான இடம் இருப்பதைப் பார்த்தார். ஓட்டமாய் ஓடி முதல்வரிடம் அதிலே முப்பது கிரவுண்டு ஒதுக்குமாறு கேட்டார்.

முதல்வர் ரொம்ப மகிழ்ச்சியுடன், ''சரியான இடத்தைத்தான் பிடித்து விட்டீர்கள். ஆனால் முப்பது கிரவுண்டு கேட்கிறீர்களே!'' என்றார்.

அதிகமாகக் கேட்டு விட்டோமோ என்று மகாலிங்கத்துக்குக் கவலையாகப் போய் விட்டது. ''அதற்குக் குறைந்தால் நல்ல அரங்கமாக அமைக்க முடியாதே என்று யோசிக்கிறேன்!'' என்றார்.

''ரொம்ப சரி. பாரதிக்கான அரங்கம் முப்பது கிரவுண்டில் அமைந்தால் போதாது. அந்த இடத்தில் உள்ள அறுபத்து நாலு கிரவுண்டையும் எடுத்துக் கொள்வதானால் தருகிறேன்'' என்றார் முதல்வர்.

மகாலிங்கத்துக்கு மூச்சுத் திணறியது! முதல்வர் தொடர்ந்தார்: ''நீங்கள் குறிப்பிட்ட அந்த இடத்தில் ஏற்கனவே ஓர் அரங்கம் அமைப்பதற்கான அஸ்திவாரம் கூடப் போடப்பட்டிருக்கிறது; கவனித்திருக்கலாம். தாகூர் பிறந்த நூற்றாண்டு விழாவை யொட்டி ஓர் அரங்கம் அமைப்பதென முடிவாகியது. மத்திய அரசின் உதவியும் கிடைப்பதாயிருந்தது. ஆனால் யுத்தம் வந்ததும் சிக்கனம் புகுந்து அந்தக் காரியம் நின்று போயிற்று.''



சென்னை கலெக்டர் திரு ஓ. ராமச்சந்திர ராவ் நிலத்தின் சாசனங்களைப் பாரதியார் சங்கத் தலைவர் திரு என். மகாலிங்கம் அவர்களிடம் வழங்குகிறார்.



''அதற்கென்ன, அந்தப் பணியைப் பாரதியார் சங்கம் ஏற்றுக் கொள்ளும். தாகூர் மண்டபம் எழும்பும்; அதில் பாரதியார் அரங்கம் அமையும்'' என்றார் மகாலிங்கம்.

முதல்வர் திருப்திப் புன்னகையை உதிர்த்தார். ஆக, இந்த ஒரு நல்ல முடிவுக்கு மகாலிங்கம் தாமாகவே வரவேண்டும் என்பதற்காகவே முதல்வர் ஆரம்பத்தில், 'அது வேண்டாம், இது வசதிப்படாது' என்று பல யோசனைகளைத் தட்டிக் கழித்தாரோ என்று நமக்குத் தோன்றுகிறது. அது அவருக்கே கைவந்த சாணக்கியம்.

இப்போது பாருங்கள், அரசு உதவி செய்ததாகவும் ஆயிற்று; இதற்கென்று தனியாக நிலம் ஒதுக்கியதாகவும் இல்லை. ஏற்கனவே ஓர் அரங்கத்துக்காக ஒதுக்கப்பட்ட நிலம்தான். அந்த அரங்கம் அஸ்திவாரத்துடன் நின்று போய் அழுது வடிந்து கொண்டிருந்தது. அதைக் கட்டி முடிக்கும் பொறுப்பை இப்போது தகுதி வாய்ந்த ஒருவரிடம் ஒப்படைத்தாகிவிட்டது. தாகூரையும் விடவில்லை. முழுப் பெருமையையும் அவருக்கே தந்துவிடவும் இல்லை. தமிழ்க் கவியையும் இணைத்தாகிவிட்டது. இலக்கிய உறவுக்குக் கைகொடுத்து ஒருமைப்பாட்டுக்கும் வழி வகுத்தாகிவிட்டது.

பாரதியார் சங்கம் எட்டயபுரம் பாரதி மண்டபத்தைப் பராமரிக்கவும் சென்னையில் ஆண்டுதோறும் பாரதி விழா நடத்தவும் அமரர் கல்கியால் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது இதன் தலைமைப் பதவியைத் தொழிலதிபர் திரு மகாலிங்கம் ஏற்று நடத்தி வருகிறார். மகாலிங்கம் ஒரு பணியில் ஈடுபட்டால் அவரால் அந்தப் பணி சிறப்புறும். அந்த அளவில் இன்று பாரதியார் சங்கத்துக்குச் சென்னையில் தாகூர் மண்டபம் – பாரதி அரங்கம் எழுப்பும் பெருமையும் பொறுப்பும் வந்து சேர்ந்திருக்கின்றன. பொது மக்கள் இயன்ற அளவிலும், செல்வந்தர்கள் தாராளமாகவும் நன்கொடை வழங்கி மனம் பூரிக்க வேண்டும். வங்கத்தின் மகா கவிக்கும் தமிழகத்தின் பெருங் கவிக்கும் ஒருங்கே நினைவுச் சின்னமாக அமையும், இதற்கு வடக்கேயிருந்தும் நன்கொடைகள் வரலாம், தமிழகத்தில் தொழில் நடத்திச் சிறந்துள்ள வடநாட்டவரும் வழங்கலாம்.

'காணி நிலம் வேண்டும் என்று கேட்ட பாரதிக்கு அறுபத்து நாலு கிரவுண்டு' எனக் கூறி மகிழ்ந்தார் திரு ம. பொ. சி., நிலம் வழங்கும் விழாவிலே.

'தாகூருக்கு நோபல் பரிசு கிடைத்தபோது எல்லாரையும்விட மிக அதிகமாகக் குதூகலம் அடைந்தவர் பாரதிதான்' என்று குறிப்பிட்டார் திரு கி. சந்திரசேகரன். 'கவி உள்ளத்தைக் கவிதானே அறிய முடியும்? இருவரையும் இங்கு இணைப்பது ரொம்பப் பொருத்தம்!' என்றார்.

எல்லா விதங்களிலும் சிறந்த தீர்மானம் நிறைவேற மூன்றாண்டுத் திட்டம் வகுத்துள்ளார் திரு மகாலிங்கம். அதற்கு முன்பாகவே லட்சியம் ஈடேறப் பாரதப் பெருமகன் ஒவ்வொருவரையும் ஒத்துழைக்க அழைக்கிறோம்.

முகவரி: நா. மகாலிங்கம், தலைவர், பாரதியார் சங்கம், சக்தி நிலையம், 49, செயின்ட் மேரி சாலை, சென்னை-600018.

பிறரை அழ வைப்பது எளிது; ஆனால் சிரிக்க வைப்பது அரிது. அதுவும் ஒருவர் சிரிக்க வைக்கப் போகிறார் என்று தெரிந்தால் சிரிப்பதில்லை என்று எதிரே இருப்பவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு விடுவார்கள்!

எனவே இந்த நாடகத்தில் பிரமாதமான கதை இல்லை என்றாலும், குபீர் குபீர் என்று சிரிக்க

ஏமாறச் சொன்னது நானோ?



வைப்பதே நாடக ஆசிரியை திருமதி விமலா ரமணிக்குச் சிறப்புத்தான். சினிமாவில் நடிக்க ஆசைப்படும் ஒரு வாலிபனைப் பற்றிய கதை. சினிமா என்றாலே அவன் தகப்பனாருக்கு 'அலெர்ஜி'. சமையற்காரர் சாம்பு மாமாவின் துணையை நாடி அப்பாவிடம் பணம் பறிக்கிறான் பையன். சாம்பு மாமாவின் மகன் பெண் வேஷத்துடன் அந்த வீட்டில் வளைய வருகிறான். சிரிப்புச் சம்பவங்களைத் தொடுக்க இந்த நிலைக் களன் போதாதா?

கோவை நவரத்னா என்னும் நாடகக் குழுவினர் அண்மையில் சென்னையில் இந்நாடகத்தை நடத்திக் காட்டினர். பண்பட்ட நடிகர்கள். முக்கியமான அம்சம், நடிகர்கள் யாவரும் சொந்தக் குரலில் பாடியதுதான். சாம்பு மாமாவாக வந்த கே. ஹரிஹர சுப்பிரமணியன் நடிப்பிலும் சரி, பாட்டிலும் சரி, எல்லோரையும் மிஞ்சிவிட்டார். நாடகத்தை டைரக்ட் செய்திருப்பவரும் அவர்தான்.

பெண் வேடத்தில் வந்த எஸ். சிவராம கிருஷ்ணன் பெண்ணுக்குரிய சாகசங்களோடு நன்றாய் நடித்தார். (ஓர் ஆண்மணி பெண்மணியாக நடிப்பதைப் பார்த்து எத்தனை காலமாயிற்று!) அவரோடு ஒப்பிட்டுப் பார்க்கக் குமாரி மனோன்மணி (லீலாவாக வந்தவர்) மிகவும் உதவியாயிருந்தார். கதாநாயகனின் தந்தையாக வந்த பொன்னுசாமி கவுண்டரின் பேச்சே அருமையாயிருந்தது. நாடகத்தின் தலைப்பை, ''Aமாறச் சொன்னது நாNo?'' என்று போட்டிருந்தது தவிர நாடகத்தில் வேறு பெரிய ஏமாற்றம் ஏதும் இல்லை. - காந்தன்


மாக்ஸ் ஃபாக்டர்
அளிக்கிறது ஆளவல்ல
ஆடவர்க்குப் புதிய
பாடி டால்க்
ஃபாக்டர் ஃபார் மென்
body talc
FACTOR FOR MEN
தாங்கள் தற்போது உபயோகிப்பதை விடச் சிறந்தது—
... இதய அரசியும் 'ஆம்' என்பாள்!
Shilpi MF 3/74 tam

சுந்தரத்தின் மந்திரம்!



ராஷ்டிரபதியிடமிருந்து திரு எஸ்.டி. சுந்தரம் விருது பெறுகிறார்.

நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையின் நாடகக் கம்பெனி அந்த ஊரில் முகாமிட்டுத் தொடர்ந்து பல நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தது. அந்த நாடகங்களுக்குச் சில பள்ளிச் சிறுவர்கள் தவறாமல் வந்து அமர்ந்து ரசித்துக் கொண்டிருப்பதை ராஜமாணிக்கம் பிள்ளை கவனித்தார்.

''எங்கே! உனக்குப் பாடத் தெரியுமா? ஒரு பாட்டுப் பாடு கேட்போம்!'' என்று அச்சிறுவர்களின் தலைவன் போல் தோன்றிய ஒருவனைக் கேட்டு உற்சாகப்படுத்தினார் நவாப். சிறுவன் கணீரென்று பாடத் தொடங்கினான். ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்குப் பின்னால் சங்கீத நாடக அகாதமி விருது பெறும் தகுதி அந்தப் பள்ளிச் சிறுவனிடம் அந்தக் காலத்தில் வித்திடப்பட்டது. அந்தச் சிறுவன் இப்போது நமக்கு நன்கு பரிச்சயமான கலைமாமணி கவிஞர் சுந்தரம் அவர்கள்தான்.

பள்ளிப் படிப்பை முறையாக முடித்துக் கொண்ட சிறுவன் சுந்தரத்துக்கு நவாப் ராஜமாணிக்கத்தினிடம் பக்தியே தோன்றி விட்டது. நாடகக் கலையின் எல்லாத் துறைகளிலும் அனுபவம் பெற, சிறுவன் தன் வீட்டாரின் அனுமதியுடன் அவருடைய நிறுவனத்தில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்கள், சிறுவன் சுந்தரத்தைப் பார்த்து 'உனக்கு எந்த வேடம் பிடிக்கும்?' என்று கேட்ட போது, சுந்தரம் தானாகவே 'மேக்கப்' போட்டுக் கொண்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியாக மலர்ந்தான். இன்றைக்கும் பாரதியின் அடிச்சுவட்டில் கவி மலர்களைப் புனைந்து கொண்டிருப்பவர்தானே சுந்தரம்? பல ஆண்டுகளுக்குப் பிறகு சமீபத்தில் தம்முடைய ஆதிநாள் குருவான நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களுக்குச் சுந்தரம் செலுத்திய நாடக அஞ்சலி பாராட்டும் வகையில் அமைந்து விட்டது. அந்த நாட்களில் நவாப் அவர்களின் சம்பூர்ண ராமாயணம் பிரசித்தமானது. இரவு பத்து மணிக்கு ஆரம்பமானாலும், அதிகாலையில் கிழக்கு வெளுக்கும் நேரத்தில்தான் பட்டாபிஷேகக் காட்சி நடக்கும். ரசிகர்கள் ஆடாமல், அசையாமல் அமர்ந்திருந்து ஆனந்தத்தில் மூழ்குவார்கள். ஏறத்தாழ அந்த ஆனந்த அனுபவமே நமக்குச் சமீபத்தில் மீண்டும் ஏற்பட்டது. கவிஞர் சுந்தரம் வானொலியில் சுமார் ஐந்து மணி நேரம் ஒலிபரப்பாகக்கூடிய சம்பூர்ண ராமாயணத்தைத் தயாரித்தளித்தார். தம் பாடல்களுடன் புகழ் பெறும் ஆசிரியர்களின் பாடல்களையும் சேர்த்துக் கொண்டு, ஜனரஞ்சகமாக, சீர்காழி கோவிந்தராஜன், டி. எம். சௌந்தரராஜன், திருச்சி லோகநாதன், ஏ. எல். ராகவன், டி. வி. ரத்தினம் போன்றவர்களைக் கொண்டு பாடச் செய்து ராவணனாக டி. கே. பகவதியை நடிக்க வைத்துத் தயாரித்தளித்தார். ஐந்து இரவுகளில் தொடர்ந்தாற்போல் ஒவ்வொரு மணி நேரம் வானொலியில் ஒலிபரப்பாயிற்று, இந்தச் சம்பூர்ண ராமாயணம்.

சுந்தரம் திருவையாறு தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தபோது கடைசி ஆண்டில் நாட்டில் சுதந்திரப் போராட்டம் தீவிரமாகப் பரவியது. அதில் கலந்து கொண்ட மாணவர் சுந்தரம் கைது செய்யப்பட்டார். உடல் நலம் பாதிக்கப்பட்டும் அவர் மன்னிப்புக்கேட்டு வெளிவரத் தயாராயில்லை. ஆனாலும் அன்றைய அரசாங்கம் சீக்கிரமே சுந்தரத்தை வெளியே அனுப்பி விட்டது. போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானவர் என்ற காரணத்தால் அவரால் கடைசி ஆண்டு தமிழ் வித்வான் பரீட்சை எழுத முடியவில்லை. இது ஒரு விஷயத்தில் நஷ்டமானாலும், வேறு வகையில் இந்தச் சிறைவாசம் ஒரு நல்ல லாபத்தையும் தேடிக்

மனிதனும் மிருகமும் நாடகத்தில் ஒரு காட்சி. சாரங்கபாணியும், எஸ். டி. சுந்தரமும்.



கொடுத்தது. சிறைவாசக் கொடுமையிலும் உடல் நலக் குறைவால் விளைந்த வேதனையிலும் அவர் உள்ளத்தில் விளைந்த கற்பனை வித்து தான் இரண்டு ஆண்டுகள் கழித்துக் 'கவியின் கனவு' என்ற வேகமும் வீரமும் நிறைந்த நாடக மரமாக வானோங்கி வளர்ந்தது.

இவருடைய 'கவியின் கனவு' நாடகம் சக்தி நாடக சபை மூலமாகத்தான் ரசிகர்களுக்கு அறிமுகம் ஆயிற்று. ராஜமாணிக்கம் பிள்ளையுடன் இருந்தவர்களில் சிலர், அவருடைய ஆசியுடன் வெளியே வந்து இந்த நாடக மன்றத்தைத் தொடங்கினார்கள். இதற்காக நாடகங்களைச் சுந்தரம் புதுக்கோட்டையில் ஓராண்டு காலம் தங்கி எழுதினார். புதுக்கோட்டையில் வறண்டுபோன ஏரிக்கரைப் பக்கத்தில் இந்த நாடக மன்றத்தினருக்கு ஜாகை. பாம்பு நடமாட்டம் அதிகம். ஒரு நாள் சுந்தரத்தின் படுக்கையில் ஒரு பச்சைப் பாம்பு வந்து படுத்துக் கொண்டது. அதைப் பார்த்த அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டது சுந்தரத்தின் தூக்கம். அப்புறம் சுமார் ஒன்றரை வருஷ காலம் தூக்கம் என்றால் என்ன என்று தெரியாமல் கண் மூட முடியாமல் தவித்தார் சுந்தரம்.

நாகப்பட்டினத்தில் 'கவியின் கனவு' நாடகம் சக்கைப் போடு போட்டது. திருச்சியிலிருந்தெல்லாம் ரசிகர்கள் ரயிலில் வந்து நாடகம் பார்த்தார்கள். சுவரொட்டி அடிக்க முடியாத பேப்பர் பஞ்ச காலம். காய்ந்து போன பெரிய வாழை இலைச் சருகுகளில் மையினால் எழுதி ஒட்டி விளம்பரம் நடந்தது.

இந்த நாடகத்தைத் தடை செய்ய வேண்டுமென்று பல பிரிட்டிஷ் அரசாங்க பக்தர்கள் கலெக்டருக்கு மனுச் செய்தார்கள். அப்போது தஞ்சாவூரில் கலெக்டராக இருந்தவர், "நானே இந்த நாடகத்தை இரண்டு மூன்று தடவை பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். இதை ஏன் தடை செய்ய வேண்டும்? ஒரே ஒரு காட்சியைச் சற்று மாற்றியமைத்தால் போதும்" என்று சொல்லி விட்டார்.

காந்திஜி அமரரானபோது 'மரண நதி' என்ற கவிதையை எழுதினார் சுந்தரம். அதை மனம் திறந்து பாராட்டி ரசிகமணி டி. கே. சி. அவர்கள் எழுதிய கடிதத்தை ஒரு பொக்கிஷமாகப் பாராட்டிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார். சுந்தரத்தின் இலக்கிய மந்திரத்தில் ரசிகமணியே கட்டுப்பட்ட போது மற்றவர்கள் எம்மாத்திரம்?

இத்தனை அனுபவமும் ஆற்றலும் பெற்ற கலைமாமணி, மணி விழாக் காணும் ஆண்டில் சங்கீத நாடக அகாதமி அவருக்கு விருது கொடுத்துப் பாராட்டியுள்ளது. தமிழ் நாடக ஆசிரியர் என்ற வகையில் முதல் தடவையாக வழங்கப்படும் இந்த விருது தமிழுக்குக் கிடைத்த விருது! பெற்றுத் தந்தவரைப் போற்றுவோம்.

— பட்டினத்தார்

ஒரு பருவக் குமரி வாட்டும் வறுமையின் காரணமாக வயதான ஒரு வாத நோயாளியை மணக்க நேர்வதும் பின்னர் ஓர் இளைஞனைப் பார்க்கும் போது அவள் மனம் சஞ்சலப்படுவதும் புதுமையான கதையே அல்ல. ஆனால் இந்தப் பழகிப்போன கதையை எழுதிய என். சங்கரன் நாயர் இம் மலையாளத் திரைப்படத்தை ஒரு புதுமைப் படைப்பாகத் தயாரிப்பதிலே தமது டைரக்ஷன் ஆற்றலைப் பூரணமாகக் காட்டியிருக்கிறார்.

குறைந்த 'டயலாக்', சிறந்த நடிப்பு, உயர்ந்த படப் பிடிப்பு இவை இப்படத்தின் சிறப்பியல்புகள்.

கதாநாயகி அனுபவம் மிக்க நடிகை ஷீலா.

கமலஹாஸன் அவள் மனம் சஞ்சலப்படக் காரணமாயிருந்த நாடோடி இளைஞன். குழந்தைத்தனமாகவும், குறும்புத்தனமாகவும், கடைசியில் மிகப் பொறுப்புடனும் அபாரமாக நடிக்கிறார்.

கணவனாக - எஸ்டேட் முதலாளியாக வந்து அருமையாக நடிப்பவர் திக்குரிசி.

மானசிக ஓட்டமாகவே திரைக் கதையைக்கொண்டு சென்றிருப்பது நன்றாயிருக்கிறது.

பாடல்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. பின்னணிப் பாடகர்கள் ஜேசுதாஸ், மாதுரி இருவரும் இதற்கான பாராட்டைப் பெறுகிறார்கள். எம். ஜே. வில்லியம்ஸின் ஒளிப்பதிவு திரைப்படத்தைப் புதுமைக் காவியமாகக் காட்டியிருக்கிறது.

வசனம் எழுதியிருக்கும் வி. டி. நந்தகுமார் மோனக் கவிதைக்கு இனிய மெட்டு அமைத்திருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். "விஷ்ணு விஜயம்" 'ஏ' படம் என்றாலும் விரசம் இல்லாத 'ஏ' க்ளாஸ் படம்.

—காந்தன்



மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை-

இன்க்ரிமின்* டானிக்

இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்...இப் பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பாள்... உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து, இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.





இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle சயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் சயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin syrup
VITAMINS B1, B6, B12
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
டிராப்ஸ் : 2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப் : 14 வயது வரையில்
Sista's INC-363 C/75 Tam



கட்சி மாறும் பட்சி
கதை: குட்டி கிருஷ்ணன்
படம்: "ராஜ்"
6
பத்தாயிரம் வாங்கிக் கொண்டு மீண்டும் பதவிக் கட்சியிலேயே சேர்ந்தான் பட்சி.
தவறு செய்தவர்களை மன்னிக்குமாறு ஏசு சொல்லவில்லையா? பிராடிகல்ஸன் பற்றிப் பைபிள் பேசவில்லையா?...
...எனவேதான் நானும் தம்பி பட்சியைப் பாசத்துடனும் நேசத்துடனும், அன்புடனும் பண்புடனும், நெகிழ்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும், களிப்புடனும் கண்ணியத்துடனும் வரவேற்று...
...சென்றதை மறந்து, இன்று அவர் நின்றதைக் கண்டு, அவரை நாம் வென்றதை எண்ணி, துரோகத்தைக் கொன்றதைக் கருதி....
...பச்சைத் துரோகிகளுக்கு அந்த வார்த்தையின் அர்த்தம் புரியாவிட்டால் கட்டப்பொம்மன் சரித்திரத்தைப் படித்துப் பார்க்கட்டும் என்று கூறி, தம்பி பட்சியை வருக வருக என்று வரவேற்று மாலை சூட்டுகிறேன்.
பட்சியின் நன்றியுரை:
திசை தப்பி நான் சென்றாலும் சீக்கிரமே உறவின் தசை உணர்ந்து திசையறி பட்டாம் போல் பதறி வந்து பசையென ஒட்டிக் கொண்டேன் என்றால்...
அதற்குக் காரணம் தந்தை யைவிடத் தாய்க்கழகமே மேல் என்பதை நான் உணர்ந்து கொண்டதுதான் என்றாலும் அதுவும் ஒரு காரணமே யொழிய அதுவே காரணமாகாது என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருப்பதைத் தெரிவித்துக் கொள்ளும் வேளையில்....


...நமது தலைவர் அறிஞர் திலகம், அறியாதார் காவலர், உலகமகா புலவர், எள்ளுக்குடி வீரர், லாட்டர், சிலேஷர், மூன்றுமவர் தான் முழு முதற் காரணம் என்பதைப் பணிவுடன் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பிக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருப்பதை....
நாட்கள் சென்றன. பதவிக் கட்சி பிரமுகர் பட்சியைத் தேடிப் பலர் வந்தனர்.
மெடிகல் காலேஜில் ஒரு ஸீட்... நீங்க தயவு பண்ணிறு....
உனக்கு எதுக்குப்பா அதெல்லாம்? டாக்டருக்குப் படிக்க வைக்க துன்னு ரொம்பச் செலவாகும்!
என்ன செலவானாலும் பாதகமில்லீங்க. பையன் படிப்புக்காகவே பத்தாயிரம் சேர்த்து வைச்சிருக்கேன்.
அப்படின்னா சரி, நாளைக்கு அதைக் கொண்டு வா, பார்க்கலாம்!
அத்தனையுமா?
சந்தேகமாயிருந்தா ஆயிரத்தை அப்புறம் கொடு; மிச்சத்தை அட்வான்ஸா கொடு!
மந்திரியிடம் காரியம் ஆகணும், எம். எல். ஏ யின் தயவு வேணும், என்று வருகிறவர்களிடமெல்லாம் தன் அரசியல் வியாபாரத்தை லாபகரமாகப் பட்சி நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், ஒரு நாள்....
டாய், நான் யாரு தெரியுதா?
நீ...நீ...
ஆமா, அன்னிக்கு உன்னை ரோட்லே மடக்கி பர்ஸைக் கழட்டுனேனே, அதே கேடி சொக்கப்பன் தான் நான்!

தொடரும்

மீண்டும் வரும் புதன் கிழமை!

"தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு."

அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் குரல். அவனுக்குப் பொருத்தமான பாடல். ஒவ்வொரு புதன்கிழமையும்தான் அவன் குரல் அந்தத் தெருவில் ஒலிக்கும். சைக்கிள் மணியை ஒரு கைத்தடியில் பொருத்தி அதன் துணையுடன் அவன் பிச்சை கேட்டபடி ஒவ்வொரு வீடாக வருவான். இந்த இந்த வீட்டில் இன்னார் இன்னார் இருக்கிறார்கள் என்பது அவனுக்கு அத்துப்படி. அது எப்படித்தான் அவ்வளவு சரியாக அவன் அனுமானம் அமையுமோ?

கைத்தடியை ஊன்றியபடியே மெதுவாகப் பாடியபடி சாலை ஓரமாக வருவான்.

ஏதாவது ஒரு புத்தம் புதிய சினிமாப் பாடல் அவன் வாயிலிருந்து கிளம்பும்.

வீட்டின் கதவு திறக்கும்போதே, "என்ன மாமி, சௌக்கியமா?" என்பான்.

"பாப்பா எப்படியிருக்கிறாள்?" என்பான்.

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள முக்கியமான புள்ளிகளைத் தெரிந்து வைத்துக் கொண்டு 'கரெக்ட்'டாகக் கேட்பான்.

அவன் வாரத்தின் மற்ற நாட்களில் எங்கே இருப்பானோ? எப்படி வாழ்வானோ? புதன் கிழமை மட்டும்தான் அவன் குரல் கேட்கும்.

அவனுக்குப் புதன்கிழமை பிச்சைக்காரன் என்றே பெயர் வைத்திருந்தார் சாம்ப மூர்த்தி.

" அப்பா !"

சாம்பமூர்த்தியின் நினைவுகளை மகன் சுரேனின் குரல் கலைத்தது.

அந்த நினைவுகளிலிருந்து மீள முடியாமல், அதில் மூழ்கிய மனத்துடன், 'என்ன?' என்று கேட்கும் பாவனையாகத் தம் மகனைப் பார்த்தார் அவர்.

"இந்தக் கோடை லீவில் என் நண்பர்கள் எல்லோரும் சேர்ந்து காஷ்மீர் 'ஜாலி டூர்' போறாங்க. என்னையும் கூப்பிடறாங்க....ஒரு கூட்டமாப் போறதனாலே செலவு கம்மி. ஆயிரம் ரூபாய் தேவைப்படும்....." மகனை நிமிர்ந்து பார்த்தார்.

அவன் ஆசைப்படுவதிலும் தப்பில்லை.... அவன் தகப்பனார் ஒரு பெரிய மில்லின் உதவி மானேஜர். தம் மகனை நண்பர்களுடன் காஷ்மீருக்கு அனுப்புவது ஓர் உலக அதிசயமல்ல! ஆனால் சாம்பமூர்த்தியைப் பொறுத்த வரையில் அது அதிசயம்தான்!

காரணம் அவருக்குத் திரைகளுக்குள் வாழத் தெரியவில்லை.

'மில்லில்' சம்பாதிக்க எத்தனையோ குறுக்கு வழிகள் இருக்கின்றன,.... 'ஆர்டர்' பிடிக்க வருபவர்களைத் தம் வசப்படுத்தி மில்லுக்குத் தேவையானதை விநியோகம் செய்யச் சொல்லி அதே சமயம் தம் 'தேவைகளை'யும் அவர் பூர்த்திசெய்து கொள்ளலாம்!

ஆனால் அவரால் அப்படி நடந்து கொள்ள முடியாததுதான் அவரிடம் உள்ள ஒரு பெரும் குறை — மற்றவர்களுக்கு! அவருக்கு....?

அது ஒரு 'பாலிஸி' !

மானேஜர் 'பிரமோஷன்' கூடிய சீக்கிரம் கிடைக்கும் என்று பேசிக் கொள்கிறார்கள். அப்படிக் கிடைத்தால்கூட ஐந்நூறு ரூபாய் வரும். அப்போது இது போன்ற சில அற்பத்தனமான மற்றவர்களின் ஆசைகளை ஓரளவு பூர்த்தி செய்யலாம்.

ஆனால் இப்போது...?

சுரேன் பேசவில்லை.... அப்பாவின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

"கல்யாணமானால் 'தேனிலவைக்' காஷ்மீரில் வைத்துக் கொள்ளச் சொல்லி வரப் போகிற சம்பந்திக்கு ஒரு 'கண்டிஷன்' போடட்டுமா?" தம் இயலாமையை நகைச்சுவை மூலம் தெரிவிக்க முயன்றார்.

சுரேன் அவருடைய நகைச்சுவையை ரசிக்கவில்லை !

அவர் எதிர்பார்த்ததுதான் !

அவர் இப்படியெல்லாம் வாழப் பழகிக் கொள்ளவில்லை. 'இது போன்ற 'குளுகுளு' ஆசைகளைத் தம்முள் வளர்த்துக் கொள்ளவில்லை!

அவரைப் பொறுத்தவரையில் அவர் நிம்மதியாகத்தான் இருக்கிறார்.

மனைவி வருகின்ற மெட்டி ஓசை கேட்டது.

அந்த ஓசையின் வலுவிலிருந்தே அவள் கோபம் அவருக்குப் புரிந்தது.



நினைப்படி உடுத்திக் கொள்ள அவள் கேட்ட பட்டுப்புடவைகளுக்குப் பதில் இரண்டு ஜரிகை போட்ட சுங்கடிப் புடவைகளை வாங்கித் தந்தது அவளுக்குக் கோபமோ! அவரால் சில அடிப்படைத் தேவைகளைத்தான் உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியும்! மற்றவர்களின் அதிகப்படியான ஆசைகளை அவரால் பூர்த்தி செய்ய முடியாத ஒரே காரணத்துக்காகச் சில மாதங்களாக அவரே 'அந்நியமாக்க'ப் பட்டு வருவதை அவர் உணர்ந்தார்.

ஆடம்பரங்களை அவரால் பூர்த்தி செய்ய முடியாது.

''பிரேமாவைப் பெண் பார்த்துவிட்டுப் போனுளே!.... அதைப் பற்றி முடிவு எடுத்தேளா ?''

மனைவியின் குரல் : அதில் கோபம், சோகம், வேதனை — முதலிய 'நவரசங்களும்' இழைந்தன.

''என்னல் செய்ய முடிஞ்சதுக்கு நான் 'லிஸ்ட்' கொடுத்துட்டேன்... அதுக்கு மேலே அவா ஒரு பெரிய லிஸ்டா தர்ரு. அதுவும் பையன் 'பாரின் டிரெயினிங்' போறதுக்கு 'டு அண்ட்ப்ரோவை' என்னைப் 'பேர்' பண்ணிக்கச் சொல்ரு : கிட்டத்தட்ட, 20,000 ரூபாய்... அது என்னல முடியாது ! எனக்குத் தேவையும் இல்லே.... கல்யாணத்துக்கே என் எஸ்டிமேட்டுக்கு மேலே பத்தாயிரம் அதிகம். இன்னும் ஓர் இருபதினுயிரம். என்னல் தாங்க முடியாது ! மாப்பிள்ளையை, 'பாரின்' அனுப்பிச்சுட்டு என்னை ரிஷிகேசம் போகச் சொல்றியா ?''

'' அதுலே என்ன தப்பு ? கணக்குப் பார்த்துப் பார்த்தே எல்லாத்தையும் குட்டிச் சுவராக்கிடுவேன் ?''

''ஆமாண்டி..... கணக்குப் போட்டுண்டு வாழறதுனலேதான் ஒரு குமாஸ்தாப் பையன் இன்னிக்கு மில் மானேஜர் ஆகியிருக்கேன்..... அதே கணக்கோட இருக்கிறதுனலேதான் பையனை டாக்டருக்குப் படிக்க வைக்கிறேன்.... பெண்ணை ஒரு கிராஜுவேட் ஆக்கி இருக்கேன்.....''

அவள் ஒரு நொடி நொடித்தாள்.

''நல்ல சம்பந்தம்.... அநியாயமா உங்க 'பாலிஸி'ங்கிற பேரால் நாசமாறது...பையன் பாரின் போறு.....''

''பத்திரமாத் திரும்பி வரணும்... அடுத்த படியா அவன் 'பாரின்' போயிட்டு வந்தாலும் அவனுக்கு இதே சம்பளம்தான் தரப் போறு ! சம்பந்தியா வரப் போறவன் ஓர் இளிச்ச வாயன்கிற நினைப்பிலே கேட்கிற பேரம் இது! நான் இதை அனுமதிக்கமாட்டேன்.''

''பைத்தியக்காரத்தனமா பேசறேளே.... நாளைக்கு நம்ம சுரேனுக்கும் இதே மாதிரி கேட்டுட்டா கணக்குச் சரியாப் போச்சு.... ஓர் இருபதினுயிரம் ரூபாய் கொடுத்தா..... இன்னெர் இடத்திலே அது வந்துட்டுப் போறது......''


''ஏண்டி.... நீ உன் பெண்ணுக்குக் கல்யாண ஏற்பாடு பண்றியா? இல்லே 'பிஸினெஸ்' பண்றியா ? வரதட்சிணைங்கிற பேரிலே பேரம் பேசறியா ? இஷ்டப்பட்டுக் கொடுத்தா வரதட்சிணை.... நாமா கொடுமைப்படுத்திக் கேட்டா வறட்டு அகம்பாவ தக்ஷிணை..... யாரோ பண்ணற தப்புக்காக...சம்பந்தி தன் பிள்ளைக்கு விலே பேசிறைதுக்காக, என்னையும் அதே தப்பைப் பண்ணச் சொல்றியா? இங்கே, பாரு என் பையனுக்குப் பெண்ணைக் கொடுக்கிறவா இஷ்டப்பட்டதைக் கொடுக்கட்டும்..... நான் அவனை டாக்டருக்குப் படிக்க வைச்சிருக்கிறேங்கிறதுக்காகவோ, அல்லது அவனுக்கு டிஸ்பென்சரி வைக்கக்கத் தரணுங்கிறதுக்காகவோ ஆயிரக்கணக்கா என்னலே பொய்ப் பேரம் பேச முடியாது...''

அவள் முணுமுணுத்துக் கொண்டு போய் விட்டாள் !

இன்னும் அவர் 'ரிடையர்டு' ஆவதற்குச் சில வருடங்கள் இருக்கின்றன. அப்போது கூட 'மானேஜ்மெண்ட்' விரும்பிஞல் அவருக்கு 'எக்ஸ்டென்ஷன்' தர முடியும் ! ஏன் இப்போதுகூட விரைவில் அவருக்கு மானேஜர் பதவி உயர்வு வரக் காத்திருக்கிறது ! அவரும் இரண்டு வருடங்களாகக் காத்திருந்தார்.

புதிதாக ஒரு செக்ஷன் ஆரம்பித்து வைத்த போது அதற்கு அனுபவம் மிகுந்த அவரைத் தான் மானேஜராகப் போடுவார்கள் என்று நினைத்திருந்தார்..... ஆனல் வெளியிலிருந்து

'விமலா ரமணி'



இரண்டாம் பேருக்குத் தெரியாமல், 'இண்டர்வியூ' பண்ணிப் புதிதாக ஒருவனைச் சேர்த்துவிட்டார்கள்.... அவனுக்கு அவரை விட ஐந்நூறு ரூபாய் சம்பளம் அதிகம்! பரவாயில்லை.... அவர் காத்திருந்தார்....

மானேஜர் பதவி வகித்தவர் ரிடையர்டு ஆன பிறகு அந்தப் பதவி தமக்கு வரும் என்று காத்திருந்தபோது வேறொரு 'பிராஞ்சி'ல் இருந்த ஒருவரை இங்கு மாற்றி அந்தப் பதவியைத் தந்து விட்டார்கள்!

மாதம் ஐந்நூறு ரூபாய் அதிகம் கிடைக்கக் கூடிய வாய்ப்பு ஒவ்வொரு வருடமாக இழக்கப்பட்டு வருகிறது!

இப்போது மீண்டும் அதேமாதிரி ஒரு சந்தர்ப்பம்!

இம்முறை..... ?

''சாம்பு..... !''

ஓ! நண்பன் யோகராஜ்! அவர் ஆபீஸ் மானேஜிங் டைரக்டரின் 'கிளப்' கிநேகிதர். மாலை ஆறு மணிக்கு மேல் அவர்கள் சஞ்சரிப்பதே ஒரு 'தனி உலகம்'!

யோகராஜ் — சாம்பமூர்த்தியின் கல்லூரித் தோழன்!

இன்னும் அவர்களுக்குள் அந்தப் பழைய நட்பின் இழை அறுந்து போகாமல் இருப்பது விந்தை!

இன்று..... ?

வரும்போது யோகராஜ் பரபரப்புடன் வந்தார்.......

''இதோ பார், சாம்பு.... உனக்கு ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன்..... உனக்கு இந்த வருஷமும் பிரமோஷன் போயிடும் போலிருக்கு.... நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்..... உன்னோட 'மானேஜிங் — டைரக்டரை' அவரோட வீட்டிலே போய்ப் பார்த்து நாலு வார்த்தை நல்லதா சொல்லு. அவ்வளவுதான் நீ செய்ய வேண்டியது! அவன் கிட்டே திறமை இருக்கலாம்.... அதுக்காக என்னை ஒரு 'கர்டிசிக்கா'க் கூட வந்து பார்க்காதவன்கிட்டே எனக்கு எப்படி ஒரு நல்ல எண்ணம் ஏற்பட முடியும்? — அப்படீங்கிறார்! உன்னோட திறமையிலே அவருக்குச் சந்தேகமில்லை.... 'பாலிஸி'ங்கிற பேரிலே நீ பிடிச்சிண்டு இருக்கியே, வறட்டுத்தனமான கொள்கைகள்! அவை மேலேதான் அவருக்குக் கோபம்.''

''யோகராஜ்! எனக்கு மட்டும் 'பாலிஸி' என்று ஒண்ணு இல்லாம இருந்திருந்தா அவர் 'மில்லே'ச் சுரண்டற எத்தனையோ பேரோட நானும் ஒருத்தனு இருந்திருப்பேன்........ தெரியுமா ?''

'' அதுக்காக ரொம்ப சந்தோஷப்படறார்..... ஆனால் உனக்குத் திறமை இருக்குங்கிறதுக்காக அவரை மதிக்கக் கூடாதுன்னு ஏதாவது இருக்கா என்ன? கடவுளே ஸ்தோத்திரப் பிரியர்தான்! நாமெல்லாம் சாதாரண மனுஷா! சொல்றதைக் கேளு... இதனாலே உன் 'பாலிஸி' ஒண்ணும் போயிடப் போறதில்லை.....''

ஒரு வாரம் ஓடிவிட்டது. நாளைதான் கடைசி நாள்! புதன்கிழமை!

இன்னமும் அவரால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.... மேலதிகாரியைப் பார்க்கப் போவது தவறில்லை என்றாலும் ஓர் 'அப்ளிகேஷனை' மனத்தில் வைத்துக் கொண்டு தற்செயலாகப் பார்க்கப் போவது போல் போவதுகூட ஒரு நடிப்புத்தானே? 'பாலிஸி'க்கு நடிப்பு எதற்கு?

வெகு நேரம் வரையில் சிந்தித்தபடி நடந்து கொண்டிருந்தார்.

'ரேஸ் கோர்ஸ்' சுற்று முடியப் போகிறது.....

'ரேஸ் கோர்ஸ்லி'லேதான் மானேஜிங் டைரக்டர் வீடு!

அந்தக் காம்பௌண்டில் நுழைவதா?.... இல்லை, நேரே தம் வீட்டுப் பாதையை நோக்கிப் போவதா?

''அட, படுபாவி..... ஏன் இப்படி நடுரோட்டிலே கிடந்து சாவறே? எழுந்திரு!'' ஒரு பெண் குரல்.

''சும்மா இட பிள்ளே.... பசி மயக்கம் கண்ணை உருட்டுது.....'' அவன் மெல்ல எழ முயன்றான்..... அவனைப் பிடித்தபடி அவள் சொன்னாள்.....

''இன்னிக்குச் செவ்வாய்க் கிளமையா இருந்தா என்ன?..பிச்சைக்குப் போன்னேன்.. நீதான் கேட்கல்லே....''


''நீ ஒரு பைத்தியம்.... எனக்குப் புதன் கிளமை பிச்சைக்காரன்னே பேரு... அந்த ஒரு நாளைத் தவிர மத்த நாள் வரமாட்டேன்கிற நம்பிக்கையிலேதான் என் குரல் புதன்கிளமை கேட்டவுடனேயே காசைத் தூக்கிட்டு அல்லாரும் எனக்குப் பிச்சை போட வர்றாங்க.... சொல்லப் போனா கிளமை மறந்து போனவங்களுக்கும்கூட என் கொரல் கேட்டா புதன்கிளமை வந்திடுச்சின்னு தெரியும்.... இந்த ஒரு நாளையப் பட்டினி ஒண்ணும் பண்ணாது புள்ளே...இப்படியே ராவைக் களிச்சுட்டா விடிஞ்சு போயிடும்.... மறுபடியும் புதன்கிளமை வரும்.... என்னைத் தேடிப் பிச்சை போட நல்ல மனசு உள்ளவங்க வருவாங்க... நம்பிக்கையோட காத்திருப்போம் பிள்ளே....''

''ஐயோ.... நீயும் உன் பேச்சும்....''

ஓ! அந்தப் புதன்கிழமை பிச்சைக்காரன்!

அவனுக்குக்கூட ஒரு 'பாலிஸி' இருக்கிறது! ஒரு திட வைராக்கியம் இருக்கிறது.

அவருக்கும் ஒரு பாலிஸி இருக்கிறது என் பதை வீடு நோக்கித் திரும்பிய கால்கள் தெரிவித்தன.



புதிய அனுபவம், பேரானந்தம்





ADROIT/925

செஞ்சுரி
பருத்தித் துணிகள்

செஞ்சுரி -100% பருத்தித் துணிகள்

தி செஞ்சுரி ஸ்பின். அண்டு மானுபு
கம். லிமிடெட், பம்பாய்-400 025

குழந்தை!

காலையில் மணி ஏழு அடித்தாகி விட்டது. இன்னும் குழந்தை படுக்கையைவிட்டு எழுந்திருக்கவில்லை.

சர்மா பாகீரதியைக் கூப்பிட்டார். "குழந்தை இன்னும் எழுந்திருக்கவில்லையே. உடம்பு சரியா யில்லையோ என்னமோ ? போய்த் தொட்டுப் பார்த்தாயோ?" என்று கேட்டார்.

" நீங்கள் சொல்லணுமா ? நானே போய்ப் பார்த்தேன். நேற்றுப் படுக்கப் போகும் போது பத்து மணிக்கு மேல் ஆகி விட்டது அல்லவா ? அதுதான் குழந்தை அப்படித் தூங்குகிறான்....." என்றாள் பாகீரதி.

நல்ல கோடைகாலம் அது. ஏழு மணிக்கெல்லாம் சூரியன் இஞ்செக்ஷன் ஊசியைப் போல் உடலைக் குடைந்தெடுத்தது.

ஆனால்கூட சர்மாவுக்கும் பாகீரதிக்கும் அவன் பச்சைத் தண்ணீரில் குளிக்க மனம் சகிக்காது. வெந்நீர் அடுப்பில் தளதளவென்று கொதித்துக் கொண்டிருக்கும்.

நகரத்தை ஒட்டிய கிராமம் அது. அவனுக்காகத் தனியாக ஒரு பசு அந்த வீட்டில் இருந்தது. அந்தப் பசுவின் பால்தான் அவனுக்கு ஒத்துக் கொள்ளும். குழந்தை குழந்தை என்று அவர்கள் அவனைக் கொஞ்சியது பேதைமையால் அல்ல. அவன் அவர்களுக்கு அத்தனை அருமை.

திருமணமாகிப் பத்து வருஷங்கள் முடிந்தும்கூடப் பாகியின் வயிற்றில் ஓர் அரும்புகூட விடவில்லை. நல்ல சொத்துள்ள மனிதர் சர்மா. அவர் பாகீரதியின் மேல் உயிரையே வைத்திருந்தார். ஆனால் சர்மாவின் தாயார் சும்மா இருக்கவில்லை. மறு கல்யாணத்துக்கு அவரை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். இன்னொர் இடத்தில் பெண்ணைப் பார்த்து வந்தார். நிச்சயதார்த்தம் செய்ய வேண்டியதுதான். அப்போது பாகீரதி, 'உண்டாகி' விட்டாள்.

சர்மா பிழைத்துக் கொண்டார். அவர் தாயும் பாகியின் மேல் அன்பைப் பொழிய ஆரம்பித்தாள். தன் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தருவித்த அந்தக் குழந்தையின் மேல் பாகீரதிக்கு மட்டும் பாசம் ஏற்படாமல் இருக்குமா ?

பக்கத்துத் தெருவில் இருந்த எலிமெண்டரி பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டியிருந்தது. அவன் கண் அசைவுக்கு ஓடியாடும் பணி ஆட்களாகத்தான் பெற்றவர்கள் இருந்தார்கள்.

ஒவ்வொரு வகுப்பிலும் குழந்தை இரண்டு வருஷங்கள் தங்கித் தங்கிப் படித்தான்.... "அவன் பாவம் குழந்தைதானே ! இத்தனை புஸ்தகங்களையும் மண்டைக்குள் திணித்துக் கொள்ளப் பாவம் அவனால் முடியுமா?" எனப் பரிந்து கொண்டு வருவாள் பாகீரதி.

அவன் படிப்பில் பின்தங்கியிருப்பதைப் பற்றிச் சர்மாவிடம் யாராவது சொன்னால் கூட அவர் லட்சியம் செய்வதில்லை. "அவன் குழந்தை சார்! உத்தியோகத்துக்கா போகப் போகிறான்? மூணு தலைமுறைக்கு வருகிறாற் போல் சொத்து இருக்கிறது. படிப்பு வராவிட்டால் என்ன?" என்பார்.

வருஷங்கள் உருண்டன. குளியல் அறைக்குள் போன குழந்தை குளித்த பிறகுதான் வேலைக்காரன் துண்டு எடுத்து வைக்கவில்லை என்பதை உணர்ந்தான். "மாரி, மாரி!" என்று வேலைக்காரனுக்குக் குரல் கொடுத்தான். வேலைக்காரன் பதில் கொடுக்க இரண்டு நிமிஷங்கள் பிடித்து விட்டன.

துண்டுடன் குளியல் அறையில் நுழைந்த மாரி அடுத்த கணம், "ஐயோ!" என்று அலறினான். 'உடனே வரவில்லை' என்ற கோபத்தில் குழந்தை அவன் முகத்தில் கொள்ளிக் கட்டையால் குத்தியிருந்தான். மாரி செய்த புண்ணியம் கண்களுக்குச் சேதமில்லை.

சர்மாவும் பாகீரதியும் குழந்தையை ஒரு வார்த்தை கோபித்துக் கொள்ளவில்லை. மாரியும் புகார் செய்யவில்லை. கன்னம் தீய்ந்தால் என்ன, முகமே கருகினால்தான் என்ன? சர்மா ஆயிரம் ரூபாய் காதும் காதும் வைத்தது போல் தந்தாரே — அது கிடைத்திருக்குமா ......?

பள்ளிப் படிப்பு முடிந்தது. பாஸ் செய்ததாகப் பெயர் பண்ணிவிட்டான் குழந்தை. அவனைக் கல்லூரிக்கு அனுப்பவில்லை. இருபது வயதாகச் சில மாதங்களே இருந்தன. ஆனால் அந்த வீட்டில் அவன் இரண்டு வயதுக் குழந்தையைப் போல் மதிக்கப்பட்டான்.

குழந்தை எழுந்திருந்தான். மணி எட்டரை ஆகியிருந்தது. அவன் பல் துலக்கிவிட்டுக் கூடத்துக்கு வந்தபோது ஒரு கூட்டமே எதிர் கொண்டது. சர்மாவும் பாகீரதியும் அவர்கள் நடுவில் நின்றார்கள் !

தலைவிரிகோலமாக நின்றவள் உள்ளூர் கணக்குப் பிள்ளையின் மனைவி. பக்கத்தில் ரௌத்திராகாரமாக நின்றவர் கணக்குப் பிள்ளை. ஓர் ஓரமாகச் சோகமே உருவாக விம்மியபடி கவனத்தைக் கவர்ந்தவள் அவர்களின் ஒரே பெண்.

கணக்குப்பிள்ளை உயர்ந்த சுருதியில் இரைந்து கத்திக் கொண்டிருந்தார். அந்தப் பெண் இரவு சினிமா பார்க்கப் பக்கத்து டவுனுக்குப் போயிருந்தாள். ஏதோ காரணம் படம் முடிய வழக்கத்துக்கும் அதிகமாக நேரம் ஆகிவிட்டது. குழந்தையும் அந்தத் தியேட்டருக்குப் போயிருந்தான். ஊர்க் கோடியில் பெண்ணின் துணைக்கு வந்தவர்கள் பிரிந்து விட்டார்கள்.

குழந்தையின் வண்டி அங்கே வந்தது. அவன் தானாக வண்டியை ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறான். அந்தப் பெண் மறுத்தும் வற்புறுத்தித் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டான். அந்தப் பெண் என்ன நடந்தது என்பதை அறியுமுன் வண்டி ஒரு தோப்பின் மறைவில் புகுந்தது. அங்கே குழந்தை குழந்தையாக நடந்துகொள்ளவில்லை!

குழந்தை இப்போதும் தலைநிமிர்ந்துதான் நின்றான். குற்றத்தை மறுப்பான் என்று ஒரு மயிரிழை நம்பிக்கை வைத்திருந்த சர்மா உண்மையை உணர்ந்தார். குழந்தையின் முகத்தில் அலட்சியம் இருந்தது. சர்மா இதற்கும் ஒரு சமாதானம் வைத்திருப்பார் என்ற நம்பிக்கை இருந்தது. கணக்குப்பிள்ளையால் என்ன செய்துவிடமுடியும்? சாட்சி யார்?

அவன் நம்பிக்கை வீண் போகவில்லை. சர்மா இதற்கும் ஒரு வழி வைத்திருந்தார். ''தப்புத்தான், பெரிய தப்புத்தான் ...நான் இதற்குத் தகுந்த பரிகாரம் செய்கிறேன். எங்களுக்குக் குழந்தைதான். ஆனாலும் உலகத்துக்கு அவன் வயது வந்த பிள்ளை.... உங்கள் பெண்ணுக்குப் பெருத்த அவமானம். அதை நான் துடைத்துவிடுகிறேன். அடுத்த முகூர்த்தத்தில் அவளை நான் என் மருமகளாக ஏற்றுக் கொள்கிறேன்!'' என்றார்.

பாகீரதியும் மறுத்துப் பேசவில்லை.

குழந்தைக்குத்தான் இது பேரதிர்ச்சியாக இருந்தது. ''முடியாது அம்மா, முடியாது... நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன்!''

'' என்ன?'' என்று சீறினார் சர்மா.


மாடிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த அவனது பனியனைப் பிடித்து அவர் இழுத்த வேகத்தில் பனியன் கிழிந்தது. அவன் கீழே விழுந்தான். அவன் எழுந்திருக்குமுன் இரண்டு கைகளையும் ஓங்கி ஓங்கிக் கண் மூடித்தனமாக அறைந்தார் சர்மா. பாகீரதி அலறினாள். குழந்தை துடித்தான். புகார் செய்ய வந்த கணக்குப்பிள்ளைகூடக் கலங்கிப் போனார்.

'' என் மகளின் தலைவிதி.... அவனும் சின்னப் பையன்.... கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்...'' எனக் கெஞ்சினார்.

''பொறுமையா...? இனிமேலா... ? இவ விடமா....? இவன் மிருகம். பச்சாத்தாபம் இல்லாத பேய்.... செய்த தவற்றுக்கு வருந்தாத இவன் மனித ஜன்மமே இல்லை. என் பிள்ளை இல்லை... இவன் என் பிள்ளை இல்லை!''


ஆத்திரம் துக்கமாக மாற அவர் விம்மி விம்மி அழுதார்.....

குழந்தைக்குப் புத்தி தெளிந்தது. ஊமையாக மாறி இழுத்த இழுப்புக்கு எல்லாம் அடி பணிந்தான். அடுத்த முகூர்த்தத்தில் பிள்ளையார் கோயிலில், சுவாமிக்குப் போட்டிருந்த மாலையையே மாற்றிக் கொண்டு அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.



''ஆமாம். அப்பா! முடியாதுன்னா முடியாது. ஆயிரமோ இரண்டாயிரமோ கொடுத்து விரட்டுங்கள்!'' எனத் திரும்பினான் அவன்.

சர்மா திகைத்துப் போனார். பெண்மைக்கு அவர் என்றுமே தம் மனத்தில் கொடுத்திருந்த மதிப்பு பேய் போல் அவரைப் பிடித்திருந்த குழந்தைப் பாசத்தை விரட்டியது. பாகீரதிக்குத் துரோகம் செய்யக் கூடாது என்ற காரணத்துக்காகத் தன் தாயையே விரோதிக்கத் துணிந்த அவர் நல்ல குணம் அவர் விழிகளை மூடியிருந்த அஞ்ஞானத் திரையைக் கிழித்து எறிந்தது.





தீவுகள்

இந்திரா பார்த்தசாரதி

6

கபூர் மணியைப் பார்த்தார். எட்டே முக்கால். படித்துக் கொண்டிருந்த செய்தித் தாளை மேஜை மீது விட்டெறிந்தார். காலைச் சிற்றுண்டி முடிந்துவிட்டது. ஆஃபீஸ் புறப் பட்டாகவேண்டும். ஆனால் 'நைட் கவுனு'டன் ஆஃபீஸ் போக முடியாது. உடைகள் அவருடைய அறையில் இருந்தன. உள்ளே மோகினி கதவை உட்பக்கமாகத் தாளிட்டுக் கொண்டு தூங்குகிருள். இன்னும் எழுந்திருக்கவில்லை. இரவு வெகுநேரம் கழித்து அவள் வந்தாள் என்று அவருக்கு ராகேஷ் மூலம் தெரியும். அவளைப் பார்க்காமலேயே வெளியே போவது என்பது வரவேற்கத் தக்க விஷயம்தான். ஆனால் உடை இல்லாமல் எப்படிப் போவது ?

''குட்–மார்னிங் டாடி'' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் அஞ்சலி.

''அம்மா எழுந்துவிட்டாளா, பார்...''

''அம்மாவா? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கட்டுமே? வீடு அமைதியாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா ?''

அஞ்சலியின் ஹாஸ்யத்தை ரஸிக்கும் முறையில், புன்முறுவலுடன் வந்தான் அஷோக்.

''நான் இப்பொழுது ஆஃபீஸ் போயாக வேண்டுமே? அவள் அறையை இப்படித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு தூங்கினுல், நான் என்ன செய்வது? 'டிரஸ்' வேண்டுமே!'' என்ருர் கபூர்.

''கதவைத் தட்டுங்களேன்'' என்ருன் அஷோக்.

''டிட்டோ !'' என்ருள் அஞ்சலி.



அப்பொழுது அங்கு ஓடி வந்த ரூபியைத் துரத்திக் கொண்டு, கையில் 'கார்ன் ஃப்ளேக்ஸ்' தட்டுடன் வந்தாள் விஜயா.

''சாப்பிடாமல் இப்படி ஓடி வருவதா, ஒரு சமர்த்துப் பெண்ணுக்கு அடையாளம்?'' என்று சொல்லிக் கொண்டே வந்த அவளைக் கபூர் கேட்டார். ''விஜயா...! நேற்றிரவு நீங்கள் என்னைத் தேடிக் கொண்டு எங்கே போனீர்கள்?''

விஜயாவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. மற்றவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இந்த வீட்டில் யாருக்குச் செல்வாக்கு அதிகம் உண்டு என்று அவளுக்குத் தெரியும்... அவளைப் பகைத்துக் கொள்வது விவேகம்தானா? —

'' நீ பதில் சொல்லவில்லையே?... எங்கே போனீர்கள், நீங்கள் இருவரும்?''

'' 'கிளப்'புக்குப் போனோம்.... அப்புறம்....'' என்று சொல்லிவிட்டு அவள் தயங்கினாள்.

''சொல்லேன்..... அப்புறம்?''

''ரத்தன்லாலைப் பார்க்கப் போனோம்... அவர்.......''

''யாரை? ரத்தன்லாலையா?'' என்று குரலில் அதிர்ச்சி வெளிப்படையாகவே தெரியக் கேட்டார் கபூர்.

''ஆமாம்.... வரும்போது கார் 'மக்கர்' செய்தது. அங்கேயே விட்டு வந்திருக்கிறோம்.''

''எங்கே?'' என்று வினவினான் அஷோக்.

''ரத்தன்லால் இருக்கும் அந்த விடுதி 'காம்பௌண்டி'லேயே....''

'' ரத்தன்லால் என்ன சொன்னான்?'' என்றார் கபூர்.

விஜயா பதில் சொல்லவில்லை. ரூபி வெளியே புல்வெளியை நோக்கி ஓடியதை அவள் பார்த்தாள்.

'' 'கார்ன் ஃப்ளேக்ஸ்' ஆறிப் போய்க் கொண்டிருக்கிறது. குழந்தைக்கு இதைக் கொடுத்துவிட்டு வருகிறேன்....''

''நீ ஏன் நம் வெளி உறவு இலாக்காவில் வேலை செய்யக் கூடாது? யூ ஆர் வெரி டிப்ளொமாடிக்.....'' என்று சொல்லிக் கொண்டே அங்கு வந்தான் ராகேஷ். விஜயாவின் முகம் நாணத்தால் சிவந்தது.

''போயும் போயும் அரசாங்கத்தில் வேலை செய்ய வேண்டும் என்று அவளுக்குத் தண்டனை கொடுக்கிறாய்?'' என்று கேட்டான் அஷோக்.

'' வாஸ்தவம்தான். மந்திரிகளைத் துரத்திக் கொண்டு ஃபைல் கட்டுகளுடன் போவதைக் காட்டிலும், குழந்தைகளுக்குப் பின்னால் 'கார்ன்



பிளேக்ஸ்' தட்டுக்களுடன் போவது மேல்'' என்றான் ராகேஷ்.

எல்லாரும் சிரித்தார்கள். இடரென்று திடுக்கிட்டுச் சிரிப்பதைப் பாதியிலேயே நிறுத்தினார்கள். அவர்கள் பார்வை, ஹாலிலிருந்து உள் அறைக்குப் போகும் கதவருகே, நிலைக் குத்தி நின்றது.

அங்கே.... மோகினி நின்று கொண்டிருந்தாள்.

'குட்மார்னிங்' என்று சொல்லலாமா என்று கபூர் ஒரு கணம் யோசித்தார். வேண்டாம் என்று தோன்றியது. அவர் எழுந்து அவளைத் தாண்டிச் செல்ல முற்பட்டார்.

''உங்களைத்தானே, இங்கே வாருங்கள்'' என்றாள் மோகினி.

''எனக்கு ஆபீஸ் போக வேண்டும்.... நேரமாகிறது.''

'' நேற்றிரவு ரத்தன்லாலுடன் எங்கே போயிருந்தீர்கள்?''

''இதற்கு நான் பதில் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை.''

''ரத்தன்லால் சொல்லிவிட்டான்.''

''ஆமாம். கஸல் கேட்க அவனுடன் ஜி. பி. ரோட் போயிருந்தேன். என்ன செய்யப் போகிறாய்?''

'ஜி. பி. ரோட்' அவள் உடம்பில் மின் சாரத்தைப் பாய்ச்சியதுபோல் திரும்பினாள்.

''அட பாவி....! உங்களுக்கு வெட்கம் இல்லை.....?''

''நாம் இருவருமே வெட்கப்படுவதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன. குழந்தைகள் எதிரில் பரஸ்பரம் நம் மரியாதையை நாம் போக்கிக் கொள்ள வேண்டாம்.''

''விஜயா..... சதீஷைக் கூப்பிடு'' என்றாள் மோகினி.

''எதற்காக சதீஷைக் கூப்பிட வேண்டும்?'' என்றார் கபூர்.

''அவன் நேற்று 'கிளப்'பில் என்னைப் பற்றி என்ன சொன்னான் என்று எனக்குத் தெரிய வேண்டும்.''

''அவன் சொன்னவற்றையெல்லாம் கேட்டால், அவமானம் உனக்கு மட்டும் அல்ல, சண்டை போட்டுக் கொண்டாலும் நாம் இருவரும் இணைபிரியாத் தம்பதிகள் என்ற போலி நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. குழந்தைகளுக்காகவும், வெளி உலகத்துக்காகவும் இந்தத் தொடர்புக்குப் பங்கம் வரவேண்டாம் என்பதுதான் என் அபிப்பிராயம்'' என்றார் கபூர்.

கபூரால் இப்படிப் பேச முடியும் என்று விஜயா எதிர்பார்க்கவேயில்லை. ரத்தன்லால் சொன்னது உண்மையாகி விட்டது. மோகினியால் இனி அவர் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது. பிள்ளையும் பெண்ணும் அருகில் இருக்கிற தைரியத்தில், ஒருவேளை, இப்படிப் பேசுகிறாரோ ? இல்லாவிட்டால், நேற்றிரவு ஏன் ராகேஷ் அறையில் தஞ்சம் புகவேண்டும்? மோகினியை நேருக்கு நேர் தனியாகச் சந்திக்கத் துணிவில்லாமல் ? —

''வெல்—டன் டாடி, வெல்—டன்'' என்று கை தட்டினாள் அஞ்சலி.

கபூர் தம் அறையை நோக்கிச் சென்றுவிட்டார். மோகினி மௌனமாகச் சோபாவில் போய் உட்கார்ந்தாள். அவள் பேசாமல் இருந்ததுதான் விஜயாவுக்குப் பயமாக இருந்தது. அவள் கண்களில் குரூரமான ஒரு நிட்சண்யம் தெரிந்தது.

வெளியே புல்வெளியில் விளையாடிக் கொண்டிருந்த ரூபியிடம் சென்றாள் விஜயா.

குழந்தை தனக்குத் தானே பேசிக்-கொண்டிருந்தாள்.

''யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டாள் விஜயா.

''கதை சொல்லுகிறேன்'' என்றாள் ரூபி.

''யாருக்கு?''

'' எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன்.''

''எனக்குச் சொல்லேன்'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் விஜயா.

''சொல்ல மாட்டேன்.''

'' ஏன்?''

'' பெரியவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை.''

''ஏன் ?''

'' நீங்கள் சண்டை போடத்தான் லாயக்கு.''

குழந்தை தனக்குத் தானே உருவாக்கிக் கொண்டிருக்கும் உலகில், 'பெரியவர்கள்' புகுந்தால், அவ்வுலகின் அமைதி கெட்டு விடும் என்று நம்புகிறாள். வாஸ்தவம்தான்.

கல்லூரிக்குப் போக ஆயத்தமாகப் பங்களாவை விட்டு வெளியே வந்தான் ராகேஷ். அவன் விஜயாவை நோக்கி வந்தான்.

'' என்ன ! கனவு கண்டு கொண்டிருக்கிறாயா ?'' என்று புன்னகையுடன் அவன் கேட்டான்.

''கனவா ?.... சோற்றுப் பிரச்னை உள்ளவர்களுக்குக் கனவு காண்பது போன்ற ஆடம்பரம் கட்டி வருமா ?''

''பணம் இருந்தால் கெட்ட சொப்பனம் தான் வரும். அதோ பார், அந்தப் பங்களாவில் நடப்பது கெட்ட சொப்பனத்தைத் தவிர, வேறு என்ன?'' என்றான் ராகேஷ்.

''பணந்தான் இதற்குக் காரணம் என்கிறீர்களா ?''

''வேறு என்ன? பணம் இல்லாவிட்டால் ஏற்படுவது பசி ஏப்பம். பணம் நிறைய இருந்துவிட்டால்.... மன அஜீரணந்தான்.... பொருளாதாரத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு வாழ்க்கையின் மதிப்புக்களை நிர்ணயிக்கும் சமூகத்தின் துர்ப்பாக்கியம் இதுதான்.......'' என்று சொல்லியவாறு அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

'' உங்கள் அம்மாவைப் பார்த்தால்.... எனக்கு அநுதாபந்தான் ஏற்படுகிறது..... உங்கள் அப்பா....'' என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் அவன் சொன்னான்! ''என் வீட்டில் உள்ளவர்களைப் பற்றி என்னிடம் பேசாதே..... ஐ ஹேட் தெம் ஆல்....''

'' நீங்களும் அந்தப் பங்களாவைச் சேர்ந்தவர்தானே ?''

''சேர்ந்தவனில்லை என்று எனக்கு நானே நிரூபித்துக் கொள்ளத்தான் உன்னை நாடி வந்து பேசுகிறேன். இதுதான் எனக்கு ஆறுதலாக இருக்கிறது.''

விஜயா திடுக்கிட்டுப் போய் அவனை ஏறிட்டு நோக்கினாள்.

சொந்த நாடு உனக்குத் தங்கத் தெ

— சோவியத் பழமொழி


ஒரு ரூபாய் மிச்சப்படுத்துங்கள்!
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
Godrej
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
Godrej
சிந்தால்
சோப் வாங்கும்போது
சிந்தால் பவுடர் விலையில் ஒரு
ரூபாய் மிச்சப்படுத்துங்கள் *
கூப்பன் அறிவிப்புடன் கூடிய சிந்தால் சோப் வாங்குங்கள். உறையின் பின் பக்கத்தில் ஒரு கூப்பன் இருக்கும். அதை உங்கள் டீலரிடம் கொடுத்து, ஒரு ரூபாய் தள்ளுபடியில் சிந்தால் டாய்லெட் பவுடர் (எந்த சைஸானாலும்) வாங்கிக் கொள்ளுங்கள்.
Save Re.1
COUPON ON REVERSE
OPEN WRAPPER CAREFULLY
Godrej
CINTHOL
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
இந்த வாய்ப்பை
நழுவ விடாதீர்கள்!
இன்றே முந்துங்கள்!
*ஸ்டாக்குகள் உள்ளவரையே இந்தச் சலுகை உண்டு
Interpub/GS/13/75 TM

சாக்கடையில் வரிப் பணம்!



இந்தத் தேசத்தின் நிர்வாகம் திறமையற்றதாகவும் லஞ்ச ஊழல் மிக்கதாகவும் மாறிவிட்டதால் அரசாங்கச் செலவினங்களில் கிட்டத்தட்ட நாற்பது சதவிகிதம் சாக்கடையில் போகிறது என்று கூறுவது மிகையாகாது.

திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதும் அந்நிதி எந்த அளவுக்குச் செலவாகிறது என்று பார்ப்பதுமே இது வரை நமது அபிவிருத்தி 'ஆற்ற'லாக இருந்து வந்திருக்கிறது. குறிக்கோள்கள் நிர்ணயிக்கப் படுகின்றன என்பது உண்மையே. ஆனாலும் நிதி ஒதுக்குவதும் செலவிடுவதுமே முக்கியமாகக் கருதப்படுகின்றன.

மின்சாரத் தட்டுப்பாடு மழை இன்மையாலும் நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்ததாலும் ஏற்பட்ட ஒன்றுதான் என்றாலும் தேசமெங்கும் அனல் மின் நிலையங்களில் காணப்படும் திறமைக் குறைவும் பெருமளவு காரணம். இவற்றில் பல அவற்றுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பாதி அளவு கூட மின் உற்பத்தி செய்யவில்லை.

— எச்.வி.ஆர். ஐயங்கார் (சுயராஜ்யா மலர் 1975)

"ஏன் இப்படிப் பார்க்கிறாய்?"

"ஒரு புதுப் பிரச்னை உருவாகிக் கொண்டிருக்கிறதோ என்ற அச்சம்."

"இது புதுப் பிரச்னையல்ல.... மிக மிகப் பழைய பிரச்னை..... ஆல் ஓல்ட் ஆஸ் ஆடம் அண்ட் ஈவ்" என்று சிரித்துக்கொண்டே சொன்னான் ராகேஷ்.

"ஆடம், ஈவ் காலத்தில் பொருளாதார ஜாதிகள் இல்லை. இன்ன மொழி, இன்ன இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஆடமோ, ஈவோ பச்சைக் குத்திக் கொள்ளவில்லை."

"அடிப்படைக் கேள்விக்கு நீ பதில் சொல்லி விட்டால் போதும்...... மற்றையப் பிரச்னைகளைப் பற்றி நீ கவலைப்படாதே."

"அடிப்படைக் கேள்வி எது?"

"என்னை உனக்குப் பிடித்திருக்கிறதா?"

"மற்றையப் பிரச்னைகளிலிருந்தும் வேறுபடுத்தி இந்தக் கேள்விக்குத் தனியாகப் பதில் சொல்ல முடியாது என்று தோன்றுகிறது."

"மற்றையப் பிரச்னைகளில் முக்கியமானது பொருளாதாரந்தானே? அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது...." என்றான் ராகேஷ்.

"'நீ அன்றாடம் காய்ச்சிதானே?.... பொருளாதார ஜாதியில் உயர்ந்தவன் நான், எனக்குத் தானே இதைப் பற்றித் தீர்மானிக்க உரிமை இருக்கிறது' என்கிறீர்களா? சமூகப் பாரம்பரிய உணர்வின் வாசனையோ என்னவோ, என் வீட்டிலும் இதற்கு அனுமதி பெறுவது என்பது சுலபமான காரியமல்ல.." என்றாள் விஜயா.

ராகேஷ் புன்னகை செய்தான்: "உன் சுய கௌரவத்தைப் பாதிக்கும்படியாகப் பேசியிருந்தால் மன்னிக்கவும். என்னைப் பொறுத்த வரையிலும் நீ விஜயா. உன்னைப் பொறுத்த வரையிலும் நான் ராகேஷ்.... இதைத் தவிர, வேறு நினைவுகளே வேண்டாம்.... என்ன சொல்லுகிறாய்?"

விஜயா பதில் சொல்லுவதற்குள், தங்களை நோக்கி மோகினி வருவதைப் பார்த்துத் திடுக்கிட்டு நின்றாள்.

ராகேஷ் திரும்பிப் பார்த்தான்.

"நீ கல்லூரி போகவில்லையா?" என்று கேட்டாள் மோகினி.

"விஜயாவிடம் பேச வேண்டும் போல் இருந்தது. வந்தேன்" என்றான் ராகேஷ்.

"எதைப் பற்றி?"

"எங்களுக்குள் எத்தனையோ இருக்கும். எல்லாவற்றையும் சொல்ல முடியுமா?" என்றான் ராகேஷ்.

"உங்களுக்குள் என்ன இருக்க முடியும்?" என்று குரலை உயர்த்திக் கேட்டாள் மோகினி.

"இவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஓர் இளைஞனுக்கு ஒரு பெண்ணை மிகவும் பிடித்திருந்தால் அவளைப் பார்த்து என்ன கேட்பான்? அதுதான் கேட்டுக் கொண்டிருந்தேன்."

மோகினி விஜயாவைச் சுட்டெரிப்பவள் போல் பார்த்தாள். விஜயாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. தனக்கு ஒன்றும் தெரியாது. ராகேஷ்தான் வலுவில் வந்து. பேசிக் கொண்டிருந்தான் என்று சொல்லலாமா?.....அவன் மீது குற்றம் சுமத்த அவள் மனம் ஒப்பவில்லை. இதற்கு என்ன காரணம்?... தனக்கும் அவனைப் பிடித்திருக்கிறது. அவன் எதிரே அற்பத்தனமாக இருக்கத் தனக்குப் பிடிக்கவில்லை. அதுதான் காரணம்.

"நீ இவ்வளவு கெட்டிக்காரப் பெண்ணா? கண்ணும் காதும் வைத்தாற்போல் மிக அமைதியாகத்தான் நாடகம் நடந்திருக்கிறது" என்றாள் மோகினி.

"அவள் மீது பழியைச் சுமத்தாதே..... நான்தான் காரணம். 'ஏழைப் பெண்... பணக்காரப் பையனுக்கு வலையை விரித்தாள்' என்று அசிங்கமான சொற்களையெல்லாம் வாரி இறைக்க ஆரம்பித்துவிடாதே.... இவளை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. கல்யாணம் செய்து கொள்ளவிரும்புகிறேன்."

"மை காட்! இவளையா?"

"எதற்குக் கடவுளைக் கூப்பிடுகிறாய்?.... இவளையேதான்."

"உனக்கு வெட்கமாக இல்லை, வீட்டுக்கு வேலைக்கு வந்த பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்கிறாயே?"

"இந்த வீட்டில் இத்தனை வருஷங்களாக உன்னுடன் இருந்ததற்கு வெட்கப்படாத நான், ஒரு நல்ல அழகான பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளுவதற்கு, எதற்காக வெட்கப்பட வேண்டும்?"

மோகினியின் முகம் சிவந்தது. வாய் துடித்தது. ஆனால் சொற்கள் உருப்பெறவில்லை. உடம்பு இலேசாக ஆடியது.

"மன்னிக்கவும்.... என்னால் உங்கள் இருவருக்கும்....." தயங்கினாள் விஜயா.

"அப்பன் ஜி. பி. ரோட் போகிறான்..... பின்னை வேலைக்காரியைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்கிறான். குடும்பப் பெருமை இப்படியா சந்தி சிரிக்க வேண்டும்...?" என்றாள் மோகினி.

"நான் முன்பே பல தடவைகள் வேலையை விட்டுப் போய் விடலாமா என்று நினைத்ததுண்டு. இப்பொழுது போய்த்தான் ஆக

வேண்டும் என்ற நிலைமை வந்துவிட்டது. போவதற்கு முன்னால், மிஸஸ் கபூர், உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன்..... உலகம் எல்லாருக்காகவும் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.''

விஜயா இவ்வாறு சொல்லிவிட்டு வாசலை நோக்கிச் சென்றாள். ராகேஷ் அவளைப் பின் தொடர்ந்து வேகமாக வந்தான். '' இப்படி ஓடிப் போவதுதான் உன் வீரமா ?''

''எனக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக நான் உங்கள் வீட்டில் அவமானப் பட வேண்டும் ?''

'' என்னை நீ இன்னுமா புரிந்து கொள்ள வில்லை ? நீ எங்கு போனாலும் நான் உன்னுடன் வருவேன்'' என்றான் ராகேஷ். அவன் இதைச் சொல்லும்போது அழுதுவிடுவான் போலிருந்தது.

அவளுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. தன் மீது இவனுக்கு அக்கறை சமீபத்தில் ஏற்பட்டிருக்க முடியாது. தான் வந்ததிலிருந்தே தன்னைக் கவனித்துக் கொண்டு வருகிறான் போலிருக்கிறது.

மோகினி அங்கு வந்தாள். '' உன் சம்பளத்தை வாங்கிக் கொண்டு போ. உன் பணத்தை ஏமாற்றினேன் என்ற கெட்ட பெயர் எனக்கு வேண்டாம்.''

''அவளைக் காப்பாற்ற எனக்குத் தெரியும். உன் பணத்தை நீயே வைத்துக் கொள்'' என்றான் ராகேஷ்.


''அவளை நீ காப்பாற்றப் போகிறாயா ? சீ... உன்னை போ'' என்று சீறினாள் மோகினி.

''மரியாதையாகப் பேசு.... இல்லாவிட்டால்,...'' என்று அவளை நெருங்கினான் ராகேஷ்.

(தொடரும்)


தலைப்பும் தவிப்பும் !





இரகசியம்! அதிசயம்!

திங்கள் தரும் தித்திப்பு



செர்ரி.

பிள்ளைகளுக்குப்
பிடித்தமானது.
சின்னஞ் சிறு
கிண்ணங்களில்
சிங்காரச் செர்ரி
ஒவ்வொருவருக்-
கும் ஒவ்வொன்று!


செவ்வாய் தரும் சிறப்பு:

அன்னாசி.

ருசிக்க ருசிக்க
ரசிக்கலாம்:
உற்றாருக்கும்
உறவினருக்கும்
உகந்தது.
உருசியின்
ஊற்று!



புதன் தரும் புதுமை



ராஸ்பெர்ரி.

ரசமான
ரத்தச் சிவப்பு.
என்றும்
எப்போதும்
உண்ணச
சிறப்பு!


வியாழன் தரும் விருந்து:

ஸ்ட்ராபெர்ரி.

பாட்டிமார்
ரசிப்பது;
பாப்பாவும்
பெரியவரும்
கூடப் புசிப்பது!



வெள்ளி தரும் அள்ளி:




ஆரஞ்சு.

அள்ளிப்
பருகும் சுவை
ஆரஞ்சுச்
சுளையுடன்
அருமையான
சுவை!


சனி தரும் கனி:

லெமன்.

இனிப்பும்
புளிப்பும்
தருவதில் எமன்
விருந்தினில்
மகிழ்ச்சியை
அளித்திடும்
மன்னன்



ஞாயிறு தரும் ஞாபகம்:



பழச்சுவை மிகுந்த செக்ஸ் ஜெல்லியை நினைக்க நினைக்க காவில் நீர் ஊறும்! க்ரீம் மற்றும் பாதாம் பருப்புடன் கலந்தால் சுவையோ சுவை! சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி போல.



புறம்போக்கு

யாராவது யார் மீதாவது குற்றம் சாட்ட வேண்டுமென்றால் அவர்கள் உபயோகப்படுத்துகின்ற வார்த்தை, 'பிற்போக்கு!' 'முற்போக்கு' என்றால் தீவிர வாதமாம்; 'பிற்போக்கு' என்றால் மித வாதமாம்!

இந்த அளவுகோலின்படி இன்று யார் முற்போக்கு, யார் பிற்போக்கு?

ஒருவரும் ஒரு கணக்கிலும் அடங்க வில்லை என்பதுதான் உண்மை!

தமிழ் நாட்டில் முதன் முதலாக 'அபேதவாதம்' என்ற தலைப்பில் சோஷலிஸத்தைப் பற்றி எழுதியவர் ராஜாஜி.

அப்போது அவர் முற்போக்கு!

எந்தத் திட்டமும் இந்திய மண்ணுக்கு ஏற்பச் செயல் முறைக்கு ஒத்ததாக இருக்க வேண்டுமென்று அவர் வாதாடத் தொடங்கியபோது திடீரென்று அவர் பிற்போக்காகத் தொடங்கி விட்டார்.

தொழில் துறையின் தேசிய மயம் பற்றித் தீவிரவாதம் பேசியபோது, நேரு முற்போக்காக இருந்தார்.

இந்திய மண்ணுக்குத் தேவையான கலப்புப் பொருளாதாரத்தை அவர் ஆதரிக்கத் தொடங்கியபோது, அவரும் பிற்போக்காகி விட்டார்.

அசல் பிற்போக்காளர் என்று வருணிக்கப்பட்ட அமெரிக்க பிரிட்டிஷ் நேச நாடுகளோடு சோவியத் யூனியன் கூட்டுச் சேர்ந்தபோது 'ஏகாதிபத்தியவாதிகளே முற்போக்குவாதிகள்' என்று அழைக்கப்பட்டனர்.

இந்திய ரூபாயின் மதிப்பைக் குறைத்தபோது இந்திரா, சி. எஸ்., அசோக் மேத்தா ஆகியோர் படு பிற்போக்காளராயினர்; காமராஜ் தீவிர முற்போக்காளரானார்.

1969ல் கட்சிக் கட்டுப்பாட்டை காமராஜர் வலியுறுத்தியபோது, அவர் மோசமான பிற்போக்காளராகவும், இந்திராவும் சி. எஸ்.சும் முற்போக்காளராகவும் மாறிவிட்டார்கள்!

1967ல் ராஜாஜியோடு சேர்ந்த போது, தி. மு. க. 'பிற்போக்குக் கும்பல்' என்று வருணிக்கப்பட்டது.

1971ல் இந்திரா காந்தியோடு சேர்ந்தபோது அதுவே முற்போக்குத் தீவிரக் கட்சியாகி விட்டது. — அதுவும் கம்யூனிஸ்டுகள் கண்ணோட்டத்தின்படி!

1967ல் தி. மு. க.வோடு சேர்ந்த மார்க்ஸிஸ்டுகள், தி. மு. க.வை 'முற்போக்கு' என்றும், 'இந்தியக் கம்யூனிஸ்டுகளைப் பிற்போக்கு' என்றும் வருணித்தார்கள்.

1971ல் தி. மு. க.வோடு சேர்ந்த இந்தியக் கம்யூனிஸ்டுகள், மார்க்ஸிஸ்டுகளைப் பிற்போக்காளர்கள் என்று சாடினார்கள்.

வெள்ளைக்காரனின் கண்ணில் விரலை விட்டு ஆட்டிய ஜெயப்பிரகாஷ் நாராயணனே பிற்போக்காளராகி விட்டாரென்றால், இந்தப் பட்டம் யாரை விடப் போகிறது?

என்னுடைய கணக்கில் இந்தியாவில் முற்போக்கு, பிற்போக்கு, நடுப்போக்கு முதலாளித்வ வாதம், சமதர்ம வாதம், பொதுவுடைமை வாதம் என்று எதுவுமே கிடையாது.

ஒரே ஒரு வாதம்தான் உன்னதமாகத் தலைதூக்கி நிற்கிறது; அதுதான் சந்தர்ப்ப வாதம்!

இன்றைய இளைஞர்கள் 'தாம் எந்த வாதம் பேசுவது' என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. பிரளயமே வந்தாலும் ஜெயப் பிரகாஷைப் போல் பிடிவாதமாக இருப்பதுதான் அவர்களுக்குப் பெருமை தரும்.

'ஏதாவதொரு வாதத்தைப் பின்பற்ற வேண்டுமே' என்று அவர்கள் அலைய வேண்டாம். அவர்களுக்கு 'எது சரி' என்று படுகிறதோ, அதை அவர்கள் பின்பற்றட்டும்.

அழுத்தமான தன்னம்பிக்கையுள்ள ராஜாஜி நம்மை விட்டு மறைந்துவிட்டார். நிர்வாகத்தில் கட்சிக்காரன் தலையிட முடியாதபடி ஆட்சி நடத்தியவர் அவர் ஒருவரேதான்.

அவருக்குப் பின்னால் நேர்மையிலும், நாணயத்திலும் நம்பிக்கையுள்ள காமராஜ் நம்மிடையே இருக்கிறார்.

காமராஜருக்குப் பின்னால் பொறுப் பேற்றுக் கொள்ள இருக்கும் இளைஞர்கள், முட்டாள்தனமான முற்போக்கு, பிற்போக்கில் கவனம் செலுத்தாமல், நாட்டுக்கு எந்த நேரத்தில் எது தேவையோ அதைச் செய்யப் பழகிக்கொள்வார்களாக.



Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



அழகு முகம்
ஒவ்வொன்றுக்குள்ளும்
அழகு ரகசியம்
ஒன்று
ஒளிந்திருக்கிறது.
CROOKES
Lacto-Calamine
உங்கள்
நோக்கம்
அழகாகத் தோற்ற
மளிப்பது. உங்கள்
சருமத்தை
அதற்கேற்ப
வைத்திருப்பது
க்ரூக்ஸ் லாக்டோ-
காலமைன்.
க்ரூக்ஸ்
லாக்டோ-காலமைன்

REGISTERED No. M. 4302
Registered as a Newspaper in Ceylon

PERKINS

P6-354 V

ALL YOU'VE EVER WANTED IN A VEHICULAR ENGINE





Power that remains unfailing throughout. Power that keeps the vehicle going all the time, very economically.



Internationally reputed for reliability, Perkins Diesel never lets you down.



Perkins has all that you have wanted in an engine for a transport vehicle.

Simpson & Co. Ltd

Head Office:
202/203, Mount Road, Madras-2

Branches:
Bangalore, Ootacamund, Tiruchirapalli, Secunderabad.

S-364